விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 032 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 12, திங்கட்கிழமை 28.12.2015



29°c - 26°c

மழை
தொடரும்

**மக்களால் புறக்கணிக்கப்பட்டவரல்ல தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள்**

வடக்கு முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு



பக். 02

# பொறுப்புக்கூறலுக்கு மார்ச் மாதத்துக்குள் விசேட நீதிமன்றம்

## விரைவில் நாடாளுமன்றுக்கு வருகின்றது விசேட சட்ட வரைவு

## சர்வதேச நீதிமன்றங்களில் கடமையாற்றிய இலங்கை நீதிபதிகள் நியமிக்கப்படுவர்

கொழும்பு, டிசெம்பர் 28

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கான உள் நாட்டு விசேட நீதிமன்றப் பொறிமுறை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது.

அத்துடன், குறித்த விசேட நீதிமன்றப் பொறிமுறையில் சர்வதேச நீதிமன்றங்களில் கடமையாற்றிய இலங்கை நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள் என அரசதரப்புப் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு விசேட நீதிமன்றம் அமைப்பதற்கான சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் செயல்முறைக்கு உள்ளக விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட பக். 25

> “எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இப்போதே செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது. யாரையும் திருப்திப்படுத்த பக்கச் சார்பான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்க முடியாது. பொறுப்புக்கூறல் விவகாரத்தை அரசு சரியாகக் கையாளும்.”

## மழை தொடரும் வாய்ப்புள்ளது

யாழ்ப்பாணம், டிசெ. 28

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக இன்று திங்கட்கிழமை மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்று மாலை தொடக்கம் குடாநாட்டின் பல இடங்களிலும் சுமாரான மழை பெய்துள்ளது. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக்காற்று தீவிரமடைந்துள்ளதனால் வடக்கு - கிழக்கில் காற்றின் வேகம் மணித்தி பக். 25

முச்சந்தி முரளி



அப்ப... இவைதானோ வெளிநாட்டு நீதிபதிகள்.

## நல்லிணக்க பொறிமுறைக்கு பொதுமக்களின் ஆலோசனை

### பெற்றுக்கொள்வதற்கு ஜனவரியில் இணையத்தளம் அமைக்கிறது அரசு

கொழும்பு, டிசெ.28

நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறையை அமைப்பதற்கு பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் பிரத்தியேக இணையத்தளமொன்றின் ஊடாக, இவ்வாறு பொதுமக்களிடம் கருத்துக்களைப் பெற்றுக்கொள் பக். 23

## அமெரிக்க கிறீன்காட் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளார் பொன்சேகா

### விசா மறுக்கப்பட்டதையடுத்து



கொழும்பு, டிசெ.28

அமெரிக்கா செல்வதற்கு விசா மறுக்கப்பட்ட நிலையில், வதிவிடஉரிமை (கிறீன் காட்) அட்டைக்கு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா மீள விண்ணப்பித்துள்ளார். பக். 25

## புலனாய்வு அதிகாரிகளிடம் கடத்தல் குறித்து விசாரணை

கொழும்பு, டிசெ.28

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் மற்றும் பிரபல வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக, முன்னாள் மற்றும் தற்போதைய இராணுவ மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பக். 25

## 24 படை அதிகாரிகள் அடுத்த ஆண்டு ஓய்வு

கொழும்பு, டிசெ.28

இலங்கை இராணுவத்தில் கடமையாற்றும் 46 மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளில் 24 பேர் அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

55 வயதுக்குப் பின்னர் மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளதையடுத்தே, இவ்வாறு 24 படை அதிகாரிகள் அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ளனர்.

அத்துடன், இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான, இராணுவத் தலைமை அதிகாரி பதவியைப் பிடிப்பதில், மூத்த இராணுவ அதிகாரிகளுக்குள் பனிப்போர் மூண்டுள்ளது.

இராணுவத்தின் தலைமை அதிகாரி பக். 25

# பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம்; நுணுக்கமாக ஆராய்கிறது அரசு

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலான புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து உயர் மட்டக் குழு நுணுக்கமாக ஆராய்ந்து வருவதாக, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், நீதி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து வருகிறது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதியதொரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சட்ட ஆணைக்குழு கேட்டுள்ளது.எனினும் அடுத்த மாத ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு என்றார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை சர்வதேச தரத்தில் நடைமுறைப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ)

# தாஜுதீனின் கொலைச் சந்தேகநபர் யாழ்.படை முகாமில் வைத்துக் கைது

## இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, டிசெ. 28

ரக்பி வீரர் வசிம் தாஜுதீனின் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணப் படைமுகாமில் கடமையாற்றிய கப்டன் விமலசேன என்பவரைக் கைதுசெய்துள்ளதாக இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த கப்டன் விமலசேன, முக்கிய அரசியல்வாதியொருவரின் வாகனச் சாரதியாகக் கடமையாற்றினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இராணுவத் தளபதி

இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணைகளின்போது, கப்டன் விமலசேன குறித்து தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம் ஒன்றில் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பக். 23

# தமிழ் மக்கள் பேரவையில் தமிழரசுக் கட்சி இல்லை

## மாவை எம்.பி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ் மக்கள் பேரவையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை என கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பிலேயே தான் கலந்து கொண்டிருப்பதாகத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சி.க. சிற்றம்பலம் தெரிவித்திருக்கும் நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டம், நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் நிறைவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, மக்கள் பேரவையில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழ்த்தேசியமக்கள் பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு குறைவு

*கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது*

கிளிநொச்சி, டிசெ.28
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் மழைவீழ்ச்சி அதிகமாகக் காணப்பட்ட போதும், இழப்புக்கள் குறைவடைந்துள்ளன. இதுபோன்ற திட்டங்களை வகுத்து எதிர்காலத்தில் வருகின்ற அழிவுகளில் இருந்து மக்களை பாது காக்க வேண்டும். - இவ்வாறு வடமாகாண அமைச் சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வட மாகாண இயற் கைப் பேரிடர் தணிப்பு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இயற்கை இடர்களைத் தடுக்க முடியாது. ஆனால் ஏற்படுகின்ற இழப்புக்களையும் சீற்றங்களையும் மட்டுப்படுத்த முடியும். இந்த இயற்கைப் பேரிடர் தணிப்புத் தின அரங்கானது இன்றுடன் முடிவ தில்லை. தொடர்ச்சியாக நடைபெறும் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்து எவ்வாறு மீட்டெடுப்பது பாதிப்புகளை கூடியளவு எவ்வாறு குறைப்பது இவை தொடர்பான அரங்கே இந்த இயற்கை பேரிடர் தணிப்பு தினம் ஆகும்.

இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய் என்ற கோட்பாட்டுக்கு இணங்க, இன்று நாம் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றோம். இது தொடர்பாக குழுக்களுக்கு பயிற்சிகள் வழங் கப்படவுள்ளன. இதன் மூலம் இழப்புக்களைக் குறைக்க முடியும்.-என்றார்.

(ந-ஜ-ரி3)

# மாணவர்களை சேர்ப்பதற்கு லஞ்சம் கோரும் அதிபர்கள்

*பெற்றோர்கள் குற்றச்சாட்டு*

கொழும்பு,டிசெ.28
அடுத்த ஆண்டு அரச பாட சாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது சில பாடசாலை அதிபர்கள் பெற் றோர்களிடமிருந்து லஞ்சமாகப் பணத்தொகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்று முறைமை யொன்றைக் கையாண்டுள்ள னர் என்று தெரிவிக்கப்படுகின் றது.

பாடசாலைக்கு அருகில் உள்ள கட்டடப்பொருள் வர்த்தக நிலைய மொன்றில் சில சிமெந்து மூடை களுக்குப் பணம் செலுத்திப் பணம் செலுத்திய அந்தப் பற் றுச்சீட்டைத் தம்மிடம் கையளிக் குமாறும் பெற்றோர்களுக்குப் பணிப்பதாக லஞ்ச ஆணைக் குழுவுக்கு தகவல்கள் கிடைத் துள்ளன.

அத்துடன் சில பாடசாலை அதி பர்கள் சிமெந்து மூடைகளுக்குப் பணம் செலுத்தப்பட்டுள்ள பற் றுச்சீட்டுக்கு, உரிய வர்த்தக நிலையத்துக்கு மாலை வேளை யில் சென்று சிமெந்துக்குப் பதி லாக அவற்றுக்குரிய பணத் தொகையைப் பெற்றுக்கொள் கின்றனர் எனவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே புதிய ஆண்டில் பாடசாலை களில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு, கல் வித்துறையில் உள்ள எந்த வொரு அதிகாரியும் இத்தகைய முறைகேடான செயல்களை மேற்கொண்டால், இரகசியமா கத் தமக்குத் தெரியப்படுத்து வற்கு முன்வருமாறு லஞ்ச ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை லஞ்சம் கோரி, அது கிடைக்காத பட்சத்தில் பிள்ளைகளைப் பாடசாலை களில் சேர்த்துக் கொள்வதற்கு மறுக்கும் பாடசாலை அதிபர் களை கைது செய்வது தொடர் பாக விசேடமான செயற்பா டொன்று நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

லஞ்சம் காரணமாக நிரா கரிக்கப்படும் பிள்ளையை, அதே பாடசாலையில் சேர்த்து விடுவதற்கு லஞ்ச ஆணைக் குழு தலையீடு செய்யும் எனவும், அத்தகைய முறைப் பாடுகளை முன்வைப்பதற்கு முன்வரும் பெற்றோர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக பொலிஸ் ஆணைக்குழு உறுதி யளித்துள்ளதாகவும் லஞ்ச ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

(ற-ஜ-22)

## வட மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கு முற்திகதி அடிப்படையில் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.28
வடமாகாணத்தில் 1998 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பட்ட தாரி ஆசிரியர்களுக்கு முற் திகதியின் அடிப்படையிலேயே பதவி உயர்வுகளை வழங்கு வதற்கு கல்வி அமைச்சு தீர்மா னித்துள்ளது.

அதனடிப்படையில் 15.07. 1998 நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு வருட பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் 15.07.1998 முற் திகதியிட்டு கடிதங்கள் வழங்கப் பட்டது.

தற்போது பதவி உயர்வு வழங் கப்படுவதற்காக நியமனம் வழங்கப்பட்டு முற்திகதியிடப் பட்ட திகதியின் அடிப்படையி லேயே பதவி உயர்வு வழங் கப்படவுள்ளது.

இதேவேளை மாகாண பொது நிர்வாக செயலகமும் முற்திகதி யின் அடிப்படையிலேயே 16. 07. 1999 நியமனதாரருக்கு பதவி உயர்வுகளை வழங்கி வருவதாக முதலமைச்சரின் பொது நிர்வாகச் செயலகம் அறிவித்துள்ளது.

(ற-ஜ-50)

## ஸ்ரீசண்முகானந்தா வித்திக்கு விருதுகள்

வட மாகாண கல்வி அமைச் சால் நடத்தப்பட்ட முதன்மைப் பாடசாலைகளிடையே மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கல்வயல் -ஸ்ரீசண்முகானந்தா வித்தி யாலயம் இரண்டுவெள்ளிப்பதக் கங்கள் உட்பட மூன்று பரிசில் களைப்பெற்றுக் கொண்டுள்ளது. கடந்த வாரம் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலையில் இடம்பெற்ற நிகழ் வில் இந்த விருதுகள் வழங்கப் பட்டுள்ளன என்று வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன் தெரி வித்தார்.

(ற-ஜ-9)

# மக்களால் புறக்கணிக்கப்பட்டவரல்ல தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள்

*வடக்கு முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 28
தேர்தலில் தோல்வி அடைபவர்கள் தீண்டத் தகாதவர்கள் என்ற கருத்து மறைய வேண்டும். தேர்தலில் தோற்றவர் தானே என்றெல்லாம் நாங்கள் எமது மக்களின் மாண்மை மறந்து அநாகரிகமாகப் பேச விழைவது இனியேனும் நிற்பாட்டப்பட வேண்டும். ஒருவர் தேர்தலில் ஒருமுறை தோற்றுவிட்டால், மக்கள் அவரை என்றென்றும் புறக்கணித்து விடுவார்கள் என்று அர்த்தமில்லை.


இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவை மக்கள் ஆணையைப் பெற்றபேரவை அல்ல. அந்தப்பேரவையிலுள்ள பலர் ஒவ்வொரு தேர்தலிலும் மக்களால் நிரா கரிக்கப்பட்டவர்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் நிராகரிக்கப்பட்டவர்கள். துவேசத் தைத் தூண்டக்கூடியவர்களுக்கு வசதி வாய்ப் புக்களை ஏற்படுத்திக் கொடுக்காது, அவர்களு டைய கையில் ஆயுதங்களைக் கொடுக்காது அந்தக் கருமத்தைப் பக்குவமாக நிதானமாகக் கையாள வேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந் தன் தெரிவித்துள்ள நிலையில், வடமாகாண முதலமைச் சர் நேற்று இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டம் யாழ். பொது நூலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் இணைத் தலைவர் முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் உரையாற்றுகையில் வடக்கு இதனைத் குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது, அவர் தனது உரையில் மேலும் தெரிவித் ததாவது:-

எமக்குக் கருத்துக்களே முக்கியம். கருத்துக்கள் எங் கிருந்து வரினும் அவை நன்மை பயப்பனவெனின் அவற்றின் கர்த்தாக்கள் யாவர் என்று பார்க்காமல் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. ஒரு மக்கள் இயக்கத்தில் மாற்றுக் கருத்துக்கள்தான் முக்கியம். எல்லாவிதமான கருத்துக்களும் ஆராயப்பட வேண்டும். நாம் வென்று விட்டோம். எனவே எமது கருத்துத்தான் சரி என்று நாம்



எண்ணுவது மடமை. ஆகவே கருத்துக்களுக்கு முதலி டம் கொடுப்பதே எமது கடப்பாடாகும் என்று கூறி வைக் கின்றேன்.

எமது மக்கள் இயக்கம் கருத்துக் கணிப்பில் தான் ஈடுபட முனைந்துள்ளது. தனி மனிதர்களின் தலைமையை நாங்கள் குறை கூறவில்லை. ஆகவே தமிழ் மக்கள் மட்டத்தில் ஒரு இணைத் தலைமைத்துவத் துடன் பரந்து பட்ட ஒரு மக்கள் இயக்கம் உருவாகின்றது என்றால் அது தெற்கில் உள்ள பலருக்கு வயிற்றைக் கலக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் எமது தமிழ் மக்கள் சிலரிடையே அப்பேர்ப்பட்ட ஒரு எதிர் மறையான கருத்து நிலவுவதுதான் மனவருத்தத்தைத் தருகின் றது.

தெற்கில் கட்சி எதுவாக இருந்தாலும் தமிழர்களுக்கு எதிரான அவர்களின் அடிப்படை எண்ணங்கள் பொது வானதாகவே இருந்து வந்துள்ளன. கட்சிகளுக்கு அப்பால் செல்ல வேண்டிய காலம் தற்போது உதித் துள்ளது. கட்சி வேண்டாம் என்று கூறவில்லை. கட் சிகளின் நிர்வாகம், ஒழுங்கமைப்பு, ஒழுக்கம், நோக்குகள் யாவையும் வெளிப்படைத்தன்மையுட னும் நிபுணத்துவச் செறிவுடனும் செயற்படுத்தப்பட வேண்டும். ஒருவேளை கட்சிகளினால் இதனைச் செய்ய முடியாதிருந்தாலும் அவற்றிற்குப் பக்கபல மாக நின்று பலதையும் அடியெடுத்துக் கொடுக்கும் வண்ணம் இந்தப் பேரவை செயற்பட இருக்கின்றது. -என்றார்.

இதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்த விடயங்களை ஆராய்வதற்கு 14 பேர் கொண்ட உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக் கள் பேரவையின் இணைத்தலைவர் மருத்துவ வல் லுநர் பி.லக்ஸ்மன் தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடல், அரசியல் தீர்வு தொடர் பில் ஒரு உப குழுவை அமைப்பதாக அமைந்தது. இதன்பிரகாரம் உப குழு ஒன்று அமைக்கப்பட்டுள் ளது. அதன் கட்டமைப்பில் வடமாகாண முதலமைச்சர் சார்பாக இருவரும், அரசியல் கட்சிகள் சார்பாக ஒவ் வொரு அரசியல் கட்சிகளும் இருவரை முன்மொழிந் துள்ளார்கள்.

மேலும் சமூக ஆர்வலர்கள் சார்பாக 5 நபர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். 14 பேர் கொண்ட குழுவினர் அரசியல் தீர்வு குறித்த விடயங்களைக் கையாள்வார்கள். அரசியல் தீர்வு குறித்து விஞ்ஞான ரீதியான ஆவ ணத்தை முன் வைப்பதே எமது நோக்கம். அத்துடன் 5 அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனை சபைகளும் அமைக்கப்படவுள்ளன என மருத்துவ வல்லுநர் பி.லக்ஸ்மன் குறிப்பிட்டார்.

(வ- 4,101,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சிப் பெயரை கேட்டதும் கடுப்பான சுரேஸ்

*செய்தியாளர்கள் மீதும் சீறிப்பாய்ந்தார்*

யாழ்ப்பாணம், டிசெ.28
தமிழ் மக்கள் பேரவையின் செய்தியாளர் மாநாட்டில், பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்திடம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவரைப் பதிலளிக்கவிடாமல், செய்தியாளர்கள் மீது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.



நேற்றுக் காலை யாழ். பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தின் முடிவில், செய்தியாளர் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது, தமிழ் மக்கள் பேரவை, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையா என செய்தியாளர் ஒருவர் இணைத்தலைவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த இணைத்தலைவர்களில் ஒருவரான மருத்துவ வல்லுநர் பி.லக்ஸ்மன் தமிழரசுக் கட்சி சார்பாக அந்தக் கட்சியின் உப தலைவர் சி.க.சிற்றம்பலம் இது தொடர்பில் பதிலளிப்பார் என்று தெரிவித்தார்.

இதையடுத்து கருத்து தெரிவித்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் , தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர், கட்சியின் நீண்ட கால உறுப்பினர், எனவே நான் அந்தக் கட்சி சார்பில் வந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

அவ்வாறெனின், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்க தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்றும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் அனுமதியுடன் தான் இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கிறீர்களா என்றும், பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்திடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்போது, அவரைப் பதிலளிக்க விடாமல் குறுக்கிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், இவ்வாறான கேள்விகளை நீங்கள் கட்சியின் தலைமை எனக் கூறுபவர்களையும், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களையும் தான் கேட்க வேண்டும். இவ்வாறான கேள்விகளை இங்கே கேட்காதீர்கள். அதனைப் போய் கட்சி அலுவலகத்தில் கேளுங்கள் என்று செய்தியாளர்கள் மீது சீறிப் பாய்ந்தார்.

(த-வ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த அணி தனித்துப் போட்டி

கொழும்பு, டிசெ.28
அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துக் களமிறங்குவதற்கு தினேஷ் குணவர்தன தலைமையிலான பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எனினும், கூட்டணி என்ற வகையில் அவ்வாறானதொரு தீர்மானத்தை இன்னும் எடுக்கவில்லை என அதன் பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக்கொண்டு பொது எதிர்க்கட்சியால் புதியதொரு கூட்டணி உருவாக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலில்எமது சிறிலங்கா சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணி அமைத்து பொது எதிர்க்கட்சி போட்டியிடவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் குறித்து வினவியபோதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

புதிய கூட்டணியை (எமது சிறிலங்கா சுதந்திர முன்னணி) அமைத்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து, எந்தத் தீர்மானத் தையும் நாம் இதுவரை எடுக்கவில்லை. ஆனால், அவ்வாறு செய்திகள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடாது தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக, பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் விரும்புகின்றன. நானும், தனித்துப் போட்டியிடுவதையே விரும்புகின்றேன். இருப்பினும், இது தொடர்பாக பொது எதிர்க்கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதன் பின்னரே நாம் முடிவெடுப்போம் என்றார்.

(வ-சி)

# சாட்டி பள்ளிவாசல் பாபா சமாதி விசமிகளால் உடைத்துச் சேதம்

*ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், டிசெ.28
வேலணை, சாட்டிப் பகுதியில் உள்ள பள்ளிவாசலில் இருந்த பாபா முகைதீனின் சமாதி நேற்றுமுன்தினம் பகல் வேளையில் இனம் தெரியாத விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வேலணை, மண்கும்பான் சாட்டிப் பகுதியில் உள்ள பள்ளிவாசலின் மௌலவி நேற்றுமுன்தினம்காலைபள்ளிவாசலில் இருந்து புறப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, நண்பகல் 12.30 மணியளவில் மீண்டும் பள்ளிவாசலை அடைந்துள்ளார்.

இவ்வாறு மௌலவி யாழ். நகர் சென்ற சமயம், குறித்த பள்ளிவாசலின் உட்புறத்தில் அமைந்துள்ள பாபா முகைதீனின் சமாதியினை இனம் தெரியாத விசமிகள் உடைத்துச் சேதம் விளைவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறையிடப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ -101)

# பதிவாளர் அலுவலகர்களுக்கு இன்றும் நாளையும் செயலமர்வு

அச்சுவேலி, டிசெ.28
யாழ் – மன்னார் மாவட்டங்களில் பிரதேச செயலகப் பிரிவு வாரியாகச் செயற்படும் பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு, இன்று திங்கட்கிழமை, நாளை செவ்வாய்க்கிழமை ஆகிய இரண்டு தினங்களுக்கும் யாழ்.மாவட்ட செயலகத்தில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இச்செயலமர்வு பி.ப.4 மணி வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகளின் பதிவாளர் அலுவலகத்துக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இரண்டு தினங்கள் நடைபெறும் இச்செயலமர்வை யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் ஆரம்பித்து வைப்பார். எனவே இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடபிராந்திய உதவிப் பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

(வ-11)

**கடை வாடகைக்கு** தொடர்பு 077 268 9442
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (Srilankan Insurance நிறுவனத்துக்கு முன்பாக) கடை வாடகைக்கு உண்டு.

**தவறி விட்டது** தொடர்பு 077 611 6308 077 134 9712
சீவரட்ணம் ஜெகவிந்தன் ஆகிய எனது தே.அ. அட்டை (840291227V) சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பல முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் ஒன்று சாவகச்சேரி நகரத்தில் இருந்து சங்கத்தானைசந்திக்கு இடைப்பட்ட தூரத் தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**விசேட பொதுக்கூட்டம்**
கப்புதூ நுணுப்பாவளை காட்டுக் கந்தசாமி தேவஸ்தான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் (29.12.2015) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.
ஆலய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
ஆலய பரிபாலன சபை.

## அவசரமாக கூடவுள்ளது டெங்கு ஒழிப்பு செயலணி

தேசிய டெங்கு ஒழிப்பு ஜனாதிபதி செயலணியை அவசரமாக கூட்டுவதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

டெங்கு நோயாளர்கள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிவதாக தெரிவித்து, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் பணிப்புரைக்கமைய இந்தத்தீர்மானம்மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு ஜனாதிபதி செயலணியை, எதிர்வரும் ஜனவரி மாதம் அவசரமாக கூட்டுவது குறித்து, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

(வ)

# ஜனாதிபதி செயலக அதிகாரிகள் பலரை நீக்க நடவடிக்கைகள்

ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் முக்கிய அதிகாரிகள் பலரை நீக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி 9ஆம் திகதி இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தின் கட்டுப்பாடும் அவருக்குக் கீழ் வந்திருந்தது.

எனினும் தனக்கு நம்பிக்கையான புதிய அதிகாரிகள் மூலம் ஜனாதிபதி செயலகத்தை நடத்திச் செல்வதற்குப் பதிலாக முன்னைய ஜனாதிபதி மகிந்த நியமித்திருந்த அதிகாரிகளைத் தொடர்ந்தும் அவர்களின் பதவியில் நீடிப்பதற்கு மைத்திரி இடமளித்திருந்தார்.

இதன்காரணமாக பல்வேறு அரசியல் மற்றும் அலுவலக நெருக்கடிகள் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் ஊழியர்களில் பெரும்பாலானவர்களை அந்தப் பதவிகளில் இருந்து அகற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளார். இதில் முக்கிய பதவிகளை வகிக்கும் ஒரு சிலரும் உள்ளடங்கியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளவுள்ள இந்த மாற்றத்தை அடுத்து, உடனடியாக பல புதிய அதிகாரிகள் ஜனாதிபதி செயலகத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015.12.27 | வெற்றி வாரம் 1921 | ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 03 05 27 59
செவ்வாய்க்கிழமை பரிசுப்பொதி ரூ 2,354,040 /-

Galaxy Star
வெற்றி வாரம் 20 திகதி 27.12.2015
09 23 26 30 48
அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 3,889, 380/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த தரப்பை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி மைத்திரி

*ஆறு பேரை அரசுப் பக்கம் மாற்றவும் பேச்சு*

கொழும்பு, டிசெ.28

பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும்மகிந்தஆதரவுஅணியைப் பலவீனப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் சூட்சுமமாக முன்னெடுத்து வருகிறார் என அறியமுடிகிறது.

இதன்படி, மகிந்த அணியிலுள்ள முக்கியஸ்தர்கள் சிலரை அரசுப் பக்கம் வளைத்துப் போடுவதற்குரிய பேச்சுகள் திரைமறைவில் இடம் பெற்று வருகின்றன. இதன் முதற்கட்ட நகர்வாக ஆறுபேருக்கு குறி வைக்கப்பட்டுள்ளது. அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு அவர்களும் பச்சைக்கொடி காட்டியுள்ளனர் என அரசியல் தரப்பிலிருந்து அறியமுடிகிறது.

இதில், பவித்ரா வன்னியாராச்சி, லக்ஷ்மன் செனவிரத்ன, மனு நாணயக்கார உட்பட மகிந்த அணியிலுள்ள ஆறுபேர் எதிர்வரும் 9ஆம் திகதி அரசுக்கு தமதுஆதரவைவழங்குவார்கள் என்றும், அவர்களுக்கு அமைச்சு, பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பவித்ரா வன்னியாராச்சி, மனு நாணயக்கார ஆகிய மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் இருவரும் பட்ஜட் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. லக்ஷ்மன் செனவிரத்ன பட்ஜட்டுக்கு சார்பாக வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிய அரசியல் கூட்டணியொன்றைஉருவாக்குவதற்குத் தாம் கடும் முயற்சியில் இறங்கியுள்ள நிலையில், அதைப் பலவீனப்படுத்துவதற்குரிய முயற்சியில் அரச தரப்பு இறங்கியுள்ளதால், மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் நாளை 29 ஆம் திகதி அவசரமாகக் கூடவுள்ளனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன. குறிப்பாக, அரசுக்கு ஆதரவு வழங்கவுள்ள உறுப்பினர்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், அரசமைப்பு மாற்றம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இங்கு பேசப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையில் முகாமைத்துவ
உதவியாளராக கடமையாற்றிய
பாலசுப்பிரமணியம்
வசிகரன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
நல்லூர் பிரதேச சபை
நண்பர்கள்

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய விஞ்ஞான பாட ஆசிரியர்
திரு.பாலகிருஸ்ணன் கோபிரமணா
அவர்களின் பாசமிகு தந்தையார்
ஆறுமுகம் பாலகிருஸ்ணன்
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம்

# செல்பி எடுப்பதற்கு ஆதிவாசிகள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.28

செல்பி மோகம் பட்டிதொட்டியெங்கும் பரவிவருகிறது. எங்கு சுற்றுலா சென்றாலும் செல்பி எடுப்பதற்கே பெரும்பாலானோர் ஆர்வம் காட்டிவரும் நிலையில், இந்த செல்பி மோகத்துக்கு இலங்கையின் ஆதிவாசிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தங்களைப் பார்வையிடுவதற்கு வருபவர்கள் தமது வரலாறு, கலாசாரம் என்பவை பற்றி அறிந்துகொள்வதற்கு ஆர்வம் காட்டுவதில்லை என்றும், மாறாக, புகைப்படம் எடுப்பதிலேயே குறியாக இருக்கின்றனர் என்றும் ஆதிவாசிகளின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோ கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஒருசில பகுதிகளிலேயே ஆதிவாசிகள் வாழ்ந்து வருகின்றனர். இதில் குறிப்பாக, மஹியங்கனை, தம்பான பகுதியிலேயே ஆதிவாசிகளின் தலைவர் இருக்கிறார். அங்கு அவர்களுக்குத் தனிக் கிராமமொன்றே இருக்கிறது.

மஹியங்கனை பகுதிக்குச் சுற்றுலா செல்பவர்கள் தம்பான பகுதிக்குச் செல்வதற்கு மறப்பதில்லை.

டிசெம்பர் மாதம் பாடசாலை விடுமுறைக் காலம் என்பதாலும், கிறிஸ்மஸ் பண்டிகை விடுமுறை என்பதாலும் மஹியங்கனை நோக்கிப் பலர் படையெடுத்த வண்ணமுள்ளனர். கடந்த நான்கு நாள்களில் மாத்திரம் ஆயிரக்கணக்கானோர் தம்பான பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் ஆதிவாசிகளுடன் படம் எடுத்து அதை முகநூலில் பதிவேற்றம் செய்வதில் கூடுதல் ஆர்வம்காட்டி வருகின்றனர். அதுவும் ஆதிவாசிகளுடன் செல்பி எடுத்துக்கொள்வதற்குப் போட்டிபோட்டுக்கொண்டு வரிசையில் நிற்கின்றனர்.

இந்த நிலையிலேயே தம்மைப் பார்வையிடவரும் சுற்றுலாப் பயணிகளின் இந்த நடவடிக்கையை ஆதிவாசிகளின் தலைவர் கடுமையாகக் கண்டித்துள்ளார். (வ-சி)

## சீனி, பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்படுமாம்

சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றுக்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச கட்டுப்பாட்டு விலை காரணமாக குறித்த பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக பட்ச கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்தின் காரணமாக, இறக்குமதி செய்யப்படுகின்ற விலையைக் காட்டிலும், குறைந்த விலையில் உள்நாட்டில் சந்தைப்படுத்த வேண்டி ஏற்படுகிறது. இதனை சமாளிக்க முடியாது என புறக்கோட்டை மொத்த விற்பனையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# கண்ணீர் அஞ்சலி

## பரமேஸ்வரராசா யோகருபகுமார்



எங்கள் குமார் அண்ணா,
நீங்கள் மரணித்தது ஒரு நிமிடம்,
ஆனால் உங்கள் நினைவால் நாங்கள்
ஒவ்வொரு நிமிடமும்
மரணித்துக்கொண்டிருக்கின்றோம்.......
ஓயாது உங்கள் நினைவுகள்........

அண்ணா உங்கள் ஆத்மா சாந்தி
அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மண்ணில்:
13.10.1972

விண்ணில்:
26.12.2015

ஓமான் வாழ் நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேக நெடுஞ்சாலை நெரிசலை குறைக்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ.28
நீண்ட விடுமுறையின் பின்னர் தெற்கு அதிவேக பாதையால் வீடுகளுக்குச் சென்ற வாகனங்கள், அதே பாதையால் எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் திரும்புவார்கள் எனவும், இதன் போதும் வாகன நெரிசல் ஏற்படலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதனைத்தடுப்பதற்கான மாற்றுவழியாக கஹதுடுவ நுழைவாயில் மற்றும் அதுருகிரிய நுழைவாயில் என்பவற்றைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ற)

# முன்னைய அரசு போன்றே இந்த அரசும் செயற்படுகிறது

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.28
முன்னைய அரசைப்போன்றே தற்போதைய அரசும் செயற்படுகிறது என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.
அரசு பதவியேற்றதன் பின்னர் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன என்று அவர் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.
முன்னைய அரசைப்போன்றே இந்த அரசும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தமிழ் மக்களின் வாழ்க்கையைகட்டியெழுப்பும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
முன்னைய அரசு மதவாதம், இனவாதம் உட்பட்ட பல நாசகாரதிட்டங்களைமுன்னெடுத்து வந்தது. இந்த அரசு அவ்வாறான திட்டங்களை ஊக்குவிக்கவில்லை. அது பாராட்டப்பட வேண்டிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
எனினும் முன்னைய அரசைப் போன்றே இந்த அரசாங்கத்திலும் ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடுத்த மார்ச் காலக்கெடுவுக்கு முன்னர் இலங்கை அரசும், சபையின் நிபந்தனைகளை பூர்த்தி செய்து விடுமா என்பதில் இன்னும்முன்னேற்றம் இல்லை. எனினும் அதனை நோக்கிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை வரவேற்கின்றேன் என்றுஅவர்தெரிவித்துள்ளார்.(ற)

# ஹிருணிகா தொடர்பில் ஆராயவுள்ளது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 28
அண்மையில் தெமட்டகொடவில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவத்துடன், ஹிருணிகா சம்பந்தப்பட்டுள்ளாரா என்பது குறித்து ஐக்கிய தேசிய கட்சி ஆராய்ந்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.
குறித்த சம்பவம் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அதே வேளை, அவரது தந்தையான காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் பாணியில் ஹிருணிகா செயற்படுகின்றார் என்று பலத்த விமர்சனங்கள்முன்வைக்கப்படுகின்றன.
இந்தநிலையில் விரைவில் இது குறித்துஐ.தே.க. கூடிஆராயவுள்ளது என்று கட்சியின் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.
கடத்திச் சென்று தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் அண்மையில் தெமட்டகொட மேம்பாலத்திற்கு அருகில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஹிருணிகாவுக்குச் சொந்தமான வாகனத்தில் அவரது மெய்ப்பாதுகாவலர்களே இந்த கடத்தலை மேற்கொண்டுள்ள நிலையில், தமக்குத் தெரியாமல் தமது மெய்ப்பாதுகாவலர்கள் இதனைத் செய்துள்ளனர் என்று ஹிருணிகா குறிப்பிட்டிருந்தார்.
எனினும் கடத்திக்கொண்டு வந்த பின்னர், ஒரு குடும்பத்தின் நலன் கருதி அவர்களை ஒன்றிணைப்பதற்காக தாம் அச்சுறுத்தும் விததத்தில்நடந்துகொண்டதாகஹிருணிகா ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தார்.
இந்த நிலையில், குறித்த கடத்தல் சம்பவம் குறித்து சில தொலைபேசி இலக்கங்களை ஆதாரமாக கொண்டு விசாரணை நடத்தப்படவுள்ளன என்றுபொலிஸார்தெரிவிக்கின்றனர்.
எனினும், பட்டப்பகலில் இவ்வாறான ஒரு செயல் இடம்பெற்றமையின் பின்னணியில்ஹிருணிகாஉள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிரணியினர் தெரிவித்து வருகின்றனர். (ற)

# சர்வதேச தலையீட்டால் இலங்கைக்குப் பாதிப்பு

## விமல் வீரவன்ச கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.28
சர்வதேசத்தின் தலையீட்டால் இலங்கைக்குப் பெரும் அபாயம் ஏற்படும் வாய்ப்புள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
ஐரோப்பா சென்றுள்ள விமல் வீரவன் பேர்லினில் இடம்பெற்ற இலங்கை மக்களுடனான சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
குறிப்பாக வெளிநாட்டு நீதிக் கொள்கைசார் நீதிமன்றம் இலங்கையில் அமைக்கப்படுவது, நீதியற்ற செயல் என்று அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.
சர்வதேச நீதிவான்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் வழிகாட்டலின் பேரில் இலங்கையில் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நாவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
இந்தச் செயலானது வெற்றியை பெற்றுத்தந்த இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதாக உள்ளது. அவர்களுக்குத் தண்டனை பெற்றுத்தரும் வகையில் அமைகின்றது என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ற)

# தந்தங்களை அழிக்காது விகாரைகளுக்கு வழங்குக

## அபயதிஸ்ஸ தேரர் வேண்டுகோள்



கொழும்பு, டிச. 28
உலக சுங்கத் தினத்தை முன்னிட்டு எரித்து அழிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள சுமார் 1.5 தொன் எடையுடைய யானைத் தந்தங்களை விகாரைகளுக்கு வழங்குமாறு மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
2012ஆம் ஆண்டு கென்யாவிலிருந்து கொழும்பு ஊடாக துபாய்க்கு கடத்தப்பட்டபோது, இலங்கை சுங்கத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்ட சுமார் நானூறு மில்லியன் ரூபா பெறுமதியான தந்தங்களை உலக சுங்கத் தினமான எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முன்னால்தீயிட்டு எரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
எனினும், இவை பாதுகாக்கப் பட வேண்டிய சொத்துக்கள் [illegible] வாய்ந்தவை என்பதாலும் அவற்றை அழிக்காது விகாரைகளுக்கு வழங்குமாறும், இல்லாவிட்டால் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பயன் படுத்துமாறும் தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கடத்தப்படும்போது கைப்பற்றப்படும் இவ்வாறான அதிகளவான யானைத் தந்தங்களை நாட்டில் வைத்திருக்க முடியாதென்றகாரணத்தாலேயே அவற்றை அழிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அரசதரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ற)

# வரவு - செலவுத் திட்ட உண்மை 3 மாதங்களில் வெளியாகும்

## உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு, டிசெ.28
வரவு - செலவுத் திட்டத்தின் உண்மை நிலைமை எதிர்வரும் மூன்று மாதங்களில் அம்பலமாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
வரவு – செலவுத் திட்டத்தில் திருத்தங்களை செய்ததன் மூலம் அரசின் பலவீனமான பொருளாதாரக் கொள்கை முழு உலகுக்கும் வெளிச்சமாகியுள்ளது.
எதிர்வரும் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் அரசின் வரவு செலவுத்திட்டம் பற்றி மக்கள் அறிந்துகொள்வார்கள்.
வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம்வாசிப்புமீதானவிவாதத்தில் திருத்தங்கள் செய்ய முடியும் என அரசு தனது பிழைகளை மூடி மறைத்துக்கொள்ள முயற்சிக்கின்றது.
கடந்த அரசு எதேச்சாதிகாரப் போக்கில் செயற்பட்டது என்றும் வரவு – செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் செய்யவில்லை எனவும் தற்போதைய அரசு குற்றம் சுமத்தியுள்ளது.
உண்மையில் இந்த முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் குறைபாடுகளை மூடி மறைக்கவே இவ்வாறு அரசு கடந்த அரசின் மீது குற்றம் சுமத்தி வருகின்றது.- என்று தெரிவித்துள்ளார். (ற)

குழந்தை பராமரிப்பதற்த பெண் வேலையாள் தேவை
வீட்டில் தங்கியிருந்து குழந்தை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை. வயது 40 -50
குடும்ப பொறுப்புகளற்றவர் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 356 5155
(67143)(13.15)

தேவை
தொடர்பு:
077 169 0801
021 221 2905
பேக்கறி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
குமார் வெதுப்பகம்
பாசையூர், யாழ்ப்பாணம்.
(67144)(13.15)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
சுகனியா கணேசலிங்கம்
(LL.B) சட்டத்தரணி
14.12.2015 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த சுகனியா கணேசலிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், மாமா,மாமி.
21, சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 116 பரவைக் கடல்கள் விருத்தி செய்யப்படும்

கொழும்பு, டிசெ.28

இலங்கையில் அமைந்துள்ள 116 பரவைக் கடல்களை அபிவிருத்தி செய்வதற்கு மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த சமரவீர விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக மீன்பிடி மற்றும் நீரியல்வளங்கள் அபிவிருத்தித் திணைக்களத்தில், பரவைக்கடல் முகாமைத்துவம் எனும் பெயரில் விசேட பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் சுற்றுலாத்துறை பலமடைவதே, இலங்கையின் எதிர்கால எதிர்பார்ப்பு. இதற்கமைவாகப் பெருந்தொகையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வது தொடர்பாக தற்போது நாடுகளிடையே மாத்திரமல்லாது, மீனவர் சமூகங்களிடையேயும் அதிக போட்டி இருப்பதால், பரவைக்கடல் போன்ற இடங்களில் மீன் களை வளர்ப்பதன் மூலம் வருமானம், புதிய வேலை வாய்ப்புக்களும் ஏற்படும்.

தற்போது நீர்கொழும்பு, சிலாபம் , கொக்கலை மற்றும் கொக்கிளாய் ஆகிய ஐந்து பரவைக் கடல்களின் விருத்திக்கு குழுக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு, அந்தப் பரவைக் கடல்களின் எல்லைகளை நிர்ணயிக்கும் செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டில் 30 பரவைக் கடல்களின் எல்லைகளை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-22)

# மருதங்கேணியில் இன்று விழிப்புணர்வு ஒத்திகை

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப்பயிற்சியும் இன்று மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த முன்னேச்சரிக்கை ஒத்திகை நிகழ்வுகள் மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவின், செம்பியன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த ஒத்திகைப் பயிற்சியினைக் கண்டு மக்கள் குழப்பமடைதல் வேண்டாம். இது ஒரு ஒத்திகை நிகழ்வாகவே மேற்கொள்ளப்பட உள்ளதால், கிராம மக்கள் தம்முடைய இணைச் செயற்பாட்டை வழங்குமாறும் யாழ்.மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (வ- ரி5)

## கண்ணீர் அஞ்சலி

**பாலசுப்ரமணியம் வசீகரன்**
(முகாமைத்துவ உதவியாளர் - வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை- புத்தூர்)



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் அல்வாய் தெற்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பாலசுப்ரமணியம் வசீகரன் அவர்களின் பிரிவுச்செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை, புத்தூர். (சி/28155)(11,15)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 02 . 1949



மறைவு
31 . 12 . 2012

**அமரர் நடராசா முருகதாசன்**
(உரிமையாளர் – விநாயகர் ஸ்ரோர்ஸ், கைதடிச் சந்தி)
திதி: திருதியை

அயராது எமக்காக உழைத்த அன்புத் தந்தையே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
இங்கு உங்கள் அன்பை நாம் இழந்து தவிக்கின்றேம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈசனை வேண்டுகின்றோம்....

கைதடி கிழக்கு,
கைதடி. (87069) (11.15) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு
03 . 08 . 1940



உதிர்வு
28 . 11 . 2015

**அமரர் டேவிட் சின்னத்துரை**

இவரது ஆன்மா இளைப்பாற்றிக்காக 28.12.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அன்னாருக்காக பிரார்த்திக்கும்படி வேண்டிக் கொள்வதுடன், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சூசையப்பர்கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# உழவு இயந்திர ரயர் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது

முல்லைத்தீவு, டிசெ.28

உழவு இயந்திரத்தின் ரயர் திருடிய குற்றச்சாட்டில் விற்பனை செய்தவர் உட்பட மூவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஒருவர் நெடுங்கேணியில் இருக்கும் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் உழவு இயந்திரத் தைப் பெட்டியுடன் தரும் படி கேட்டுள்ளார். தனது வயலில் வேலை செய்துவிட்டு திருப்பி தருவதாகக் கூறியே அவர் அந்த உழவு இயந்திரத்தைக் கேட்டுள்ளார்.

உழவு இயந்திரத்தின் உரிமையாளரும் இதற்குச் சம்மதித்து, உழவு இயந்திரத்தை வழங்கியுள்ளார். உழவு இயந்திரத்தைப் பெற்றுச் சென்றவர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த பெட்டியின் பின்பக்க ரயரைத் திருடியுள்ளார்.

அதன் பின்னர் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த இன்னொருவரிடம் ரயரை வைத்துக் கொண்டு பணம் தரும்படியும் கேட்டுள்ளார். குறித்த நபரும் 33 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து ரயரைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

உழவு இயந்திரத்தின் உரிமையாளர் பல நாள்கள் ஆகியும் உழவு இயந்திரம் திரும்பி வராததால் சந்தேகம் கொண்டுள்ளார். அதையடுத்து நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார்.

அதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், உழவு இயந்திரத்தின் பெட்டியிலிருக்கும் ரயர் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. குறித்த உழவு இயந்திரத்தைப் பெற்றுக் கொண்ட நபரைத் தேடிய போது, ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் ரயரைத் திருடி விற்பனை செய்ததாக ஒப்புக்கொண்டதையடுத்து, ரயரை விற்பனை செய்தவர், அதனை வாங்கியவர் என மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-ஐ-10,422)

## கூட்டுறவு ஊழியர்கள் கௌரவிப்பு

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 ஆண்டுகள் பணி யாற்றிய கூட்டுறவு ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கூட்டுறவுப் பணியாளராகப் பணிபுரிந்து இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு கலந்து கொள்வார்.

அத்துடன் இந்நிகழ்வில் நிரந்தர நியமனம் பெறும் ஊழியர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்படவுள்ளன. (ற-ஐ-ரி5)

# அங்கத்தவர்களின் இல்லங்களில் இவ்வருடம் தைப்பொங்கல் விழா

## *யாழ்.மாவட்ட சி.க.வ.கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஏற்பாடு*

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இந்த வருட தைப்பொங்கல் விழாவை இணுவில் பகுதியில் உள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின்இல்லங்களில் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இணுவில் அபிராமி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் முப்பதுபேரின்இல்லங்களில் இந்தத் தைப்பொங்கல் விழா முன்மாதிரியாகக் கொண்டாடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.

இந்தத் தைப்பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக தென்பகுதியில் உள்ள சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் முப்பது வரையிலான அங்கத்தவர்களும்கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கை சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வைத்தியர் பி.பிரிவெந் தேனியா தலைமையில் இந்த அங்கத்தவர்கள்யாழ்ப் பாணத்துக்கு வரவுள்ளனர். நாட்டில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் ஒற்றுமை, அதன் வளர்ச்சி போன்றவற்றை எடுத்துக் காட்டும்முகமாக இணுவிலில் அங்கத்தவர்களின் இல்லங்களில் இடம்பெறும் தைப் பொங்கல் நிகழ்வில் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-17)

# விழிப்புலனற்ற மாணவர்களுக்கு வட்டு. இந்து வாலிபர் சங்கம் உதவி

வலி.வடக்கு, டிசெ. 28

யாழ்.பல்கலைக்கழகத்தின் விழிப்புலனற்ற மாணவர்களுக்கான ஒலிப்பதிவுக் கருவிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பன வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைச் செயலகத்தில், சங்கத்தின் செயலாளர் இ.தக் சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே, 18ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான இந்த அன்பளிப்புக்கள் 11 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் இயற்கையாக விழிப் புலனற்ற மாணவர்கள், தமது விரிவுரைகளின் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, இவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக ஒலிப்பதிவுக் கருவிகளைத் தந்துதவுமாறு யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட விழிப்புலனற்ற மாணவர்களினால் வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப் பட்டதைத் தொடர்ந்தே, இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இதற்கான நிதி அன்பளிப்பினை லண்டனைச் சேர்ந்த ஓம் சரவணபவ சேவா அறக்கட் டளை நிதியம் வழங்கியுள்ளது.

மேலும் இந்த நிகழ்வில் ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளை நிதியம் லண்டன் பிரதிநிதி வல்லிபுரம், வட்டுக்கோட்டை இலங்கை வங்கி முகாமையாளர் வே.புவனேந்திரராஜா, அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபர் ந.சபாரட்ணம் சிங்கி, சங்க அங்கத்தவர்கள் மற்றும் விழிப்புலனற்ற யாழ். பல் கலைக்கழக கலைப்பிரிவு மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (வ-ரி5,86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகத்து நிலத்தடி நீரை குடிக்க முடியுமா? முடியாதா?

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு சுன்னாகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.28
நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை தொடர்பில் நேற்று முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் சந்திக்கருகில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவு ஓயில் கலப்பால் மாசடைந்த நீரைக் குடிக்கலாமா..? குடிக்கக்கூடாதா..? மாகாண மத்திய அரசே பதில் கூறு என்ற கோரிக்கையுடன் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
"மண்ணையும் நீரையும் காற்றையும் பாதுகாப்போம். மக்கள் சக்தியே மா பெரும் சக்தி" எனும் தொனிப் பொருளோடு முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், எங்கள் கிணற்று நீரைக் "குடிக்கக்கூடாதா.. குடிக்கலாமா.., மாகாண அரசே பதில் கூறு மத்திய அரசே பதில் கொடு", "பாட்டன் பூட்டன் கிணறுகளில் கழிவெண்ணெய் கலந்தவர் யார்?", 'தூய நீரை நாசமாக்கி கொள்ளை இலாபம் பெற்றவர் யார்?", "தூய நீரில் கழிவு எண்ணெய் போத்தல் நீரில் வியாபாரம்", "இயற்கை வளங்களை அழிக்காதே மக்கள் வாழ்வைச் சிதைக்காதே", "நிலத்தையும் நீரையும் பாதுகாப்போம் இலாப வெறியர்களை துரத்துவோம்'' என்ற கோசங் களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

> "இயற்கை வளங்களை அழிக்காதே மக்கள் வாழ்வைச் சிதைக்காதே", "நிலத்தையும் நீரையும் பாதுகாப்போம் இலாப வெறியர்களை துரத்துவோம்"

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்ததாவது-
நன்னீர் வளம் நிறைந்த யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் அமைந்திருந்த அனல் மின் நிலையத்தின் பொறுப்பற்ற தன்மையாலும், அரசினதும் அரச அதிகாரிகளது பொறுப்பற்ற அசமந்தப் போக்காலும் கழிவு ஓயில் கலப்பு மழுங்கடிக்கப்பட்டது.
அதன்பின்னர் மக்கள் போராட்டங்களின் தொடர்ச்சியால் சுகாதார அமைச்சு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை மேற்கொண்ட ஆய்வின் மூலம் கழிவு ஓயில் கலப்பு கண்டறியப்பட்டதுடன் அந்த நீர் உடல் நலத்துக்குத் தீங்கானது எனத் தடை செய்யப்பட்டது.
தற்போது வெளிவந்துள்ள அறிக்கையானது நிலத்தடி நீரின் தன்மை பற்றி பேசுவதைக் குறைத்து குடாநாட்டின் நிலத்தடி நீர் பற்றியே ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது. இதன் மூலம் தற்காலிக நீர் தொட்டிகளிலும் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரிலும் மக்கள் தங்கி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.- என்றனர். (ற-ஐ-ரி2)

---

### பச்சை மிளகாய் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்.குடாநாட்டில் பச்சை மிளகாயின் விலை தொடர்ந்து அதிகரித்த நிலையில் உள்ளது. அதனால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த வாரம் கிலோ 600 ரூபாவாக விற்கப்பட்ட பச்சை மிளகாய் மீண்டும் கிலோ 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.
இந்தப் பச்சை மிளகாய் விலை அதிகரிப்பால் நுகர்வோர் தமது நாளாந்த உணவுக்குப் பயன்படுத்த முடியாது சிரமத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இதேசமயம் தென்பகுதியில் இருந்து வியாபாரிகளால் தினமும் பச்சை மிளகாய் எடுத்துவரப்பட்டாலும் அவற்றின் விலை குறைவடையவில்லை.
குடாநாட்டில் அண்மையில் பெய்த மழையால் மிளகாய் கன்றுகள் வெள்ளத்தில் அழிந்து சேதமாகியதால் இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-17)

---

### நியாய விலையில் பொங்கல் பொதி

ப.நோ.கூ.சங்கங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்.குடாநாட்டில் உள்ள அனேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் பொதிகளை நியாய விலையில் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.
அரிசி, சர்க்கரை, பயறு, பிளம்ஸ், கஜு போன்ற பொருள்களை பொதிகளாக்கி குறைந்த விலையில் விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதற்காக சில சங்கங்கள் கொழும்பில் இருந்து நேரடியாகப் பொருள்களைக் கொள்வனவு செய்தும் வருகின்றன.
அதனைவிட பொங்கல் பானைகளையும் சங்கங்கள் கொழும்பில் இருந்து தருவித்துள்ளன.
கடந்த ஆண்டிலும் சில சங்கங்கள் நுகர்வோரின் வசதி கருதி பொங்கல் பொருள்களை பொதிகளாக்கி விநியோகித்தன. (ற-ஐ-17)

---

## வடமராட்சியில் புதிய படகுத் தொழிற்சாலை

### ஒரு வாரத்துக்குள் திறக்கப்படும்

மாங்குளம், டிசெ.28
வடமராட்சி கிழக்குப் பகுதியில் இன்னும் ஒரு வாரத்துக்குள் புதிய படகுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்
அதனை அமைக்கும் பணிகள் தற்போது முடிவுறும் நிலையை அடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
இது குறித்து அவர் தெரிவித்ததாவது-
மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த மாதம் 28 லட்சம் ரூபா நிதி கிடைக்கப் பெற்றது. இந்த நிதியைக் கொண்டு துரிதமாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த மாதம் நிறைவடைவதற்கு முன்னர் இந்தத் தொழிற்சாலைக்கான கட்டடங்கள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தும் வேலைகளும் பூர்த்தியடைந்து விடும்.
வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் அண்ணளவாக 5 ஆயிரத்து 50 குடும்பங்கள் வாழ்கின்றனர். இதில் 4 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்தொழிலைத் தமது பிரதான தொழிலாகக் கருதி வாழ்கின்றனர்.
அவர்களின் படகுகள் கடலலைகளின் தாக்கத்தினால் அடிக்கடி பாதிக்கபட்டுகின்றன. இதனால் அவர்களின் தொழில்களும் தொடர்ச்சியாக பாதிக்கபட்டு வருகின்றன.
படகுகள் பழுதடையும் போது முல்லைத்தீவுக்கும், பூநகரிக்கும் என படகுகளைக் கொண்டு சென்று பல சிரமத்தின் மத்தியில் தமது படகுகளைத் திருத்தம் செய்து வருகின்றனர். இதனால் பொருளாதார ரீதியிலும் அவர்கள் பாதிப்படைந்து வந்துள்ளனர்.
இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுவதால் இவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோடு புதிய படகுகள் உற்பத்தியும் செய்யப்படவுள்ளன. இதனால் இலங்கையின் எப்பாகத்திலிருப்பவர்களும் எம்மிடமிருந்து புதிய படகுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
புதிய படகு அமைக்கும் போது கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் கீழ் பதிவு செய்தே படகுகள் வழங்கப்படவுள்ளன. நீரியல் வளத் துறையின் பொறியலாளரின் மேற்பார்வையின் கீழ் இது அமைவதால் சிறந்த படகுகளை உருவாக்க முடியும்.- என்றார். (ஐ-422)

---

### 75 குடும்பங்களுக்கு இலவச மின்சாரம்

வடமராட்சி கிழக்கில் வடக்கின் வசந்தம் மூலம்

யாழ்ப்பாணம்,டிசெ.28
வடமராட்சி கிழக்கில் கடந்த ஆண்டில் 75 குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
அதில் கூடுதலானோர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் மற்றும் இந்திய வீட்டுத் திட்டத்தைப் பெற்றவர்களுக்கும் இந்த இலவச மின் இணைப்புப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-ஐ-17)

---

## தென்மராட்சி பிரதேச பண்பாட்டுப் பெருவிழா புதனன்று

சாவகச்சேரி, டிசெ.28
தென்மராட்சிப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் 2015 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழாவும், தென்பொழில் - 1 மலர் வெளியீடும் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட ஓய்வுநிலை மேலதிக அரச அதிபரும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவருமான செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கலாசார அலுவலர் திருமதி மாலினி கிருஷ்ணானந்தன், பொ.இராசகுலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிகழ்வில் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கண்ணன் பாடல், கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் "இனியேனும் திருந்துவோமா ? என்னும் தலைப்பில் கவியரங்கு, செல்வி கம்சிகா கிருபாகரக் குருக்கள் செல்வி ஜானுகா விக்கினேஸ்வரன் ஆகியோரின் தனி நடனங்களும் [illegible]
[illegible] பொழில்- 1" மலரை பிரதம விருந்தினர் வெளியிட சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் பெற்றுக் கொள்வார்.
மலரின் வெளியீட்டுரையை உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் நயப்புரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச. மார்க்கண்டுவும் நிகழ்த்துவர்.
நிகழ்வில் பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கலும், கலைத்துறையில் அர்ப்பணிப்பான சேவை வழங்கிய மறவன்புலவு க.சச்சிதானந்தம் ( இலக்கியம் ) திருமதி யசோதரா விவேகானந்தன் ( நடனம் ) கந்தன் ஐயங்கன் செல்லத்துரை ( ஆர்மோனியம்) செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதர் ( இசை ) சி.தங்கவேல் ( நாதஸ்வரம் ) ஆகியோருக்கு பிரதேச கலாசார பேரவையின் உயரிய விருதான "கலைச் சாகரம்" விருது வழங்கலும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மட்டு. பல்கலை நிர்மாணத்தை பார்வையிட்ட அரச அதிகாரிகள்

மட்டக்களப்பு,டிசெ.28
மட்டக்களப்பு ரிதிதென்னையில் அமைக்கப்பட்டு வரும் பல்கலைக்கழகக் கல்லூரியின் நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அரச உயர் அதிகாரிகள் குழுவினர் கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக வளாகத்துக்குச் சென்றுள்ளனர்.

அவர்களுக்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பான விளக்கங்களை மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான ஹிஸ்புல்லாஹ் வழங்கினார்.

இதன்போது பிரதம பொறியியலாளர்களும், பிரதமர் அலுவலகத்தினரும், நிர்மாணப் பொறுப்பாளர் எம்.ஐ.பீ.றஊப் ஹசனும், அமைச்சரின் இணைப்பாளர் எஸ்.எம்.தாஹிரும் உடனிருந்தனர். (ற-ஐ-10)

## பிள்ளைகள் நற்பிரஜைகள் ஆவது பெற்றோர்களின் கையில் உள்ளது

### பிரதி அமைச்சர் அமீர் அலி சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, டிசெ.28
நாளையதலைமுறையினரான இன்றைய பிள்ளைகளை நல்ல பிரஜைகளாக உருவாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது. எமக்குக் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்க வேண்டும். - இவ்வாறு கிராமிய பொருளாதார அலுவல்களுக்கான பிரதி அமைச்சர், சட்டத்தரணி அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடி அஸ்ஸலாஹியா பாலர் முன்பள்ளியின் 20 ஆவது அணி மாணவர் வெளியேற்று விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-
இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள். எனவே அவர்களுக்கு நல்ல பண்பாடுகளை கற்றுக் கொடுத்து வளர்க்க வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு பெற்றோர்களிடம் இருக்கிறது.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பண்புகளை, நல்ல ஒழுக்கத்தை, நேர்மையான வாழ்வியலை சொல்லிக் கொடுங்கள். உங்களுக்கும் எனக்கும் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் இந்தத் தலைமுறைக்குக் கிடைத்துள்ளது அதனை நாம் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் ஒரு நண்பனாக அல்லது நண்பியாகப் பழகுங்கள். அவர்களது பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள். அவர்களின் பாதுகாப்புக்கும், நம்பிக்கைக்கும் உரித்தானவர்களாக நடவுங்கள். - என்றார். (ற-ஐ-10)

# முல்லை. சுகாதார அபிவிருத்திக்கு 255 மில்லியன் ரூபா நிதி தேவை

முல்லைத்தீவு,டிசெ.28
முல்லைத்தீவு மாவட்டத்தின் உடனடி சுகாதார அபிவிருத்திக்கு தற்போது 255 மில்லியன் ரூபா நிதி தேவையாக உள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தின் சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கக் கூடிய வகையில் வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டுமானங்களுடன் கூடிய உடனடி அபிவிருத்தித் தேவைக்காகவே இந்த நிதி தேவையாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

> “பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு வழங்கிய புள்ளி விவரத்திலேயே இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.”

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு வழங்கிய புள்ளி விவரத்திலேயே இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 13 வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு 162.5 மில்லியன் ரூபாவும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 8 வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு 34.5 மில்லியன் ரூபாவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு வேலைத்திட்டங்களுக்கு 4.5 மில்லியன் ரூபாவும், துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 9 வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 37.5 மில்லியன் ரூபாவும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 3 வேலைத் திட்டங்களுக்கு 6.5 மில்லியன் ரூபாவும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3 வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 9.5 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 255 மில்லியன் ரூபா அடுத்த ஆண்டில் உடனடித் தேவையாகவுள்ளது என்று அந்தப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ- 21)



கல்முனை நகர அபிவிருத்தி தொடர்பாக கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் சிவில் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை பிரதேச செயலகத்தில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஆ.ஹரீஸ் தலைமையில் நடை பெற்றது. இந்தச் சந்திப்பில் பிரதம நகர திட்டமிடல், நீர்வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம், மாகாண சபை உறுப்பினர் கே.எம். ஏ. ஜவாத், கல்முனை மாநகர சபை பிரதி மேயர் ஏ.அப்துல் மஜிட், அமைச்சர் ரவூப் ஹக்கீம், இணைப்பு செயலாளர் ரகுமத் மன்சூர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், சிவில் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ற-ஐ-10)

## கலந்துரையாடல்

வவுனியா, டிசெ.28
வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வவுனியா முத்தையா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

“ஜெனிவா பேரவை 2015 செப்ரெம்பர்” எனும் தலைப்பில் எற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், சிவில் சமுக மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகளிடமிருந்து கருத்துக்கள், மற்றும் ஆலோசனைகள், பரிந்துரைகளைப் பெற்று இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல் செயல்முறைக்காக மேற்கொள்ளப்படவுள்ளன என்று வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் தொரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி5)

# உள்ளூராட்சி மன்றங்கள் செயலூக்கம் பெற வேண்டும்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



திருகோணமலை, டிசெ.27
உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் உயிர்த் துடிப்புள்ளதாக மாற்றக் கூடிய தகுதி, அந்த உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும். - இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில், நகர சபைச் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் தலைமையில், ஏறாவூர் நகர சபை இரண்டாம் நிலை சுகாதாரத் துறைத் திட்டம், உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கல், உள்ளூராட்சி வார, தேசிய வாசிப்பு மாத சான்றிதழ் வழங்கல் முன்பள்ளி மாணவர்களின் விடுகை விழா என்பன ஏறாவூர் அறபா வித்தியாலத்தில் நேற்று நடைபெற்றன.

அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-
கருவறைப் பராமரிப்பில் தொடங்கி ஒருவர் இறக்கும் வரையுள்ள கரிசனையை உள்ளூராட்சிநிர்வாகம் மேற்கொள்கின்றது.

ஆகையால் உள்ளூராட்சியின் நிர்வாக செயற்பாடுகளைச் செவ்வனே நிறைவேற்றிக் காட்ட வேண்டியது அங்கு பணிபுரிவோரின் கடமையாகும்.

உள்ளூர் வரி வருமானங்களுடனும் மாகாண, மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகளுடனும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசத்தைத் தாமே ஆளும், அழகு படுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றி செயற்பட வேண்டும்.

ஒருகாலத்தில் வெறும் குப்பைகளைக் கையாளும் நிர்வாகமே உள்ளூராட்சி நிர்வாகம் என்ற மனப்பாங்கு மக்கள் மத்தியில் இருந்தது. மக்கள் மத்தியில் இத்தகைய மனப்பாங்கு ஏற்படுவதற்கு ஒரு சில அதிகாரிகளின் அக்கறையற்ற செயற்பாடுகளும் காரணமாய் அமைந்துள்ளமை துரதிர்ஷ்டம்.

2016 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஊழலற்ற நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.- என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59 மணல் கடத்தல்கள் இதுவரை முறியடிப்பு

## வடமராட்சிப் பகுதியில்

யாழ்ப்பாணம்,டிசெ.28
வடமராட்சிப் பகுதியில் இதுவரை 59 மணல் கடத்தல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புபட்ட ஹன்ரர்கள், பாரவூர்திகள் உட்பட வாகனங்களும் கைப் பற்றப்பட்டன என்றும் சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அத்துடன் வல்வெட்டித்துறைப் பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸ் பிரிவுகளில் மாத்திரம் இந்த வருடம் 351 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் பெரும்பாலான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.
இதேவேளை வடமராட்சியில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல் சம்பவங்களின் போது, பொலிஸார் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. அதில் அசேல, தரங்கேவ என்ற பொலிஸ் உத்தியோத்தர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன் போதைப் பொருள் முறியடிப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டே அதிகளவு பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

> “போதைப் பொருள் முறியடிப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டே அதிகளவு பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.”

இதேவேளை வடமராட்சியில் இந்த வருடம் இரண்டு இணையத்தள வன்முறைகள் பதிவாகியுள்ளன என்றும், அவற்றுடன் தொடர்புபட்ட இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஜ-109)

## வாழ்வாதார உதவி வழங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.28
கோப்பாய் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தின் கற்றல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கல் நிகழ்வுகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள, இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசஅதிபர்நா.வேதநாயகன்கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-ரி5)

## கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.28
இலண்டன்மெற்றோபொலிற்றன் கல்லூரியின் அனுசரணையுடன் கேவிலாக்கண்டி ஸ்ரீ சரஸ்வதி சனசமூக நிலைய ஏற்பாட்டில் நிலைய அங்கத்துவப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.
நிலையத்தின் தலைவர் க.பிரதீஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.செல்வராணி, லண்டனில் இருந்து வந்துள்ள மெற்றோபொலிற்றன் கல்லூரியினர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-ஜ-ரி5)

## உடுப்பிட்டி வடக்கு விவசாயிகள் வெங்காய செய்கையில் ஆர்வம்

உடுப்பிட்டி வடக்கு விவசாயிகள் வெங்காயம் - புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தற்போது காலநிலை சாதகமாக இருப்பதால் வெங்காயச் செய்கையை ஆரம்பித்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
உடுப்பிட்டி வடக்கு மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு, நாவலடி, வேலகாடு, கொம்மாந்தறை உட்பட்ட பிரதேசங்களில் வெங்காயம் மற்றும் புகையிலைச் செய்கை விவசாயிகள் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தற்போது விதை வெங்காயம் அந்தர் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.
இதே வேளை வெங்காயச் செய் கையில் ஈடுபடும் விவசாயிகள் தமக்கு மானிய உரம் மற்றும் மருந்துவகைகளைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் வலிகாமத்திலும் வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

# டெங்கு நுளம்புக்கு ஏது நிலையுடன் வலி.கிழக்கு பிரதேச சபை வளாகம்

## குவிக்கப்பட்டுள்ள வெற்றுப் போத்தல்களை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வீட்டுத் தரிசிப்புக்காக வருகை தரும் சுகாதார உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் வீட்டு வளவில் காணப்படும் ஒரு சில பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்களுக்கே நடவடிக்கை எடுக்கின்றனர். ஆயினும் பிரதேச சபை வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் போத்தல்கள் தொடர்பில் கண்டும் காணாதுள்ளனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
வலி.கிழக்குப் பிரதேச சபை அலுவலக வளாகத்தில் கிராமத்தில் சேகரிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான வெற்றுப் போத்தல்கள் மாதக் கணக்காக குவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



அத்துடன் பிரதேச சபைக்கு அருகில் உள்ள காணி அதிக பற்றை நிறைந்து காணப்படும் சூழலில், பிரதேச சபையினரும் வெற்றுப்போத்தல்களை இவ்வாறு பிரதான வீதியை அண்டிய பிரதேசத்தில் குவித்துள்ளதால் நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
குறித்த வெற்றுப்போத்தல்கள் மூலம் பிரதேச சபை நன்மை அடையுமாயின் அதனைக் கிராமத்துக்கு வெளியில் மக்கள் குடியிருப்பு அற்ற பிரதேசத்தில் சேகரித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ற-ஜ-101)

## மருந்தாளர் பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவில் சான்றிதழுக்கான மருந்தாளர் பயிற்சி நெறியை முடித்த 15 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படும் என யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு பணிப்பாளர் ஏ.குமாரவேல் தெரிவித்துள்ளார்.
சான்றிதழுக்கான மருந்தாளர் கற்கை நெறிக்கான போட்டித் தெரிவில் 15 பேர் சித்தியடைந்தனர். இவ்வாறு சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களே விரைவில் வழங்கப்படவுள்ளன. (ற-ஜ-50)

# சுன்னாகத்து நிலத்தடி நீரை அருந்தலாமா? இல்லையா?

## தெளிவுபடுத்த வேண்டும் என்கிறது புதிய மாக்சிச லெனினிசக் கட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 28
சுன்னாகத்துநிலத்தடிநீரைஅருந்தலாமா? இல்லையா? என்பதற்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு தெழிவான பதில் கூறத் தவறியுள்ளது. இதன் மூலம் உண்மையை மறைக்க நிபுணர் குழு முற்படுகின்றது என்ற ஐயம் எழுந்துள்ளது. எனவே மாகாணசபையும் மத்திய அரசும் மௌனம் சாதிக்காது செயற்படுவதுடன், ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு மக்கள் தூயநீர் பெறுவதற்கான உரிமையினை உறுதிசெய்துதரவேண்டும்.
- இவ்வாறு புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அந்தக் கட்சி அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஒரு வருடத்துக்கு மேலாக சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 500க்கும் மேற்பட்ட நன்னீர்க் கிணறுகள் எண்ணெய்க்கழிவுகளால் மாசுபடுத்தப்பட்டுள்ளன.
இதனை மக்கள் சார்பு இயக்கங்கள் வெளிக்கொணர்ந்தும், காரணமானவர்களைக் கண்டறியுமாறு வலியுறுத்தியும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையும், தூய நீருக்கான செயலணியும் இணைந்து நீரை ஆய்வு செய்து குடிப்பதற்கு உகந்தது அல்ல என்றே அறிக்கைவெளியிட்டன.
இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்று நொதேன் பவர் நிறுவனத்தின் மீது சந்தேகம் எழுப்பப்பட்டது. இந்த நிலையில் வடமாகாண சபையின் நிபுணர் குழுவின் ஆரம்ப அறிக்கை மழுப்பலாக அமைந்ததுடன், இறுதி அறிக்கையும் உண்மையினை மறைத்து குறித்த நிறுவனத்தைக் காப்பாற்றுவதாகவே அமைந்துள்ளது.
சுன்னாகம் நீர்மாசுபாடு தொடர்பாக கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி ஜனாதிபதிக்கு கடிதம்மூலமாக தெரிவித்திருந்தோம். இதற்கான தீர்வினை நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு எடுக்கும் என்று ஜனாதிபதி செயலகம் பதிலளித்திருந்தது.
எனினும் இன்றுவரை எந்தவிதமான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே மாகாணசபையும் அமைச்சரவையும் மக்களுக்கான தூய நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செயற்படுத்தவேண்டும்.-என்றுள்ளது. (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சின் சம்பளம் பெறுவோர் வடக்குக் கல்விப்புலத்தில் உள்ளமை ஆபத்து

## மாகாண சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.28
பாதுகாப்பு அமைச்சின் சம்பளப் பட்டியலில் இருப்பவர்கள் எமது வடக்கு கல்விப் புலத்தில் இருப்பது ஆபத்தானது. இதனை உணர்ந்து வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயற்பட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் இடம் பெற்ற கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி அமைச்சர் தனது அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஒழுங்காக நடத்துகின்றார். கல்விப் புலத்திலுள்ள பல்வேறு குறைகளை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கக் கூடியதாகவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் சம்பளப் பட்டியலில் இருப்பவர்கள் எமது கல்விப் புலத்தில் இருப்பது ஆபத்தானது. கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்டங்களில், முன் பள்ளிகளில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் சம்பளம் பெறுபவர்கள் உள்ளனர். இதேபோன்று மன்னாரில் முள்ளிக்குளத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பாடசாலையில் 8 இராணுவத்தினர் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் – என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவிக்கும்போது,

வடக்கு மாகாணம் ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் பின்னடைந்து செல்கின்றது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலைகளில் மலசல கூடம் சுத்தமாக இருக்கவேண்டும்.

> வடக்கு மாகாணம் ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் பின்னடைந்து செல்கின்றது. இதுதொடர்பில்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

காலையில் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் மாலை வரையில் பாடசாலைகளிலேயே இருக்கின்றனர். அவர்கள் அவசரத்துக்கு பாடசாலை மலசலகூடத்தைப் பயன்படுத்த முடியாதளவுக்கு மோசமாகவே இருக்கின்றது. மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்தால் மாத்திரம் போதாது. அதனைப் பராமரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

முல்லைத்தீவுமாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிக்கும்போது,

பண்டாரவன்னியன் சிலை அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதாக கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால் இன்னமும் சிலை அமைக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாகவுள்ள, சுற்றுவட்டச் சந்தியிலேயே சிலை அமைக்கப்பட வேண்டும் – என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவிக்கும்போது,

யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக அடுத்த ஆண்டை போதைப் பொருளுக்கு எதிரான ஆண்டாகப் பிரகடனப்படுத்த வேண்டும். கல்வி அமைச்சினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றகொடுப்பனவுகள் போதாமையாக உள்ளது. பின்தங்கிய பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலையே காணப்படுகின்றது – என்றார்.

மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன் தெரிவிக்கும்போது,

கலாசார சீரழிவு வடபகுதியில் அதிகரித்துச் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்துவ தற்கு குழு ஒன்று அமைக் கப் பட வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் மீதும் கட்டுப் பாடுகள் வேண்டும் – என்றார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர் பா. கஜதீபன் தெரிவிக்கும்போது,

வலிகாமம்வலயத்தை இரண்டாகப் பிரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் அனலைதீவு – எழுவைதீவுப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

வவுனியா மாவட்ட உறுப்பினர் இந்திரராசா கருத்துத் தெரிவிக்கும் போது:

மக்களின் மீள்குடியமர்வில் பாடசாலைகள் மிக முக்கியமானது. பாடசாலைகள் இயங்கத் தொடங்கினால்தான் மக்களுக்கு மீள்குடியமர்வார்கள். எனவே, மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்பதற்காக, பாடசாலைகளை மூட வேண்டாம் – என்று கேட்டுக் கொண்டார்.

அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவிக்கும்போது,

பாடசாலை மாணவர்கள் தங்களது புத்தகப் பைகளைத் தூக்கியே அவர்களது முதுகு கூனப்போகின்றது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒரே நாளிலே சகல பாடங்களையும் வைக்காமல் கடந்த காலங்களைப் போன்று பகுதி பகுதியாக வைத்தால், மாணவர்களுக்கு இந்த நிலை ஏற்படாது – என்றார்.

(ஐ-5)

# கொழும்புத் துறைமுகத்துக்கு அதிநவீன உபகரண வசதிகள்

கொழும்பு,டிசெ.28
கொழும்புத் துறைமுகத்தில் தற்போதும் பழைய உபகரணங்களே பயன்பாட்டில் இருப்பதால், நவீன உபகரணங்களைத் தருவித்து துறைமுகத்தில் இடம்பெறும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கும், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு முதலீட்டாளர்களை வரவழைத்து அதை இலாபமீட்டும் துறைமுகமாக மாற்றும் திட்டங்களும் வகுக்கப்பட்டிருப்பதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 182 பில்லியன்கள் ரூபா கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு 8 பில்லியன் ரூபாவை வழங்க வேண்டியுள்ளது.

தற்போதுநிலுவையில் உள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை 2020 ஆம் ஆண்டில் 19 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து துறைமுகத்தைச் சூழவும் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்து அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்து கடன்களை மீளச் செலுத்துவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கொழும்புத்துறைமுக நகரம் தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருப்பதால், நகரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளைமேற்கொண்டு வரும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி துறைமுகத்தின் பாதுகாப்புக்கும், செயற்பாடுகளுக்கும் தடையேற்படாத விதமாகக் கட்டுமானங்களை அமைப்பதற்குத் தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (து-ஐ-22)

# அதிவேகப் பாதை ஊழியர்களின் விடுமுறை அனைத்தும் நிறுத்தம்

கொழும்பு, டிசெ 28
அதிவேகப் பாதையில் பணியாற்றும் சகல ஊழியர்களின் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அப்பாதையின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுக்கான பணிப்பாளர் ஓப்பநாயக்க அறிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தின் அதிகாலை முதல் இந்தப்பாதையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வாகன நெரிசல் ஏற்படிருந்தது. அந்த நிலைமை மீண்டும் ஞாயிற்றுக்கிழமை 27ஆம் திகதி தொடக்கம் தெற்கிலிருந்து கொழும்பு நோக்கிவரும்வாகனங்களால் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளதால் இப்பாதையில் கடமையில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களும் அடுத்து வரும் சில தினங்களுக்கு கட்டாயக் கடமையில் ஈடுபடவேண்டியுள்ளதாகவும் தேவை ஏற்படின்மேலதிகஊழியர்களைப் பணியில் அமர்த்தவேண்டிவருமெனவும் அவர் தெரிவித்தார்.

மீண்டும் கொழும்பு நோக்கி வரும் வாகனங்களுக்காக கொட்டாவ மற்றும் கடவத்தை வெளியேறும் வாயில்களில் மேலதிக கருமபீடங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (தி)

# கதிர்காமத்தில் பக்தர்களிடம் வியாபாரிகள் பகற் கொள்ளை

கொழும்பு, டிசெ. 28
நீண்ட விடுமுறை காலமாக கதிர்காமத்தில் என்றுமில்லாத அளவுக்கு யாத்திரிகர்கள் குவிந்துள்ளதையடுத்து அங்குள்ள வியாபாரிகள் தமது இஷ்டம்போல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தியுள்ளனர்.

சாதாரண அப்பம் 40 ரூபா (அரசு நிர்ணயித்துள்ள உச்சபட்ச விலை 10 ரூபா) தேநீர் 50 ரூபா, கரு வாட்டுடன் கூடிய சாதாரண சாப்பாட்டுப் பார்சல் 250 ரூபா, ஓர் அங்குல உயரம் கொண்ட தயிருடனான தயிர்ச்சட்டி 180 ரூபா என அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகள் கண்மூடித்தனமாக உயர்த்தப்பட்டுள்ளன.

அத்துடன், வழக்கமாக 3 தொடக்கம் 4 ஆயிரம்வரை நாள் வாடகைக்கு விடப்படும் தங்கும் அறைகள் 12 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரை அறவிடப்படுகின்றன. ஓலையால் வேயப்பட்டு தற்காலிகமாக மின்சார பல்பொன்றைத் தொங்க விட்டுள்ள பாதுகாப்பற்ற அறைகளின் ஓர் இரவுக்கான வாடகை 34 ஆயிரம் ரூபாவாக உள்ளது.

கதிர்காமத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலுமுள்ள குடிசைகள், வீடுகள், தாழ்வாரங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் யாத்திரிகர்கள் நிரம்பிவழிகின்றனர்.

புத்தம் புதிய வாகனங்கள் கதிர்காமத்தில் நிரம்பி வழிகின்றன. வாகனங்களை நிறுத்துவதற்கான இடங்களைக் கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. அத்துடன், கோவில்களில் அர்ச்சனை செய்வதற்கு அர்ச்சனைத் தட்டுகளுடன் வரும் அடியார்கள் நீண்ட வரிசைகளில் நில்லாமல் முன்னால் சென்று புகுந்துகொள்ள ஆயிரம் ரூபாவைக் கட்டணமாக அறவிடும் தரகர்களும் (புரோக்கர்களும்) அங்கு [illegible] வருவதாகத் தெரிய [illegible]

(தி)

# புதிய அரசமைப்புக்கு எதிராக கூட்டு எதிரணி

கொழும்பு, டிசெ. 28
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எதிராகச் செயற்படக் கூட்டு எதிரணியினர் தீர்மானித்து வருவதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

இலங்கையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கானப் பணிகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய அரசமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு தாங்கள் ஒருபோதும் எதிர்ப்பை வெளியிடப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

> தற்போது காணப்படும் அரசமைப்பில் சில யோசனைகளை உள்ள டக்கிய மாற்றங்கள் கொண்டு வந்தால் போதுமானதாக இருக்கும்.

புதிய அரசமைப்புக்கான யோசனையை எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதுடன், மறுநாள் 9ஆம் திகதி புதிய அரசமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட உரையும் இடம்பெறவுள்ளது.

பல்வேறு தரப்பினரும் தங்களது ஆதரவைத் தெரிவித்து வரும் நிலையில் கூட்டு எதிரணியினர்புதிய அரசமைப்புக்கு எதிராகச் செயற்படவுள்ளனர் என்று கூட்டு எதிரணியின் முக்கிய தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

புதிய அரசமைப்பு அவசியமற்ற ஒன்றாகும். தற்போது காணப்படும் அரசமைப்பில் சில யோசனைகளை உள்ளடக்கிய மாற்றங்கள் கொண்டு வந்தால் போதுமானதாக இருக்கும். நாங்கள் இதற்கான இறுதி முடிவை ஜனவரி 9ஆம் திகதி அறிவிக்கவுள்ளோம்– என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாசு விபத்து அற்ற கிறிஸ்மஸ் இம்முறை



கொழும்பு, டிசெ. 28
நத்தார் போன்ற பண்டிகைக் காலங்களில் பட்டாசு மற்றும் வாணவெடி விபத்துக்களால் ஏராளமானோர் காயமடைந்து சிகிச்சைக்கு வருவது வழக்கமாக இருந்தபோதிலும் இவ்வருட நத்தாரின்போது அவ் வாறான அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை எனக் கொழும்பு தேசிய வைத்திய சாலைவட்டாரங்கள்தெரிவித்தன.

24ஆம் திகதி நள்ளிரவு முதல் 25ஆம் திகதி பிற்பகல் வரை பட்டாசுகள் மற்றும் வாண வெடிகளால் பாதிக்கப்பட்ட எவரும் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்படவில்லை என அவ் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், ஏனைய விபத்துகளால் பாதிக்கப்பட்ட 219 பேர் இந்தக் காலப்பகுதிகளில் சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலைக்கு வந்திருப்பதாகவும் அவர்களில் 48 பேர் வீதி விபத்துக்களாலும், 37 பேர் வீடுகளில்நடந்தவிபத்துக்களாலும், 64 பேர் தவறி விழுந்ததாலும், 12 பேர் ஏனைய இம்சைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவித்த அவர், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ் வருடம் நடந்த விபத்துக்கள் 5 சத வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (கு)

# 11 மாதங்களில் மட்டும் 2300 வாகன விபத்துக்கள்

### உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2538

கொழும்பு, டிசெ. 28
இவ்வருடத்தின் கடந்த 11 மாதங்களில் மாத்திரம் நாடெங்கும் 2,300 வாகன விபத்துக்கள் நடந்துள்ளதாகவும் இவ்விபத்துக்களால் 2538 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இவ்விபத்துக்களில் 760 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 726 பாதசாரதிகளும் உயிரிழந்துள்ளனர். அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துக்களால் நாளாந்தம் சராசரியாக 6.7 பேர் உயிரிழக்கின்றனர். அவ்வாறே காயமடைபவர்களின் எண்ணிக்கையும் துரிதமாக அதிகரித்துச் செல்கின்றது. விபத்துக்கள் அதிகமாக நடக்கும் பகுதிகளில் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக்கால மதிப்பீட்டின்படி கல்கிஸ பொலிஸ் வலயத்தின் மெலிபன் சந்தியிலிருந்து தெஹிவளை பொலிஸ் வலயத்தின் கவுடான சந்தி வரையிலான 3.1 கிலோ மீற்றர் தூரமான பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பகுதியில் மேலதிக எச்சரிக்கைப் பலகைகள் பொருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (கு)





# மோட்டார் சைக்கிளைத் திருடிக் கொண்டு சைக்கிள்களை கைவிட்டுத் தப்பிய திருடர்

யாழ்ப்பாணம், டிசெ 28
மோட்டார் சைக்கிளைக் களவாடிச் சென்றவர்கள் தமது சைக்கிள்களைக் கைவிட்டுத் தப்பினர்.

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உட்புகுந்த திருடர்கள் வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு மோட்டார்சைக்கிள்களைக் களவாடிச் செல்ல முயற்சித்து வீட்டுக்கு வெளியே உருட்டிச் சென்றுள்ளனர். இதில் ஒரு மோட்டார் சைக்கிளை இயக்க முயற்சித்த போது அது இயங்காததால் மற்றைய மோட்டார் சைக்கிளை இயக்கிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இதன்போது திருடர்கள் தாங்கள் வந்திருந்த இரண்டு சைக்கிள்களைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிசார் திருடர்களின் சைக்கிள்களைக் கைப்பற்றி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (கு)

## விபத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு, டிசெ. 28
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதியின் நாவலடிச் சந்தியில் நேற்று முன் தினம் பிற்பகல் 2.45 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் வாழைச் சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுமுறையின் நிமித்தம் கொழும்பில் இருந்து பாசிக்குடாவுக்கு வந்து, மீண்டும் கொழும்பு பயணித்த குடும்ப உறுப்பினர்கள் பயணித்த வான், சைக்கிளில் வியாபாரத்துக்காக விறகு ஏற்றி வந்த குடும்பஸ்தர் மீது மோதியதனாலயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்தில், சைக்கிளில் பயணித்த தேவாலய வீதி முறக் கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பிள்ளையான் வைரமுத்து (வயது-52) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வானில் பயணித்தவர்களில் காயமடைந்த ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வானின் சாரதி வாழைச் சேனைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளை வாழைச் சேனை போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# வீரவன்ச, கம்மன்பிலவை நீக்கக் கோர டிலான் யார்?

### *கேள்வியெழுப்புகிறார் டினேஸ் குணவர்த்தன*



கொழும்பு, டிசெ. 28
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விமல் வீரவன்ச வையும், உதய கம்மன்பிலவையும் உடன் விலக்குமாறு கூறுவதற்கு டிலான் பெரேரா யார்? அவருக்கு என்ன அதிகாரம் உள்ளது?

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பிலவையும், விமல் வீரவன்சவையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலக்க வேண்டும் என்ற கோரிக்கையை இராஜங்க அமைச்சர் டிலான் பெரேரா முன்வைத்திருந்தார்.

இக்கருத்துத் தொடர்பில் பதிலளிக்கும்போதே தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டிலான் பெரேரா ஒரு கொள்கையற்ற அரசியல்வாதியாவார். இவரின் கடந்த கால செயற்பாடுகள் பற்றி நாட்டு மக்கள் நன்கறிவர். நாடாளுமன்றத் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசப் போத்தலைக் கொடுக்க வந்தார். இன்று என்ன நடந்துள்ளது. இவர்கள் அரசியலுக்காக எதையும்செய்யக்கூடிய பதவிவெறியர்களே.

விமலையும், கம்மன்பிலவையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலக்க இவருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது. இவருக்கோ அல்லது ஏனைய அமைச்சர்களுக்கோ இவர்களைக் கட்சியிலிருந்து நீக்க எந்த அதிகாரமும் இல்லை-என்றார். (கு-சி)

# எரிபொருள் விலைச் சூத்திரம் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு

எரிபொருள்களின் புதிய விலைகள் சம்பந்தமான சூத்திரம் ஜனவரி மாதம் 6ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் நிலவும் எரிபொருளின் விலை, சம காலத்தின் டொலரின் மாற்றுவீதம் போன்ற காணிகளை அடிப்படையாகக்கொண்டு புதிய விலைச் சூத்திரம் விசேட குழுவொன்றால் நுணுக்கமாகத் தயாரிக்கப் பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்த விசேட குழுவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், திறைசேரியினதும் உயரதிகாரிகள் இடம் பெற்றிருந்ததாகவும் விலை ஏற்ற, இறக்கம் தொடர்பான சகல காரணிகளும் உன்னிப்பாக ஆராயப்பட்டன எனவும் இந்தப் புதிய விலைச் சூத்திரம் பொதுமக்களுக்கான குறுகிய மற்றும் நீண்டகால நிவாரண அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் எவ் வாறாயினும் விற்பனை விலைகளை அதிகரிக்கும் எவ்வித உத்தேசமும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (கு)

# மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 10 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ. 28
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 10 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித் தலைவர் கி. சேயோன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் கே.துரைராஜசிங்கம், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா ஆகியோர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், எஸ்.வியாழேந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் நினைவுச்சுடர் ஏற்றினர்.

இந்த நினைவு நிகழ்வில் காலத்தை வென்று வாழும் தமிழினக் காவலன் எனும் நினைவு நூல் வெளியிடப்பட்டதோடு யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ் பத்மநாதன் நினைவுப் பேருரை ஆற்றினார். (கு-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொதுத்துறைகளில் பெண்களுக்கு 25 வீத இட ஒதுக்கீடு

பெண்களுக்கு பொதுத்துறைகளில் 25 வீத இட ஒதுக்கீடு வழங்குவதற்கு அரசு ஆலோசித்து வருவது வரவேற்க வேண்டிய விடயம் மட்டுமல்ல, நெடுங்கால எதிர்ப்பார்ப்பு ஒன்றை நிறைவேற்றுவதாகவும் அது இருக்கும். 25 வீதம் அல்ல அதற்கு மேலாகவும் இருக்குமானால் அது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்தியாவில் பெண்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் 30 வீதம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தாலும் அங்கு அது இன்னமும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கை நாடாளுமன்றத்தில் பெண்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்களே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பொது நிறுவனங்களில் பிரதிநிதித்துவம் பெறும் அளவுக்கு சமூகத்தில் பெண்கள் அதற்கான தகுதி பெற்றவர்களாய் இல்லை என்பதாக ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. உண்மை என்னவென்றால் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை ஆண்களில் அனேகர் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுடன் அவர்கள் பொது சேவைகளில் ஈடுபட்டுப் போதிய அனுபவம் பெறவாய்ப்பில்லாமல் இருப்பதுவும் இன்னொரு காரணம் எனலாம்.


இப்போதெல்லாம் படித்த பெண்களில் அனேகர் அரசுத் துறைகளிலும் தனியார் துறைகளிலும் பணி புரிவதைப் பார்க்கின்றோம். இவர்களில் படித்த பெண்கள் உயர் பதவிகளிலும் காணப்படுகிறார்கள். தனியார் துறைகளில் குறிப்பாக வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களில் பெண்களுக்கான கொடுப்பனவு, ஆண்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை விட குறைவு என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இவ்வாறு பொதுத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் ஆண்களால் அதற்கும் அப்பால் பொதுசேவைகளிலும் ஈடுபடமுடிகிறது. ஆனால் அவ்வாறு பெண்களால் முடியாமல் போவதற்கு அவர்கள் மீது குடும்பப் பாரம் மிதமிஞ்சிய அளவில் சுமத்தப்பட்டிருப்பதும் ஒரு காரணம். அந்த வகையில் பார்த்தால் குடும்பப் பாரத்தை ஆண்களும் சமமாகப் பகிர்ந்து கொள்வது அவசியமாகின்றது. குடும்பப் பாரம் குறைந்தால் மட்டும் பெண்களால் பொதுச் சேவைகளில் ஈடுபடமுடிகிறதா என்றால் அதுவும் சிக்கலாகவே தென்படுகின்றது.

முதலில் பெண்கள் மத்தியில் அந்த மனப்பான்மை வளர்க்கப்படுவது அவசியம். பொதுப் பணிகளில் பெண்களும் சரிசமமாக ஈடுபடும் வகையில் அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கிக் கொடுக்கப்படாமை அதற்கு இன்னுமொரு காரணமாக இருக்கலாம்.

அரசியல், சமயம், விஞ்ஞானம், மருத்துவம் ஏன் விண்வெளிப் பயணங்களிலும்கூட பெண்கள் பெரும் பங்கு பணியாற்றியுள்ளார்கள். அவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இவ்வாறான பெரும்பாலான பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் முன்னுக்கு வந்தவர்கள் - உலகின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்று வரலாறு படைத்த திருமதி பண்டார நாயக்க அம்மையாரும் கூட அவரது கணவர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்க திடீரெனக் கொலை செய்யப்பட்ட சூழ் நிலையின் காரணமாக நிர்ப்பந்த நிலையில் அரசியலுக்கு வந்தவர்.

எனவேதான் பெண்களில் பெரும்பாலானவர்களும் பொதுப்பணிகளில் -- மக்கள் சேவைகளில் குறிப்பாக அரசியலில் இறங்க துணிச்சல் பெறவேண்டும், அதற்கு ஆண்கள் இலகுவில் விட்டுக் கொடுத்துவிடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. இவ்வாறான பொதுப் பணிகளில் அச்சமின்றி பெண்கள் ஈடுபடுவதற்குரிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாகத் தெரிகின்றது. 25 வீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்பது சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுமானால் சமூகத்தில் அதற்கு எதிராக அமர்ந்திருக்கும் நந்திகள் நகர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும், பெண்களும் சிறுவயது முதலே அதற்கான ஊக்கத்தைப் பெறுவார்கள். பாடசாலைப் பாடவிதானங்களிலும் கூட பொதுப் பணிகளில் சிறுவர்களை ஈடுபடுத்தி பயிற்சி அளிக்கும் வழிமுறைகளை வகுக்கலாம்.

அரசியல் மட்டத்தில் பெண்கள் ஆண்களோடு சரிசமமாக ஈடுபட்டு முன்னேற கிராமிய மட்டத்திலிருந்தே இந்த 25 வீதம் என்ற கோட்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும். அது நாட்டைப் பொறுப்புடன் ஆளக்கூடிய சமூக விழிப்புடன் கூடிய ஏராளமான பெண் தலைவர்கள் உருவாக வழிவகுக்கும். அடிமட்ட அனுபவம் இல்லாதவர்கள் ஆணாய் இருந்தாலும் பெண்ணாய் இருந்தாலும் சிறந்த தலைவர்களாய் உருவாகும் சாத்தியம் இல்லை.



# தலைகீழாக மாறி நின்றாலும் உண்மை ஒருபோதும் பொய்யாகாது

**வீ.எஸ்.ரீ.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைகீழாக நின்று யோகாசனப்பயிற்சி மேற்கொள்ளும் படத்தை அண்மையில் அவரது மகன் நாமல் ராஜபக்ச தமது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அதற்குச் சில நாள்களின் பின்னர், ஊடகவியலாளர் பிரகீத் எக்நலிகொட கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களான இராணுவ அதிகாரிகளை வெலிக்கடைச் சிறைச்சாலையில் சந்தித்துப்பேசிய பின்னர், இராணுவத்தினரைப் பழிவாங்குவதன்மூலம் நாட்டின் பாதுகாப்பு ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவதாக அரசு மீது குற்றம் சாட்டியிருந்தார். மகிந்த தமது இயல்பான நிலையில், கால்களை நிலத்தில் பதித்து நின்றுகொண்டு இத்தகைய மாறுபாடான கருத்தை வெளிப்படுத்தியிருக்க முடியுமா?

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் இராணுவ உயர் அதிகாரிகள் 17பேர் சந்தேகத்தின் பேரில் மகிந்த அரசால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கான போரில், வெற்றிக்குப் பெரும் பங்காற்றியவர்களாவர். அது மட்டுமன்றி 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிப் பொதுவேட்பாளர் சரத்பொன்சேகாவின் வெற்றிக்காக உழைத்ததான குற்றச்சாட்டின் பேரில், இராணுவ உயரதிகாரிகள் 14 பேர் மகிந்த அரசால் கட்டாய ஓய்வில் சேவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். அரச விரோதச் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்ததன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டே அந்த இராணுவ உயரதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தது. இலங்கை இராணுவ வரலாற்றில் ஒரே தடவையில் அத்தனை இராணுவ அதிகாரிகள் கட்டாய ஓய்வில் வீட்டுக்கு அனுப்பப்பட்டமை அதுவே முதற்தடவையாகும். அதற்கு முன்னர் 1962 ஆம் ஆண்டில் அரசுக்கு எதிரான சதிப்புரட்சி முயற்சியில் தொடர்புபட்டிருந்ததான குற்றச்சாட்டில் சிறு தொகையினரான இராணுவ அதிகாரிகளே இவ்விதம் கட்டாய ஓய்வில் சேவையினின்றும் விலக்கப்பட்டிருந்தனர். அதே வேளை குறிப்பிட்ட அந்தச் சதிப்புரட்சி முயற்சியில் சம்பந்தப்பட்டிருந்ததான பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரில் 37 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

> மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் இராணுவ உயர் அதிகாரிகள் 17பேர் சந்தேகத்தின் பேரில் மகிந்த அரசால் கைது செய்யப்பட்டிருந்தனர்.


இந்த வரலாறுகளெல்லாவற்றையும் மகிந்த மறந்து விட்டாரா? அல்லது அவரை அவற்றையெல்லாம் மறக்க வைப்பதற்காகத்தான் அவரது பயிற்றுவிப்பாளர் அவரைத் தலைகீழாக நிற்க வைப்பித்தாரா என்பது தெரியவில்லை. இல்லையாயின் அந்த வரலாறுகளை மறந்து மகிந்த இத்தகையகருத்தைவெளிப்படுத்தியிருக்க முடியாது.

பிரகீத் எக்நலிகொட மற்றும் லசந்த விக்கிரமதுங்க ஆகிய ஊடகவியலாளர்களது படுகொலைகளின் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டமைக்காக முதலைக்கண்ணீர்வடிக்கும்மகிந்த தரப்பினரின் செயற்பாடுகள் குறித்த சந்தேக நபர்கள் மீதான அனுதாபத்தின் வெளிப்பாடல்ல; மகிந்த ஆட்சியில் அலுமாரிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அந்தப் படுகொலைகள் தொடர்பான இரகசிய ஆவணங்கள் பகிரங்கமாகிவிடும் என்ற அச்சத்தின் விளைவே அது.

மகிந்தவின் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த பலர் பிரகீத் எக்நலிகொட வெளிநாடொன் றில் வாழ்வதாக தெரிவித்து வந்தனர். இதனால் பிரகீத்தின் படுகொலை தொடர்பான விசாரணைகள் மூடக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்ட பின்னர் பொதுத்தேர்தல் சமயத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றில் வைத்து பிரகீத்தின் விடயம் குறித்தறிய மோப்ப நாய்களைப் பயன்படுத்தினால் அவை அமைச்சரவைக்கு முன் சென்று நின்றுவிடுமென மகிந்த தெரிவித்தமை, பிரகீத்தின் படுகொலை விடயத்தை அமைச்சரொருவர் மீது சுமத்தும் நோக்கத்திலாகும். அண்மையில் பிரகீத் படுகொலையின் சந்தேகநபர்களை வெலிக்கடைச் சிறைச்சாலையில் சென்று சந்தித்துச் சுகதுக்கம் விசாரித்துத் திரும்பிய மகிந்த தமக்கேதோ பிரகீத் கொலை செய்யப்பட்டிருப்பார் எனத் தோன்றவில்லை எனக் கூறியிருந்தார்.

ஆனால் பொதுத் தேர்தல் சமயத்தில் பிரகீத் படு கொலை செய்யப்பட்டாரெனவும் அது விடயத்தில் அமைச்சரொருவர் தொடர்புபட்டிருப்பதாகவும் கூறியிருந்தீர்களே என ஊடகவியலாளரொருவர் ஞாபகமூட்டியபோது மகிந்த பதிலேதுமின்றி மெளனம் சாதித்தார்.

*நன்றி மவ்பிம*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# ஆட்சி கவிழ்க்கப்படுவது நாட்டுக்கு நல்லதல்ல

அடுத்த ஆண்டு பல்வேறு அரச எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமாக அரசைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் திடுக்கிடும் தகவலொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளதை ஒரு சிறிய விடயமாக எவரும் கருதமுடியாது.



**சதித் திட்டத்தின் பின்னணி**

இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் சில அரசியல் கட்சிகளும் குழுக்களும் இரகசியமான முறையில் செயற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகள், தாம் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் தற்போதைய அரசைக்கவிழ்த்து விடுவதே ஒரேவழி என்பதை உணந்துள்ளதால் அதனைச் செயற்படுத்தி விடுவதில் முனைப்புடன் உள்ளனர். தொழிற்சங்கப் போராட்டம் என்ற போர்வையில் அரசை முடக்கி விடுவதே இவர்களின் பிரதான நோக்கமாகும். மக்களின் உயிருடன் தொடர்புடைய மருத்துவத்துறையைச்சேர்ந்தவர்களைப் பிரதானமாகக் கொண்டு நாடு தழுவிய ரீதியிலான போராட்டங்களின்ஊடாக அரசைக் கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள போதிலும் மக்கள் அச்சமின்றித் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லக் கூடியதொரு நிலை தற்போது காணப்படுவதை எவருமே மறுக்க முடியாது.

**நிம்மதிப் பெருமூச்சு**

குறிப்பாகத் தமிழ் மக்கள் நீண்ட காலத்துக்குப் பின்னர் தற்போதுதான் நிம்மதிப் பெருமூச்சை விடுகின்றனர். தற்போதைய அரசு கவிழ்க்கப்பட்டு மகிந்த தரப்பினர் சிலவேளை ஆட்சிக்கு வந்தால், என்ன நேரும் என்பதை நினைத்துப்பார்ப்பதற்கே உள்ளம் நடுங்குகின்றது.

தற்போது அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளிலும் அந்தத் தரப்பினரே ஈடுபட்டுள் ளனர் என்பது இரகசியமான ஒன்றல்ல. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியில் இருக்கும் வரை இந்த நாட்டைப் பீடித்திருந்த சாபம் அவர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட பின்னரும் நீங்கியதாகத் தெரியவில்லை. அவர் சார்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்திருப்பது அவரது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த இன்னமும் செல்வாக்கு உள்ள ஒருவராகவே காணப்படுகின்றார். இதன் காரணமாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தக் கட்சியின் தலைவராக உள்ளபோதிலும் தமது அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்துவ தில் தயக்கம் காட்டி வரு கின்றார். ஊழல் மற்றும் வேறு குற்றச்சாட்டுக்கள் மகிந்த தரப்பினர் மீது சுமத்தப்பட்டு வருகின்ற நிலையில், அவை தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதில் தேவையில்லாத தாமதங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

> “கடந்த ஆட்சியில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் ஈடு பட்ட அரசியல்வாதிகள், தாம் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் தற்போதைய அரசைக் கவிழ்த்து விடுவதே ஒரேவழி”

இந்த நிலை தொடர்ந்தும் நீடிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தல்ல. இதுவே அரசுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களை வகுப்பதற்கும் வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

**கடந்த அரசின் நடவடிக்கைகள்**

தற்போதைய அரசைக் குறை கூறு பவர்கள் கடந்த அரசில் நடந்தவற்றையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கால கட்டத்தில் நாடு எந்த நிலையில் இருந்தது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசு இனியும் மெத்தனமாக இருக்காது, சூழ்ச்சிக் காரர்களையும், சதித்திட்டம் தீட்டுவோரையும் களையெடுக்க வேண்டும். குறிப்பாக முன்னைய அரசின் காலத்தில் குற்றம் இழைத்தவர்கள் மீது தயவு தாட்சணியமின்றி நடவடிக்கை எடுக் கப்படல் வேண்டும்.

தற்போதைய நல்லாட் சியில் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட இரண்டு பிர தான கட்சிகள் ஆட்சி யில் அமர்ந்திருப்பதால் சிறிய குழப்பநிலை நீடிப்பது உண்மை தான். ஆனால் இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு மோசமான காட்டாட்சி உருவாகுவதற்கு மக்கள் எந்த வகையிலும் இடமளிக்கக் கூடாது. மக்களால் அமைக்கப்பட்ட இந்த அரசை மக்கள்தான் காப்பாற்ற வேண்டும். பொய் வேடதாரிகளின் முகத்திரை கிழிக்கப்பட்டு அவர்களின் உண்மையான சொரூபம் வெளிக் கொணரப்படல் வேண்டும். சுருக்கமாகக் கூறுவதாயின், தற்போதைய ஆட்சி கவிழ்க்கப்படுவது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தீமையையே தரும்.

## மாற்றுவழியை நடைமுறைப்படுத்துங்கள்

சுயதொழிலாளர் ஊக்குவிப்பாக செயலகங்கள் கடனுதவியை இலங்கை வங்கியூடாக வழங்கி வருகின்றன. பிரதேச செயலகங்களே சுயதொழிலாளர்களைத் தெரிவு செய்கின்றன. கடனுதவிக்கான பரிந்துரையில் இலங்கை வங்கியில் சம்பளம் பெறுகின்ற அரச உத்தியோகத்தர் ஒருவரும் செயற் பாட்டில் உள்ள இலங்கை வங்கிக் கணக்கையுடையவரும் கையொப்பம் இட வேண்டும்என்பதுவங்கியின்சட்டம். தற்போது எல்லா அரசஉத்தியோகத்தரும்வங்கிக்கடன் பெற் றுள்ளனர். அத்தோடு ஏனையவர்களுக்கும் சாட்சியாகக் கையொப்பமிட்டுள்ளனர். ஆனால், இவர்களது சம்பளம் இலங்கை வங்கி தவிர்ந்த ஏனைய வங்கிகளுக்கு வருகிறது. அப்படியானால் யாரைத் தேடி கையொப்பமிடுவது என்பது சுயதொழிலாளரின் இன்றைய ஏக்கம். கடனுக்கு சிபார்சு செய்தும் கடனுதவியைப் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர் சுய தொழிலாளர்கள் தகுந்த அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். சுய தொழிலாளர்களை ஒரு குழுவாக அமைத்து அவர்களே ஒருவருக்கு ஒருவர் கையெழுத்திடுவது நலமாகும் என்பது எனது அபிப்பிராயம். எது எப்படியோ இந்தக் கடன் உதவித்திட்டத்தை மீண்டும் ஒரு முறை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்கிறேன். சுயதொழில் ஊக்குவிப்பு, கையெழுத்துக்காகப் பிச்சைகேட்கும் அவலமாக மாறியுள்ளதை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா? மாற்றுவழியை நடைமுறைப்படுத்து வார்களா?

உடுவிலூர் கலா

## முன்மாதிரியான செயல்

கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூரைச் சேர்ந்த அமரர் சபாரட்ணம் கனகரெத்தினத்தின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனநிகழ்வும் நிறைவுற்ற பின், நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் வழமையாக வழங்கப்படும் கல்வெட்டுப் பதிப்புக்குப் பதிலாக அவரின் நினைவாக பயன்தரும் மரக்கன்றுகள் அளிக்கப்பட்டன.

அவரின் குடும்பத்தாரின் இந்தச் செயல் என்னை மிகவும் கவர்ந்தது. அவரின் நினைவாக ஒவ்வொரு வீட்டிலும் பயன்தரும் மரங்கள் வளர்வது சிறப்பான விடயம். இவ்வாறான செயல்களை ஏனையவர்களும் பின்பற்றலாமே.

சூ. மைக்கல், நல்லூர்.

## மத வேறுபாடு வேண்டாம்

மதங்களுக்கு அப்பால் மனிதநேயம் மற்றும் தமிழ் உணர்வு இன்று சமூக ஒற்றுமையை வளர்க்கும் செயற்பாடுகளாக எமது மத்தியில் நடாத்தப்பட்டு வருவதை அண்மைக்காலமாக காணக்கூடியதாக உள்ளது.

முன்னைய காலத்தில் கிறிஸ்தவ மக்களால் நடத்தப்பட்டு வந்த நத்தார் தின நிகழ்வுகள் தற்போது இந்து, இஸ்லாம், பெரியார்களும் கலந்து கொள்ளும் நிகழ்வாகவும் இந்து மக்களால் நடத்தப்படும் நிகழ்வுகளில் கத்தோலிக்க கிறிஸ்தவ இஸ்லாம் மதங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு தமிழ் இன ஒற்றமையை வெளிப்படுத்தம் நிகழ்வுகள் தமிழ் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன.

முன்னர் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன நிகழ்வுகளில் சமயத் தலைவர்கள் ஆசியுரை வழங்குபவர்களாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வந்தனர். தற்போது பாடசாலைகள் தொடக்கம் மத நிகழ்வுகளிலும் சமயப் பெரியார்களை அழைத்து அனைவரையும் சமமாக மதிக்கும் மனிதநேயப் பண்புகள் எம்மிடையே வளர்ந்து வருகின்றன. பாடசாலைகளில் நடைபெறும் சமய நிகழ்வுகளில் அனைத்து மத மாணவர்களும் பங்குபற்றி இணங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்த்துவரும் இவ்வேளையில் சமய நிகழ்வுகளில் அனைத்து மதத் தலைவர்களும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுவது பலராலும் நோக்கத்தக்க விடயமாகக் காணப்படுகிறது.

அத்தடன் சமய நிலையங்களில் மற்றொரு சமய நிகழ்வை நடத்தி நாம் அனைவரும் தமிழர்கள் என்ற உணர்வை, ஒற்றுமையை வெளிக்கொணரும் நிகழ்வுகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது. நேற்றையதினம் நடைபெற்ற இந்து நிலைய நிகழ்வில் நத்தார் தின நிகழ்வுகள் ஆராதனைகள் வழிபாடுகள் போன்றன மேற்கொள்ளப்பட்டன. நாளைய தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் உள்ள கத்தோலிக்க ஆலயத்தில் நடைபெறவுள்ள நத்தார் தின நிகழ்வுக்கு இந்து சமய ஆலோசகர் முஸ்லீம் மௌலவி கிறிஸ்தவ பங்குத் தந்தை போன்றோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான மதவேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாயின் எமது எண்ணம் விரைவில் ஈடேறும் என்பது திண்ணம்.

ஐ.கிருஷ்ணன் தென்மராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTH
Twitter : UTHA

# கிளர்ச்சி அமைப்பின் முக்கிய தலைவர் சாவு

டமாஸ்கஸ்,டிசெ.28
சிரியாவில் அரச படையினர் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய விமானத் தாக்குதலில், முக்கியக் கிளர்ச்சி அமைப்பின் தலைவர் ஜாஹ்ரன் அல்லவுஷ் கொல்லப்பட்டுள்ளார்.



சிரியாவில் ஜனாதிபதி அல்-அஸாதுக்குஎதிராகநிகழ்ந்து வரும் கிளர்ச்சிப் போராட்டத்துக்கு இவரது சாவு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கூறியதாவது:
கௌதா பகுதியின் கிழக்கே, ஜெய்ஷ் அல்–இஸ்லாம் தலைவர் ஜாஹ்ரன் அல்லவுஷ், அந்த அமைப்பின் தளபதிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். அப்போது, சிரியாவின் அரச படை விமானங்கள் கூட்டம் நடைபெற்ற பகுதியைக் குறிவைத்துக் குண்டுகள் வீசின. இதில் ஜாஹ்ரன் அல்லவும், 4 தளபதிகளும் கொல்லப்பட்டனர் என்று சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# சுவீடனில் வேலை நேரம் குறைகிறது

சுவீடன்,டிசெ.28
சுவீடனில் தினசரி வேலை நேரம் படிப்படியாக 6 மணி நேரமாகக் குறைக்கப்பட்டு வருகிறது. உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதும் மக்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதுமே இதன் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கெனவே நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் இந்த வேலை நேரக் குறைப்பை நடைமுறைப்படுத்தி உள்ளதாக "சயன்ஸ் அலர்ட்" இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.
குறுகிய நேரத்தில் கூடுதல் உற்பத்தித் திறனுடன் அலுவலகப் பணியை முடித்து விட்டு, தங்களது தனிப்பட்ட வாழ்வில் கூடுதல் நேரத்தை மகிழ்ச்சியாக செலவிட அனுமதிப்பதே இந்தத் திட் டத்தின் நோக்கம் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
சுவீடனின் கோதன்பர்க் நகரில் உள்ள டொயோட்டா மையங்களில் 13 ஆண்டுகளுக்கு முன்பே இந்த வேலை நேர குறைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அந்த தொழிலகங்களில் ஊழியர்கள் உற்சாகமாக வேலைக்கு வருவதாகவும், உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளதாகவும், லாப வீதம் அதிகரித்துள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மியன்மாரில் நி



பர்மா,டிசெ.28
மியன்மாரில் மாணிக்கச் சுரங்க மண் குவியலில் ஏற்பட்ட சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்த நிலச்சரிவில் மேலும் 100 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மியன்மாரின் கச்சின் மாகாணம், ஹபாகாந்த் பகுதியில் மாணிக்கக் கற்கள் உள்ள சுரங்கங்கள் அமைந்துள்ளன. அங்குவிலையுயர்ந்தமாணிக்க கற்களை வெட்டி எடுக்கும் சுரங்கங்களிலிருந்து அகற்றப்பட்ட மண், மலை போல குவிக்கப்பட்டுள்ளது.
அந்த சுரங்க மண் குவியலில் கடந்த சனிக்கிழமை நிலச்சரிவு ஏற்பட்டது. இதையடுத்து, அந்தப் பகுதியில் இருந்த ஏராளமான குடிசைகள் புதையுண்டன.
இது தொடர்பாக ஹபா
அதிகாரி நிலார் மைய
வது:
மண் சரிவு ஏற்பட்ட
ணைப்பு வீரர்கள் உ
குழுவினர் விரைந்து
ஈடுபட்டனர். அங்கு ஏ
சைகள் மண்ணுக்குள்
அவற்றில் இருந்த



## யப்பான் மலையேற்ற வீராங்கனை சாவு

பீஜிங்,டிசெ.28
யப்பானின் புகழ்பெற்ற மலையேற்ற வீராங்கனை கீ தனிகுச்சி (வயது–43), ஹொக்கைடோ மாகாணம் டைசெட்சுஜனில் உள்ள குரோடேக் பனிமலையிலிருந்து இறங்கும் போது நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.
இது குறித்து அவரது நண்பரும் மலையேறும் வீரருமான ஹிரோஷி ஹகிவாரா தெரிவிக்கும் போது, 'சுமார் ஆயிரத்து 984 மீற்றர் (6,510 அடி) உயரமுள்ள குரோடேக் பனிமலையில் தனிகுச்சி மற்றும் 4 பேர் ஏறினர். பின்னர் அவர்கள் இறங்கிக் கொண்டிருந்த போது தனிகுச்சி தவறி விழுந்ததில் இறந்து விட்டார்' என்றார்.
கடந்த 2007 ஆம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தனிகுச்சி, கடந்த 2009 ஆம் ஆண்டு புகழ்பெற்ற கோல்டன் ஐஸ் ஆக்ஸ் விருதை வென்றார். இதன் மூலம் இந்த விருதைப் பெற்ற முதல் பெண் என்ற புகழும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளத்தில் அமெரிக்கா

வொஷிங்டன்,டிசெ.28
அமெரிக்காவின் குறிப்பிட்ட சில மாகாணங்களில் கடந்த 50 வருடங்களில் இல்லாத அளவுக்கு பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் 150 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
பிரேசில் – உருகுவே எல்லையில் வறள் காலநிலை காணப்பட்ட போதிலும் பராகுவே மற்றும் ஆர்ஜென்டீனாவில் நீர் மட்டங்கள் அதிகரித்த படியே உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
பரகுவேயின் பிரதான நகரில் இருந்த ஆறின் நீர் மட்டம் 30 சென்ரி மீற்றரால் உயர்ந்துள்ளதால் ஆற்றின் கரை கடந்து வெள்ளம் நகருக்குள் புகக்கூடும் என்பதால் அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளனர்.



இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளப்பெருக்கால், ஆஜென்ரீனாவில் இருவர் உயிரிழந்ததுடன், 20 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். உருகுவேயில் ஆறுகளின் நீர் மட்டம் 14 மீற்றர் உயரத்தில் காணப்படுகின்றன. தெற்குபிரேசில்பகுதியில்ஆயிரத்து 800 குடும்பங்கள்வீடுகளை விட்டு வெளியேறும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ஐ–ரி4)

# சீனாவி ஒருவர்


பீஜிங்,டிசெ.28
சீனாவில் ஜிப்சம் சு
விழுந்த விபத்தில் ஒ
உயிரிழந்துள்ளதுடன், 17 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளனர்.
அந்த நாட்டின் கிழக்கு ஷான்டாங் மாகாணம், பிங்கிப் நகரில் உள்ள ஜிப்சம் சுரங்கத்துக்குள் 29 தொழி லாளர்கள்கடந்தவெள்ளிக் கிழமை பணியாற்றிக் கொண்டிருந்தனர்.
அதன் போது, திடீ
இடிந்ததில், ஒருவர் உ
பேர் உயிர் தப்பினர்;
மீட்புக் குழுவினரால்
இன்னும் 17 பேர் சுர
கியுள்ளனர்.
சுரங்கத்துக்குள் ெ

# பிரான்ஸில் தொழுகைக் கூடம் ஆர்ப்பாட்டக்கார

பாரிஸ்,டிசெ.28
பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான கார்ஸிகா தீவில், இஸ்லாமியத் தொழுகைக் கூடம் ஒன்று ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.
கார்ஸிகா தீவின் தலைநகரம் அஜாக்ஸியோவில், தீயணைப்புப் படையினர் மீது கடந்த வியாழக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டது.
அந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்தும், தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு ஆதரவாகவும் சிலர் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.
அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், இஸ்லாமியத் தொழுகைக் கூடத்தின் கதவை உடை
அங்கிருந்த பொருள்களை அடித்து நொ
கியுள்ளனர். இதையடுத்து, நகரிலுள்ள பிற
லாமியத் தொழுகைக் கூடங்களுக்கும் பெ
பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவங்கள் குறித்து பிரான்ஸ் பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லச்சரிவு



ஹபாகாந்த் மாகாண
ர் மையின்ட் கூறியதா

ற்பட்ட பகுதிக்கு தீய
கள் உள்ளிட்ட மீட்புக்
ரைந்து மீட்புப் பணியில்
ங்கு ஏராளமான குடி
க்குள்புதைந்துள்ளன.
ருந்தவர்களின் எண்

ணிக்கை பற்றிய தகவல் எம்மிடம் இல்லை. இதுவரை 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் மீட்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன என்றார்.

இதேவேளை நூறுக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனக் கூறப்படும் நிலையில், சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (ஐ-ரி4)

# வில் சுரங்க விபத்து
# வர் சாவு: 17 பேர் மாயம்

8
பசம் சுரங்கம் இடிந்து
த்தில் ஒரு தொழிலாளர்
ள்ள
ழி
ரங்
க்கி



ளர்
ளிக்
யாற்
ருந்

திடீரெனச் சுரங்கம்
ருவர் உயிரிழந்தார்;;. 4
யினர்;. மேலும்; 7 பேர்
னரால் மீட்கப்பட்டனர்.
பர் சுரங்கத்துக்குள் சிக்

தள் செல்லும் பாதை

மூடப்பட்டதாலும், சுரங்கப் பாதைகள் தொடர்ந்து சேதமடைந்து வருவதாலும், உள்ளே சிக்கியிருப்பவர்களை மீட்பது சிக்கலாக இருப்பதாக மீட்புக் குழு வினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சுரங்கம் இடிந்து விழுந்ததற்கு, ஷான்டாங் மாகாணத்தில் ஏற்பட்ட மிதமான நிலநடுக்கமே காரணம் என சீன நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரர்களால் தாக்குதல்

வ உடைத்து,
து நொறுக்
ள பிற இஸ்
ம் பொலிஸ்

ஸ் பிரதமர்

மேனுவல் வால்ஸ் கூறியதாவது:

பொதுமக்கள் அனைவரும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். தீயணைப்புப் படையினர் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது கண்டிக்கத்தக்கது. வழிபாட்டுக் கூடம் அடித்து நொறுக்கப்பட்டதும் ஏற்கத் தக்கதல்ல என்றார். (ஐ)

# உலகின் பருமனான மனிதர் மாரடைப்பால் உயிரிழப்பு

மெக்ஸிக்கோ,டிசெ.28

உலகின் மிகப் பருமனான மனிதரான மெக்ஸிக்கோவின் சோனோரா மாகாணத்தில் உள்ள ஆப்ரிகான் என்ற பகுதியில் வசிக்கும், ஆன்ட்ரெஸ் மொரீனோ செபுல் வெடா (வயது-38) கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உடல் பருமன் நோயால் அவதிப்பட்டு வந்த மோரினோ ஒரு கட்டத்தில் 450 கிலோ நிறையை நெருங்கி, உலகின் மிக பருமனான மனிதரானார்.

மாமிச மலை போல் நிறை கூடியதால் எழுந்து நடமாட முடியாமல் படுக்கையில் வீழ்ந்தார். சக மனிதர்களைப் போல இயல்பு வாழ்க்கை நடத்த விரும்பிய மோரினோ,கடந்தஒக்ரோபர் மாதம் நிறைக்குறைப்பு அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். அதில் அவரது உடல் நிறை 320 கிலோவாகக் குறைக்கப்பட்டது.



எனினும் கடந்த நவம்பர் மாதம் அவரது உடலில் திடீர் பிரச்சினை ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட வயிற்றின் குடல் பகுதிச் சவ்வில் கடுமையான வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் அவருக்கு அவசரமாக அறுவைச் சிகிச்சை செய் யப்பட்டது.

பின்னர் உடல் நிலை தேறியதும் சில தினங்களுக்கு முன்னர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் வயிற்றுப் பகுதியில் வலி இருப்பதாகவும் சுவாசிப்பதற்கு சிரமமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது, வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

வயிற்று வலியுடன் மாரடைப்பு ஏற்பட்டதே அவர் உயிரிழக்கக் காரணம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதே சமயம் நிறைக் குறைப்பு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இரு மாதத்தில் அவர் உயிரிழந்திருப்பது உடல் பருமனால் அவதிப்பட்டு வருபவர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. (ஐ)



# ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ

சிட்னி,டிசெ.28

ஆஸ்திரேலியாவின் விக்ரோறியா மாகாணத்தில் கிறிஸ்மஸ் தினத்தன்று பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த விபத்தில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள்எரிந்துசாம்பலாகியுள்ளன.

இந்தத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் போராடினர். எனினும் யாருக்கும் எந்தக் காயங்களும் ஏற்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து அருகிலிருந்த குடியிருப்பாளர்கள், சுற்றுலாப் பயணிகள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மக்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு ஆயத்தமாக வெளியில் இருக்கும் போது, மலைப்பகுதியில் இருந்து புகை எழும்பியதைக் கண்டனர். ஆனாலும் அவர்கள் கொண்டாட்டங்களைத் தொடர்ந்தனர், சில மணி நேரங்களில் அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் தீயைக் கண்டவுடன், மக்கள் தமது கார்களுக்குள் தஞ்சம் புகுந்தனர் என சம்பவத்தை நேரில் பார்த்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவைத் தாக்க தீவிரவாதிகள் சதி

## உளவுத்துறை தகவல்

வியட்நாம்,டிசெ.28

ஜரோப்பாவில் தீவிரவாதிகளின் தாக்குதல் இடம்பெறலாம் என உளவுத்துறை அறிக்கை மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது. புது வருடத்துக்கு முன்பு இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்படலாம் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் வெடிப்புச் சம்பவங்களோ, துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களோ இடம்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மேலும் உறுதி செய்யும் வகையில் தாக்குதலுக்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என வியட்நாம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த எச்சரிக்கைக்கு பின்பு வியட்நாமிலும், ஏனைய நகரங்களிலும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய நிகழ்வுகளிலும், சனநெருக்கடியான பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-ரி4)


# 17 ஆயிரம் தொழிற்சாலைகளை மூடுமாறு சீன அரசு உத்தரவு

*அதிகரித்து வரும் காற்று மாசின் எதிரொலி*

பீஜிங்,டிசெ.28

சீனாவில் அதிகரித்து வரும் காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்காக 17 ஆயிரம் தொழிற்சாலைகளை மூடுமாறு அந்த நாட்டின் அரசு உத்தரவிட்டுள்ளது. சீனாவில் முன் எப்போதும் இல்லாத அளவு காற்று மாசுபாடு அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக அங்கு இரண்டு முறை சிவப்பு விளக்கில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தலைநகர் பீஜிங்கில் காற்று மாசு அதி



களவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாட்டின் அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. தொழிற்சாலைகள் மூலமே அதிகளவு மாசு ஏற்படுவதாக அந்த நாட்டின் மக்கள் குற்றஞ்சாட்டினர். இதையடுத்து கடந்த ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் தொழிற்சாலைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

சோதனையில் அதிகளவு மாசை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்ட 17 ஆயிரம் தொழிற்சாலைகளை மூடுமாறு அந்த நாட்டு அரசு உத்தரவிட்டது. (ஐ-ரி4)

# கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 14 ஆவது நினைவு தினம் இன்றாகும்

சாந்தன் சத்தியகீர்த்தி

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பிரபல அரும்பொருள், தொல்பொருள் சேகரிப்பாளர், கலைஞானி என்று அழைக்கப்பட்டவர் அ.செல்வரத்தினம் என்ற மாமனிதராவார். 1933 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் திகதி வலி. வடக்கிலுள்ள குரும்பசிட்டி என்ற கிராமத்தில் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்றார். தனது பள்ளிப் பருவத்திலிருந்து தொல்பொருள் சேகரிப்பிலும் ஆராய்ச் சியிலும் ஈடுபட்டு வந்த இவர் 2001 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இறக்கும் வரையிலும் தன் பணியைத் தொடர்ந்து வந்தார்.

**கால்நடையாக நடந்து பணியாற்றியவர்**

வாழ்வைப் பொதுச் சேவைக்காக அர்ப்பணித்து வாழ்வோர் மிக அரிதலான இந்தக் காலத்தில் இந்த மண்ணை நேசித்து மண்ணுக்காகவே வாழ்வை அர்ப்பணித்துச்செயலாற்றிய கலைஞானி என்றும் நினைவு கூரப்பட வேண்டியவராவார்.

பிரமச்சாரியான இவர் கால்நடையாகவே நடந்து திரிந்து ஈழத்துப் பாரம்பரியங்களைக் கண்டறிந்தவர். புகைப் படத்துறையில் தனக்கென ஒரு கலைநெறி வகுத்து அற்புதமான கலை ஓவியங்களைப் படைத்தவர்.

அவர் கந்தரோடை தொடக்கம் காலிவரை தமிழரின் வரலாற்றுத் தடயங்களைத் தனியொருவராக நின்று ஆராய்ந்ததை நினைத்துப் பார்க்கும்போது அவரின் மன உறுதி எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அவ்வாறு சேகரித்த வரலாற்றுத் தடயங்களைப் பல இடங்களிலும் காட்சிக்காக வைத்து தொல்பொருள் ஆய்வில் இளையதலைமுறையை ஈடுபடுத்துவதற்கு கலைஞானி பெரும் முயற்சி எடுத்து வந்தார்.

வரலாறுகள் திரித்துக் கூறப்படுகின்ற போதெல்லாம் வாதாடுகின்ற ஒருவராகக் கலைஞானி விளங்கி வந்திருக்கிறார். அவர் தேடி வைத்திருந்த பிரசித்தமான ஆவணங்களைப் பிற நாட்டவர் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்துப் பெறமுயன்ற வேளைகளிலெல்லாம் தேசத்தின் மீது கொண்ட பற்றுக் காரணமாக அவற்றைக் கைமாற்றாதிருந்தமை அவர் ஒரு தேசப்பற்று மிக்க தேசாபிமானி என்பதை உணர்த்தியது.

**கலைஞானி என்ற பத்திரிகை**

ஓவியம், புகைப்படம், நாடகம், தொல்பொருள் ஆய்வு என்ற துறைகளுக்கு

> வாழ்க்கையில் எளிமையைக் கடைப்பிடித்த கலைஞானி வெண்ணிற ஆடையையே அணிந்து வந்தார். ஒரு சாது போன்ற புறத்தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் சாதனை மனிதராக வாழ்ந்து வந்தார்.

அப்பால் அவர் ஒரு பத்திரிகையாளராகவும் விளங்கினார். தானே ஆசிரியராக இருந்து கலைஞானி என்ற பத்திரிகையை கலை,



இலக்கியம், வரலாறு, தொல்லியல் விடயங்கள் அடங்கியதாக வெளியிட்டு வந்தார்.

வாழ்க்கையில் எளிமையைக் கடைப்பிடித்த கலைஞானி வெண்ணிற ஆடையையே அணிந்து வந்தார். ஒரு சாது போன்ற புறத்தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் சாதனை மனிதராக வாழ்ந்து வந்தார். பணம் தேடும் கூட்டத்திலிருந்தும் விளம்பரம் தேடும் கும்பல்களிலிருந்தும் பிரிந்து நின்று தனிமனித நிறுவனமாக இந்த மண்ணுக்குத் தொண்டாற்றியவர் கலைஞானி என்றால் அது மிகையல்ல. 1993 ஆம் ஆண்டு கலைஞானி அரும்பொருட்காட்சி மண்டம், நூல் நிலையம், சித்திரக்கூடம் போன்றவற்றைப் பேணிப் பாதுகாக்க அறக்கட்டளை நிறுவப்பட்டது. அதன் அறங்காவலர் குழுவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம், செல்விபண்டிதைதங்கம்மா அப்பாக்குட்டி, வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரம், கலாநிதி க.கனகராசா (மில்க்வைற்), கலாநிதி எஸ்.ஜெபநேசன், அ. குமரகுரு, ஆ.சி.நடராசா, ஏ.ரி. பொன்னுத்துரை, சு.பொ.நடராசா (அண்ணா நடராசா - அண்ணா தொழிலகம்) பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். காலச் சூழ்நிலைகளால் இந்தக் குழு செலயற்றுப்போனது துரதிர்ஷ்டமே. அவரின் இறுதிநாள்களில் அவருடைய நலனில் அக்கறை காட்டிய ஒருவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன். கலைஞானி மரணப்படுக்கையில் கிடந்தபோது ஆறுதல் வார்த்தைகூறி அன்பைச் செலுத்தியவர் அவர்.

**சோதனைகளில் துவழாதவர்**

சோதனைகள் வந்தபோதும் துவண்டு விடாத மாமனிதராக வாழ்ந்து சரித்திரம் படைத்து விட்டார் கலைஞானி.

மகத்தான கலைஞர், தொல்பொருள் அறிஞர் கலைஞானிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ விருது வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என்பது என்போன்ற ஆர்வலர்களின் பேராவலாகும் என்று ஆறு.திருமுருகன் 2000 ஆம் ஆண்டில் கலைஞானியும் கலைத்தொண்டும் என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார்.

ஈழத்தில் அரும்பொருள் சேகரிப்பில் ஈடுபட்டவர்களில் முதன்மையானராகத் திகழ்ந்தகலைஞானியின்சேவைகளை நாம் அறிந்து கொள்வதே நாம் அன்னாருக்குச் செய்யும் பெருங்கொளரவமும், அஞ்சலியுமாகும்.

# கவரி வீசிய கலியுக மன்னன்

வ.இ.செல்வக்குமார்.

தாயிற் சிறந்த கோயில் இல்லை. தாயைவிட உன்னதம் உலகில் ஒன்றுமில்லை என்று தாயின் மகத்துவம் தெரிந்தும் கற்றுத் தேர்ந்த கல்விமான்கள் கூட தாயைத் தரக்குறைவாகப்பேசி தவிக்கவிட்ட கனவான்கள் அநேகம் பேரைப் பார்த்திருக்கிறோம். அத்தோடு தாய் என்கிற தகுதியை இழந்த தறிகெட்டவர்களையும் பார்த்திருக்கிறோம். ஆனால் உலக இலக்கியங்களும் இதிகாசங்களும் வேதங்களும், மதங்களும் தாய் என்ற தானத்துக்கு கொடுத்த உன்னதத்தை விட பொன்மனச் செம்மல் கொடுத்த உன்னதம் ஒப்புயர்வில்லாதது. அதனால் தான் தனக்கிருந்த தாய்ப் பாசத்தை நேசிக்கும் பண்பை தன்னுடைய எல்லாப் படங்களிலும் கட்டாயப் பாடமாக்கினார்.

ஒருமுறை சத்தியா ஸ்ரூடியோ உள்வளாகத்தில் படப்பிடிப்புத் தளத்துக்கு வெளியே காரின் மீது சாய்ந்து கொண்டு இயக்குநர் ப.நீலகண்டன் எடுக்கப் போகிற காட்சியைப் பற்றியும் கமராக்கோணம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிறார் வள்ளல். இப்படி விவாதித்துக் கொண்டிருக்கும் பொழுதே கலையக வாசல் பக்கம் வள்ளலின் கண்கள் செல்கின்றன. அப்பொழுது அங்கே ஒருதாய் கைக்குழந்தையுடன் காவலாளியிடம் தர்க்கம் செய்து போராடிக் கொண்டிருக்கிறார். உடனே வள்ளல் அங்கிருந்தே கை மூலமான சைகையால் காவலாளிக்கு ஆணையிடுகிறார். அந்தத் தாயை உள்ளே வரச்சொல்கிறார். கண்ணீருடன் வந்த அந்தத் தாய் காரில் சாய்ந்து கொண்டிருந்த வள்ளலின் காலில் விழப்போகிறார். தடுத்து நிறுத்திய வள்ளல் உங்களுக்கு என்ன வேண்டும் எனக் கேட்கிறார்.

கணவன் இல்லை கைக்குழந்தையுடன் கஷ்டப்படுகிறேன் என்பிள்ளையைக் காப்பாற்ற நீங்கள் எனக்குக் கருணை காட்ட வேண்டும். கசிந்துருகிய வள்ளல் கவலைப்பட வேண்டாம். வேண்டியதைச் செய்கிறேன் என்றுஎதிரில் இருந்த அலுவலக அறையைக் காட்டி அங்கே அமரச் சொல்கிறார் கண்ணீருடன் வந்த தாயை. உதவியாளரைக் கூப்பிடுகிறார். அந்தப் பெண்ணுக்கு சாப்பிட ஏதாவது கொடுங்கள், அவரின் விலாசத்துக்குச் சென்று விவரங்கள் சேகரித்து வாருங்கள், வேண்டியதைச் செய்யலாம் என் றார். சில மணித்துளிகள் கழித்து அந்தத் தாயைச் சந்திக்க தன்னுடை அலுவலகத்துக்குச் செல்கிறார் வள்ளல்.

[illegible] புகைப்படக் கலையக ஊழியர்களெல்லாம் இதுவரை யாரும் செய்யத்துணியாத தவறை அந்தப் பெண்மணி செய்து கொண்டிருக்கிறாரே இதை வள்ளல் தாங்கிக் கொள்வாரா? தர்மம் கேட்டு வந்த தாயை தண்டிக்கப்போகிறாரே! என்ன நடக்கப் போகிறதோ என சக ஊழியர்கள் தங்களுக்குள் இப்படிப் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அங்கே இவர்கள் எதிர் பார்த்த எதுவும் நடக்கவில்லை. அதற்கு மாறாக அங்கே வள்ளல் அற்புதம் நிகழ்த்திக் கொண்டிருப்பதைப் பார்த்து அசந்துபோய் நின்று விட்டார்கள்



> அங்கே இவர்கள் எதிர் பார்த்த எதுவும் நடக்கவில்லை. அதற்கு மாறாக அங்கே வள்ளல் அற்புதம் நிகழ்த்திக் கொண்டிருப்பதைப் பார்த்து அசந்து போய் நின்று விட்டார்கள்

அந்த அலுவலக அறையைப் பொறுத்தவரை பொன்மனச்செம்மலின் புண்ணிய புனிதத்தலம். அந்த அறையில் தான் தான் வணங்கும் தெய்வமான தன் தாய் சத்தியாவின் ஆளுயர திருவுருவப்படமும் படத் துக்கு அடியில் வணங்கிய பிறகு அமரக்கூடிய ஆசனம் ஒன்றுமிருந்தது. அந்த ஆசனத்தில் வள்ளலைத் தவிர எவரும் அமர்ந்ததாக வரலாறில்லை. இற்றைக்கு அந்த ஆசனத்தில் அந்தத் தாய் வியர்வை வடிய கண் அயர்ந்து தூங்குகிறார். ஆனால் நம் வள்ளலோ மின் விசிறியைப் போட்டுவிட்டு அந்தத் தாயின் உறக்கம் கெடாத அளவுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கின்றார். மின்விசிறியின் குளிர்காற்று முகத்தில் பட்டவுடன் அந்தத்தாய் கண் விழித்துப் பார்க்கிறார், எதிரில் வள்ளல். என்ன செய்வது என்று தெரியாமல் அந்தத் தாய் பயந்து போய் எழுகிறார். நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள் தங்களுக்கு உதவி நாளை உங்கள் வீடு தேடி வரும். இதைச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கையில் கொஞ்சம் பணம் கொடுக்கின்றார் வள்ளல்.


வள்ளலே நீ நிகழ்த்திய அற்புதம் சங்ககால வரலாற்றில் முரசுக் கட்டிலில் உறங்கிய புலவர் மோசிகீரனாருக்கு சாவுத்தண்டனை வழங்குவதற்குப் பதிலாக கவரி வீசிய சேரமன்னன் தான் எங்கள் நினைவுக்கு வருகிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# இடத்தைக் கொடுப்பது மடத்தைப் பிடிக்கவா?



வந்தோரை வரவேற்பது தமிழர்களின் பண்பாடு. தமிழர்களின் இந்தப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதில் முதன்மை இடம் வகிப்பது நெடுந்தீவு என்பதை இலங்கையில் உள்ள பெரும்பாலான மக்களே ஒப்புக்கொள்வர். இந்தப் பண்பாட்டைக் கட்டிக் காத்து வந்த எமது முன்னோர்கள் அது தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் தமது குடும்பத்தினருக்கு அதன் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லிஅதற்கிசைவான பழக்கவழக்கங்களையும் தமது பிள்ளைகளுக்கு வழங்கியிருந்தனர். முன்னரெல்லாம் தொழில் ரீதியாக வருபவர்கள், ஊரைப் பார்த்து விட்டு வருபவர்கள் என சகல தரப்பினரும் நெடுந்தீவு மக்களின் உபசரிப்புக்களைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் என்பதால் உணவுக்கோ தங்குவதற்கோ இடமில்லை என்று வருத்தப்படுவதில்லை. நீங்கள் இந்த வீட்டுக்குச் செல்லுங்கள் என்று கூறித் தமது உறவுகளை, தெரிந்தவர்களை, நெடுந்தீவுக்குச் செல்பவர்களை வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் தகவல் வழங்கி உதவுவதுண்டு.

அந்தக் காலங்களில் சாப்பாட்டுக் கடைகள் தேநீர்ச்சாலைகள் என்று அங்கு இருந்ததில்லை. இவை பிற்காலத்தில் ஒன்றிரண்டு மட்டுமே இருந்ததுண்டு. எனினும் வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் இவற்றை நாடிச் செல்வது மிகமிக அரிதாகவே காணப்பட்டது.

வந்தவர்களை வரவேற்று உபசரிக்கும் பண்பாடுகளைக் கடைப்பிடித்த முன்னோர்கள் அங்கு வருபவர்களை நன்கு உபசரித்தார்களே தவிர அவர்கள் அங்கு ஆதிக்கம் செலுத்துவதற்கான அனுமதியை வழங்கும் நிலைக்கு கீழிறங்கியது கிடையாது. அதாவது தலையிலே கூடுகட்ட அனுமதிக்கவில்லை. நெடுந்தீவின் எந்தவொரு செயற்பாடும் நெடுந்தீவானுக்கு மட்டுமே என்பதில் சிறிதும் கூடத் தளர்ந்தவர்களல்லர். முன்னோர்களிடம் ஊரபிமானம், பற்று என்பன நிறையவே காணப்பட்டன. அதனால் நெடுந்தீவை ஒரு சிறந்த மரியாதைக்குரிய பகுதியாக வெளியில் இருந்து வருபவர்கள் கணித்திருந்தனர். நெடுந்தீவில் படையினருக்காக தளங்களை அமைக்க அப்போதைய அரசுகள் பல தடவை முயன்றபோதும்கூட அப்போதைய உள்ளூர் தலைமைகளும் மக்களும் ஒருங்கிணைந்து தமது முழு எதிர்ப்பையும் தெரிவித்து தாங்கள் அனுமதிக்கமாட்டோம் என வலியுறுத்தியதால் அரசால் அந்த எண்ணங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. நெடுந்தீவின் சிறப்புக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கியவர்கள் முன்னைய மக்கள். நெடுந்தீவின் எந்த ஒரு பகுதியிலும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஓர் அங்குல நிலத்தைக்கூட தானமாகவோ விற்பனைக்கோ வழங்கும் நிலையை முற்றாகவே புறக்கணித்திருந்தனர். இன்று நிலைமை தலைகீழாகி விட்டது. காகம் தலைக்கு மேலாகப் பறப்பது மட்டுமல்ல தலையிலும் கூடு கட்டலாம் என்ற நிலைக்கு ஊர் தள்ளப்பட்டுள்ளது. போரைத் தொடர்ந்து இயக்கங்களுக்குள் ஏற்பட்ட குரோதங்களும் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டங்களும் படையினர் முகாம்களை அமைக்கவும் தொழிலுக்கு என்று வந்தவர்கள் தங்கள் தொழில்களை விட்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவும் காணிகளைக் கொள்வனவு செய்யவும் அங்குள்ளவர்களே காரணமாகி விட்டனர்.

மதகுருமார் எனக்கூறிக் கொண்டு வந்தவர்கள் தமது மதப் பணிகளை மறந்து விட்டு மீன்வியாபாரம்செய்வதோடு வாகனங்களைக் கொள்முதல் செய்து உல்லாசப் பயணிகளை ஊர்சுற்றிக் காட்டுபவர்களுமாக வலம் வருகிறார்கள். இதனால் உள்ளூரில் மீன்களைக் கொடுக்க விரும்பாமல் சுவாமிக்கு எனக் கூறி தரமான மீன்களை அவருக்கு வழங்கிவிடுகிறார்கள். உள்ளூர் மக்கள் தமது தேவைக்குத் தரமான மீன் வகைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளனர். உள்ளூர் மக்கள் வெளியிடங்களில் இருந்து எடுத்து வரும் மீன்களை எதிர்பார்த்தவர்களாக உள்ளனர். மீன்களின் விலைகளையும்சுவாமியே நிர்ணயிக்கும் நிலையும் உள்ளது. மற்றும் ஒருவர்

> நெடுந்தீவின் எந்தவொரு செயற்பாடும் நெடுந்தீவானுக்கு மட்டுமே என்பதில் சிறிதும் கூடத் தளர்ந்தவர்களல்லர். முன்னோர்களிடம் ஊரபிமானம், பற்று என்பன நிறையவே காணப்பட்டன.

வெளியில் இருந்துவரும் உல்லாசப் பயணிகளைத்தானே தனது வாகனத்தில் ஏற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துமுள்ளார். குறிகாட்டுவான் துறைமுகத்தில் பணியில் உள்ள ஒருவரே இதற்கு உதவுவதாகத் தெரிகின்றது. நெடுந்தீவைச் சேர்ந்த பல ஓட்டோக்கள் மற்றும் வாகனங்களை வைத்துக் கொண்டு உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லக் காத்திருந்து வெறுங்கையுடன் திரும்புகிறார்கள். மதக்கோட்பாடுகளை மக்களிடம் எடுத்துக்கூறி சமூகத்தில் ஆன்மிகத்தின் ஊடாக எழுச்சியைத் தோற்றுவிக்க வந்த மதகுரு தனது குடும்பத்தின் நலனுக்காக சிறுதொழில் செய்பவர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். இதுபோன்ற மக்களை மதகுரு என்ற போர்வைக்குள் பணியச்செய்து அவர்களது வருமானத்தைப் பறிப்பதிலேயே நாட்டம் கொண்ட போலிச் சுவாமிகளுக்கு வீடுகள் கட்டி நிரந்தரக் குடியிருப்பாளராக்கும் செயற்பாடுகளிலும் உள்ளூரில் உள்ள சிலர் இறங்கியுள்ளனர்.

சிங்களம் தெரிந்தவர்கள் என்பதால் படையினருடன் சரளமாக தொடர்புகளை வைத்துக்கொண்டு அவர்களது ஆதரவுடன் வெளியிடங்களில் இருந்து வருவோர்க்கு, நெடுந்தீவின் முக்கியஸ்தர்கள் தாங்களே என்பதை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள். இதற்கு இங்குள்ள மக்கள் சிலரும் துணையாகிறார்கள்- விலை போகிறார்கள். அரவணைப்போம் அடி பணியோம் என்று வாழ்ந்த மக்களின் காலம் மறைய அரவணைத்து அடி பணிவோம் என்ற காலகட்டத்துள் இன் றைய சமூதாயம் நுழைந்துள்ளமை துரதிர்ஷ்ட வசமானதே. வருபவர்களை அன்புடன் வரவேற்கலாம். தவறில்லை. ஆட்டுத்தோல் வாங்க வந்த ஆங்கிலேயன் நாட்டைப் பிடித்த கதையாக அன்றாட சீவியத்துக்காகத் தொழில் பார்க்க வந்தவர்கள் மதகுருமார் என்ற போர்வையில் மக்களைச் சுரண்டுவதையோ மக்களை அடிமைகளாகக் கருதுவதையோ அனுமதிக்க முடியாது. சுவாமிமார், போதகர்மார் சொல்லும் கருத்துக்களும் செய்யும் செயல்களும் எல்லாமுமே சமூகத்துக்கு உகந்தது, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது என்பதல்ல. சுவாமிமார் சொற்படியே நடப்பது என்ற கிறிஸ்தவ மக்களின் கோட்பாடு எல்லாவற்றுக்கும் பொருத்தமானதல்ல. மக்களது வாழ்வாதாரங்களைச் சூறையாடி தம்மை வளப்படுத்த முயலும் சம்பவங்களையார்கைக்கொண்டாலும்அதனை முறியடிக்க வேண்டியது அந்த மக்களின் கடமையும்கூட. வந்தோம் எமது கடமையைச் செய்தோம் திரும்புகி றோம் என்ற நிலையுடன் இருக்க வேண்டியவர்கள் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் இறங்கும்போது வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது சமூகத்துக்கு இழைக்கும் மிகப்பெரிய தவறு. முன்னைய நெடுந்தீவு மக்கள் இந்தக் கருத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தார்கள். இன்றைய மக்களின் நிலை காகம் தலையிலும் கூடு கட்டலாம் என்பதாக அமைவது உகந்ததல்ல. இடத்தைக் கொடுப்பது மடத்தைப் பிடிக்கவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க



## வரலாற்றில் இன்றைய தினம்

418 - புனித பொனிபஸ் I கத்தோலிக்க பாப்பரசராக ஆட்சி செலுத்தத் தொடங்கினர்.
1767 - தாய்லாந்து மன்னராக ராக்ஸின் அரசர் முடிசூடினார்.
1816 - அமெரிக்கக் குடியேற்றச் சங்கம் ஸ்தாபிதம்.
1828 - 6.8 ரிச்டர் அளவிலான புவியதிர்ச்சி ஜப்பான் - எசிக்கோவைத், தாக்கியது. 30000 பேர் மரணமானார்கள்.
1836 - மெக்ஸிக்கோவை சுதந்திரநாடாக ஸ்பெயின் அங்கீகாரம்.
1850 - ரங்கூன் - பர்மா தீயால் அழிவு.
1869 - சுவிங்கம் காப்புரிமையை வில்லியம் பின்லே - ஒஹியோ பெறல்.
1904 - முதலாவது காலநிலை எதிர்வு கூறல் தினசரி வெளியீடு.
1915 - திருமணத்துக்கு முன் ஆண்கள் கட்டாய இராணுவ சேவையில் இணைந்திருக்க வேண்டுமென பிரித்தானிய அமைச்சரவை தீர்மானம்.
1926 - இங்கிலாந்து - இந்தியாவுக்கும் இடையிலான தபால் மற்றும் பயணிகள் சேவை இம்பீரியல் விமான சேவையால் தொடங்கப்பட்டது.
1942 - அத்திலாந்திக் இற்கு முதன்முதல் 100 தடவை பறந்த விமான ஓட்டியாக றொடே சுல்லிவன்.
1948 - புளோரிடா தென்மியாமிக்கு 50 மைல் தொலைவில் டி.சி. - 3 விமானம் மாயமானது.

## ஓடிவா!
### பள்ளிக்கூடம் போகலாம்!

சின்னப் பாப்பா ஓடிவா!
செல்லப் பாப்பா ஓடிவா!
பாலும் சோறும் தருவேனே!
பள்ளிக்கூடம் போவாயே!

படிக்கும் காலம் பொற்காலம்!
பாரினில் உயர் நற்காலம்!
பாங்காய் நீயும் படித்தாலே
பாராய் உனக்கே எதிர்காலம்!



நல்ல நட்பை மேற்கொண்டால்
நல்லவர் போற்ற நீ வாழ்ந்தால்
நானிலம் உன்னைப் போற்றிடுமே!
நாட்டில் நற்பெயர் கிடைத்திடுமே!

# நான் பிரார்த்தனை பண்ணுவேன்!

பள்ளப்பட்டி என்ற ஊரில் அமரநாதர் என்ற பெரியவர் ஒருவர் இருந்தார். அமரநாதர் தெய்வ நம்பிக்கை கொண்டவர். சதாசர்வ காலமும் கடவுளையே நினைத் துக் கொண்டிருப்பார். மக்களுக்கு நல் உபதேசங்கள் வழங்குதல், பக்தியைப் பற்றி எடுத்துரைத்தல், ஆன்மிக விடயங்களைச் சொல்வது போன்ற நல்ல செயல்களைச் செய்வர்.

இவற்றின் மூலம் அவருக்கு ஓரளவு வருமானம் கிடைத்தது. அதைக்கொண்டு தன் சிஷ்யன் சொல்வது போன்ற நல்ல செயல்களைச் செய்வார்.

இவற்றின் மூலம் அவருக்கு ஓரளவு வருமானம் கிடைத்தது. அதைக் கொண்டு தன் சிஷ்யன் சின்மயானந்தாவுடன் காலத்தைக் கழித்து வந்தார்.

ஒரு சமயம்– அமரநாதரும் சின்மயானந்தாவும் பக்திச் சொற்பொழிவாற்ற அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்றது ஒரு காட்டுப் பாதை.மிக அடர்ந்த காடு அது. சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, ஓநாய் போன்ற கொடிய விலங்குகள் அங்கு வசித்தன.

அந்தக் காட்டின் ஒற்றையடிப்பாதை வழியாக அவர்கள் இருவரும் சென்று கொண்டிருந்தனர்.

வழியில் ஒரு சிறு ஆலயம் இருப் பதைக் கண்டார் அமரநாதர்.

"சின்மயானந் தா! இந்தப் பயங்கரக் காட்டில் ஓர் ஆலயம் இருக்கிறது. எந்த ஒரு பயங்கரமான பகுதியாக இருந்தாலும் அங்கு ஓர் ஆலயத்தைக் கட்டி வைத்து, இறைவனை கௌரவப்படுத்தி வந்துள்ளனர் எமது முன்னோர்கள். இதுபோன்ற இடங்களில் மாட்டிக்கொண்டு திக்குத்திசை தெரியாமல் தவிக்கின்ற மக்களின் உள்ளங்களில், இறைவனைப்பற்றிய ஞாபகத்தை ஏற்படுத்த, இந்த ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நாம் இங்கு பூசை செய்து வழிபாடு செய்து விட்டுப் பிறகு புறப்பட்டுச் செல்லலாம்!" என் றார் அமரநாதர்.



"தங்கள் சித்தம் என் பாக்கியம் குருவே!" என்றான் சிஷ்யன் சின்மயானந்தா. அந்த ஆலயம் மிகச் சிறியது. பாதையோரம் சிற்பத்தை வைத்து, அதன் இரு பக்கங்களிலும் இரு கல் தூண்களை நிறுத்தி வைத்து, அதன் நடுவே ஒரு மணியைக் கட்டி வைத்து உண்டாக்கப்பட்ட ஆலயம் அது.

பாதையில் நின்றபடியே வழிபட்டு விட்டுச் சென்று கொண்டே இருக்கலாம்.

அமரநாதர் அந்த ஆலயத்தின் முன்னே நின்று கண் களை மூடி இறைவனைத் தியானிக்கத் தொடங்கினார்.

நேரம் ஓடியது. அமரநாதர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். சின்மயானந்தா அவரையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது– 'சலசல' என்று செடிகொடிகள் அசையும் சத்தம் அருகில் கேட்க, சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான் சின்மயானந்தா. ஒரு பிரமாண்ட சிங்கம் புதரிலிருந்து கர்ஜித்தவாறே வெளியே வந்தது.

"ஐயோ! சிங்கம்!" என்று கத்திய சின்மயானந்தா விருட்டென்று ஓடி அருகிலிருந்த மரத்தின் மீது ஏறிக்கொண்டான்.

ஆழ்ந்த தியானத்தில் இருந்த அமரநாதருக்கு சின்மயானந்தா கத்திய ஓசையும், சிங்கத்தின் கர்ஜித்தல் ஓசையும் தெளிவாகக் கேட்கத் தான் செய்தன. ஆனாலும் அவர் அதைக்கேட்டு அஞ்சவில்லை. சிறிதளவுசலனம்கூட அவரிடம் ஏற்பட வில்லை. இறைவனை வழிபடும் ஒரே நோக்கத்தில் இருந்தார். சிங்கம் அவர் அருகே வந்து அவரை உற்றுப் பார்த்தது. அந்தக் காட்சியை மரத்தின் மேல் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்த சின்மயானந்தாவுக்கு ரத்தம்உறைந்து விட்ட உணர்வு.

'ஐயோ! சிங்கம் குருவை அடித்துக் கொன்று சாப்பிடப் போகிறதே!' என்று நினைத்துப் பயந்தான்.

ஆனால், அவன் நினைத்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. சிங்கம் அமரநாதரைச் சில வினாடிகள் பார்த்துவிட்டு அமைதியுடன் திரும்பிச் சென்றது.

அதுபோய் நீண்ட நேரம் கழித்தே சின்மயானந்தா மரத்தை விட்டு இறங்கினான்.

ஒரு வழியாக அமரநாதரும் வழிபாட்டை முடித்தார்.

"சிஷ்யா! புறப்படலாமா?" என்று கேட்டார்.

"குருவே! சற்று நேரத்துக்கு முன்பு ஒரு பெரிய சிங்கம் வந்தது. நல்லவேளை, எம்மை ஒன்றும் செய்யாமல் திரும்பிச் சென்று விட்டது. அது வந்து சென்றதை இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது!" என்றான் சின்மயாணந்தா. பிறகு அவனே தொடர்ந்து, "சிங்கம் வந்ததை அறிந்தும் எப்படிக் குருவே சிறிதுகூட பயப்படாமல் அப்படியே இருந்தீர்கள்?" என்று கேட்டான். அதற்குப் புன்னகை ஒன்றையே பதிலாக அளித்த அமரநாதர் திடீரென்று "ஆ!" என்று அலறியபடி தனது காலைத் தூக்கினார். சின்மயானந்தா பதறிப்போய், "என்ன குருவே? என்ன குருவே?" என்று கேட்டான். "ஒரு எறும்பு கடித்து விட்டது!" என்றார் அமரநாதர். சின்மயானந்தாவுக்கு ஒரே ஆச்சரியம். "குருவே!, கொடிய விலங்கான அவ்வளவு பெரிய சிங்கம் வந்தது தெரிந்தும் அலறாத தாங்கள், இந்த அற்ப ஜந்தான எறும்பின் கடிக்கு அலறுகிறீர்களே!" என்று கேட்டான் சின்மயாணந்தா.

அதற்கு அமரநாதர், "சிஷ்யா! சிங்கம் வந்தபோது நான் கடவுளோடு சேர்ந்திருந்தேன். அதனால் எனக்குப் பயம் வரவில்லை. ஆனால் இந்த எறும்பு கடித்தபோது நான் ஒரு மனிதனோடு அல்லவா சேர்ந்திருக்கின்றேன். அதனால்தான் அலறிவிட்டேன்" என்றார்.

மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள வேறுபாட்டை அப்பொழுதுதான் உணர்ந்தான் சின்மயானந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பேரவை பிரயோசனமாகுமா?

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை பற்றி அரசியல் கட்சிகள் மட்டத்திலும் பொதுமக்கள் மத்தியிலும் கதைக்கப்பட்டு வருகிறது. அது பயனளிக்கும் என்ற வகையில் சிலரது கருத்துக்கள் இருக்க, அது பயனளிக்காது என்றதாகப் பலரது கருத்துக்கள் இணையப்பக்கங்களிலும் முகப் புத்தகங்களிலும் வந்துசெல்கின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு என்னத்தைச் செய்யப் போகிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. அமைப்பு ரீதியாக சமயம், கலாசாரப் பண்பாடு, சமூக நெறி என்பனவற்றைக் கண்காணித்து முன்னெடுத்துச் செல்வதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் அரசியல் ரீதியாகவும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டு அதனை மையப்படுத்தியதாகவே அது நகர்ந்து செல்வதனை அந்த அமைப்பின் இதுவரை யான அறிக்கைகள், நடவடிக்கைகள் மூலமாகக் காணமுடிகிறது.

ஏற்கனவே பல கட்சிகள் வடக்குக் கிழக்கில் உள்ளன. அவற்றில் சில கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவெடுத்து இயங்குகின்றன. இந்நிலையில் புதிதாக அந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை ஏன்? அது தேவை தானா என்பன பற்றிய வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்று இருக்கையில் - கூட்டமைப்புடன் ஒப்பிடுகையில் அந்தப் பேரவையின் உருவாக்கம் வெறும் அமைப்பு மட்டும்தான். கூட்டமைப்பு மலையளவு பலமுடையது என்றால் அந்த அமைப்பு வெறும் சாதாரண புல்தான். ஆனால் அது எந்த வரையறைக்குட்பட்டதாக இருக்கும் என்றும் இப்பொழுது கூற முடியாது.

முதலமைச்சரும் சில மருத் துவர்களும்தான் அதனைக் கொண்டு செல்கின்றனர். அதனுடன் இணைந்து ஏனையவர்களும் செயற்படுகின்றனர். அந்த அமைப்பின் உருவாக்கம் பற்றி கூட்டமைப்பும்




அவதானித்துள்ளது என்பதனைக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரின் அண்மைய கருத்துக்கள் தெரிவிக்கின்றன. தவிர அது ஜனநாயக ரீதியான அமைப்பு அல்ல என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். அதேவேளை கூட்டமைப்புக்குக் குந்தகம் விளைவித்தால் அது தமிழருக்குச் செய்யும் துரோகம் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார். அதனை எவரும் மறுக்க மாட்டார்கள். ஏனெனில் கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களுக்காகத்தான் இருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பேசிக் கொண்டிருப்பது கூட்டமைப்புத்தான். அரசுடன் தேவையான இடத்தில் சேர்ந்தும், தேவையான இடத்தில் எதிர்த்தும், தேவையான இடத்தில் அரசுடன் சண்டை யிட்டும், முரண்பட்டும், தேவையான இடத்தில் இணங்கியும் போக வேண்டியுள்ளது. இந்நிலையில் அந்தப் பேரவை அரசியல் ரீதியான எந்த நடவடிக்கையையும் எடுக்கப் பலமற்றது என்றுதான் இப்போதைக்குக் கூறமுடியும். ஆனால் அரசியலில் விரைவில் வளர்நதுவிட வேண்டும் என்பது அந்தப் பேரவையிலுள்ளவர்களின் உள்நோக்கம் என்பதனை மறுக்க முடியாது.

தவிர அதில் இணைந்துள்ளவர்களில் ஏற்கனவே தனித்து இயங்கிப் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் உள்ளனர். அவர்களால் அந்தப் பேரவையில் எந்தளவு தாக்கத்தைக் கொண்டு வர முடியும் என்பதும் கேள்விக்குறியே.

இன்னொரு வகையில் அந்த அமைப்பு, கூட்டமைப்புக்கு தேவையான இடத்தில் அழுத்தம் கொடுக்கும் அமைப்பாக இருக்க வழி வகுக்கும் என்பதனை மாத்திரம் ஏற்றுக் கொள்ளலாம். எந்தவொரு கட்சிக்கும் மாற்றுக் கட்சி தேவை என்ற நடைமுறைக்கு ஏற்ப அந்தப் பேரவை இருக்குமாயின் வரவேற்கத்தக்கது. அதனை மீறி அமைப்புச் செயற்படுமாயின் அது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பதனைக் கூறமுடியாது. ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போனவர்களுக்கு அதன் அனுபவம் நன்றாகப் புரியும்.

எனவே பொது நலன்கருதி, நல்ல விடயத்துக்காக அது செயற்படுமாயின் ஏற்கமுடியும். அதிலிருந்து விலகுமாயின் - சுய நலத்தைக் கைக்கொண்டு செயற்பட முற்படுமாயின் அதிலுள்ள சிலர் போன்றே அந்த அமைப்பும் விரைவில் மக்களால் நிராகரிக்கப் பட்டுவிடும். ஏனெனில் மக்கள் முன்பாகவுள்ள மிகப்பெரும் பிரச்சினை அரசியல் தீர்வும் நிம்மதியான உரிமையுடனான வாழ்வும்தான். ஏற்கனவே அனுபவப்பட்டுத் தெளிந்துள்ள மக்கள் இத்தகையவற்றை அவதானிப்பர் என்பதனை மறுக்க முடியாது. அது முதலமைச்சராக இருந்தாலும் சரி எவராக இருந்தாலும் சரி என்பது நாடறிந்த உண்மை அனுபவம்.



# எண்ணம் ஒரு விதை

றிசானி

**தோ**ட்டங்களில் இருந்து தான் எருக்கும் கிளம்புகின்றது; மல்லிகையும் மலர்கின்றது.

பண்டுத்தப்படாத தோட்டத்தில் கரும்பும், காளானும், எருக்கும் முளைக்கின்றன. பண்படுத்திச் சரியான விதையிட்ட, செடி நட்ட தோட்டத்திலிருந்து மல்லிகையும், முல்லையும், ரோஜாவும் மலர்கின்றன. எண்ணங்கள் விதைகள்; அவை காற்றில் மிதக்கின்றன. மனம் ஒரு தோட்டம். நாம் தான் தோட்டக்காரர். என்ன விதையைத் தேர்ந்தெடுக்கின்றோம் என்பது, என்ன விதமான தோட்டத்தை நாம் விரும்புகின்றோம் என்பதைப் பொறுத்தது.

சிலர் மகத்தானவர்களாகப் பிறக்கிறார்கள். சிலர் மகத்தானவர்களாகிறார்கள். சிலர் மீது மகத்துவம் சுமத்தப்படுகின்றது இப்படிச் சொன்னவர் உலக நாடக இலக்கியத்தில் இன்றுவரை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சக்கரவர்த்தியாகத் திகழும் சேக்ஸ்பியர்.

எருமை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனாக வாழ்க்கையைத் தொடங்கி, ஒரு மோட்டார் சைக்கிளைக் கழற்றிப் பூட்டிநாடு புகழும் விஞ்ஞானியாக, பெரிய தொழிலதிபராக இருந்து மறைந்தவர் ஜி.டி.நாயுடு. வீட்டுக்கு அடங்காப் பிள்ளையாக, வசதியிருந்தும் வீட்டை விட்டு ஓடி, துறவியாகப் பிச்சை எடுத்து அலைந்து திரிந்து பின்பு, தந்தையால் கண்டு பிடிக்கப்பட்டு தமிழ் மக்களின் தன்மான உணர்ச்சியைச் சிலிர்த்தெழச் செய்து ஒரு பேரியக்கத்தைக் கட்டியவர் தமிழினத் தலைவர் தந்தை பெரியார்.

பிறர் உவக்கிறார்களோ இல்லையோ, என் கொள்கையை நான் சொல்வேன் என்று தமிழகத்தில் இதுகாறும் பிறந்தவர்களில், நினைத்ததைச் சொன்னதற்காக அவர் அனுபவித்த எதிர்ப்புக்களையும் அவர் ஏற்றுக்கொண்ட அவமானங்களையும் இது வரையில் ஏற்றவர்கள் எவரும் இல்லை.

இப்படி வெற்றி பெற்ற எவரது வாழ்க்கை ஏட்டை வேண்டுமானாலும் புரட்டிப் பாருங்கள். அவர்கள் எந்த அணி, எந்தக் கட்சி, எந்த ஜாதி, எந்த மதம், எந்த நாடு, எந்த இனம் என்ற குறுகிய அளவுகோல்களை கொஞ்சம் அப்புறம் தள்ளிவையுங்கள்.

அதோ என்னையும் உன்னையும் போன்ற ஒரு மனித ஜீவன். கருவில் பிறந்து தாய்ப்பால் குடித்து, இந்த உலகம் என்ற பரந்த மேடையில் வாழ்க்கை என்ற நெடிய விளையாட்டைத் தனக்கென ஒரு விதி வகுத்து உழன்று வருந்தி போராடி வென்று உயிரின் சக்தி பொங்கிக் கொந்தளித்து நிற்கும் ஒரு மனித ஜீவன். அந்த மனிதர் எவராயினும் அவரிடம் எத்தனை குறைகளை மாற்றார் எடுத்து சொன்ன போதிலும், இன்று அவர் பெற்றுள்ள வெற்றிக்கு அவர் உழைப்புத்தானே காரணமாகி இருக்க முடியும். அவர் தேர்ந்தெடுத்த முறைதானே காரணமாகும். கனியைப் பார்க்கும் ஒருவன் அதன் ருசியைச் சுவைக்கின்றானே தவிர

“சிலர் மகத்தானவர்களாகப் பிறக்கிறார்கள். சிலர் மகத்தானவர்களாகிறார்கள். சிலர் மீது மகத்துவம் சுமத்தப்படுகின்றது இப்படிச் சொன்னவர் உலக நாடக இலக்கியத்தில் இன்று வரை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சக்கரவர்த்தியாகத் திகழும் சேக்ஸ்பியர்.”

விதையைப் பற்றி எண்ணுவதில்லை. மலரை நுகரும் ஒருவன் அது வளர்ந்த விதத்தைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. அப்படித்தான் மேதைகளிடம் எண்ணங்களின் முடிவுகள் கண்டு நம் மனதைப் பறிகொடுக்கிறோம். பல சமயம் அதிர்ஷ்டக்காரன் என்று எமது பொறாமையைத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லாம் அப்படி அமைந்தது அவனுக்கு. என்று கூறி நமது இயலாமையைச் சமாதானம் செய்து கொள்கிறோம். உண்மை அதுவல்ல. அவன் நல்ல சரியான எண்ணங்களை விதைத்தான், வளர்த்தான், அறுவடை செய்கின்றான். விசயம் தெரியாதவர்கள் மனம் என்ற தோட்டத்தைப் பற்றியோ நல்விதைகளின் வலிமை பற்றியோ, மனதைப் பண்படுத்தும் முறைகள் பற்றியோ தெரிந்து கொண்டதில்லை, கேள்விப்பட்டதில்லை, சிந்தித்ததில்லை. நீங்கள் பலரிலும் மேம்பட்டவர் எவருக்கும் தாழ்ந்தவர் அல்ல. எங்குமே நீங்கள் கடைசியில் இருக்க வேண்டியதில்லை. உங்களாலும் ஒன்றை, அழியாத ஒன்றை அழிந்து போகும் இந்த வாழ்க்கையில் சாதிக்க முடியும். இந்த நம்பிக்கையோடு உங்களையே ஆராயுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழ்நிலைக்கேற்ப செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மித மான இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் நலனுக்காக, பெண்கள் பாடுபடுவர். ஆரோக் கிய விடயத்தில் அக்கறை உண்டாகும்.

**இடபம்:** உதவும் மனப்பான்மையுடன் செயல் படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். வாகனப் பயணத் தால் இனிய அனுபவம் ஏற்படும்.

**மிதுனம்:** அவமதித்து பேசியவர் கூட நட்புப் பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். குடும் பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், மித மான இலாபம் கிடைக்கும். பெற்றோர் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** பணியை விரைந்து முடிக்கும் சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், இலா பம் சுமாராக இருக்கும். பிறர் பார்வையில் அதி கம் செலவு செய்ய வேண்டாம். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கன்னி:** எதிரியும் கூட உங்களிடம் மதிப்புடன் நடப்பர். தொழில், வியாபார வளர்ச்சியால், வரு மானம் உயரும். நண்பர்களுடன் பேசி மகிழ் வீர்கள். உறவினரால் உதவி கிடைக்கும்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக் கும். அரசியல்வாதிகளுக்கு எதிரித் தொல்லை விலகும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், குறுக் கிடும் தடைகளைச் சரி செய்வீர்கள். இலாபம் சுமார். பெண்கள் குடும்ப நலன் குறித்து ஆலோசிப்பர்.

**தனுசு:** குடும்பச் சிரமத்தை, மற்றவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாற்றம் உருவாகும். உறவினரால் நன்மை கிடைக்கும்

**மகரம்:** நண்பர்களின் ஆலோசனையை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியா பாரத்தில், மூலதனம் தேவைப்படும். இலாபம் உயரும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் புத்தாடை அணிகலன் வாங்குவர்.

**மீனம்:** நண்பர்களின் செயலால் வருத்தம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்குவர். வாகனப் பயணத்தில் மித வேகம் தேவை.

# அழகு குட்டி செல்லம்
## பிறந்த குழந்தையை மையப்படுத்தும் கதை





மெர்க்குரி நெட் ஓர்க் சார்பில் அந் தோணிசாமி தயாரிக்கும் படம், "அழகு குட்டி செல்லம்". தம்பி ராமையா, "ஆடுகளம்" நரேன், கருணாஸ், ஜான் விஜய், ரித்விகா ஆகியோர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். விஜய் ஆம்ஸ்ட் ராங் ஒளிப்பதிவு செய்துள்ளார். வேத் சங்கர் இசை அமைத்துள்ளார்.

படத்தை இயக்கி உள்ள சார்லஸ் கூறிய தாவது:

இந்த உலகம் இயங்கிக் கொண்டிருப்பது குழந்தைகளால் தான். குழந்தைகள் இல்லாவிட்டால் உலகம் இல்லை. பிரச்சினைகளும் குழந்தைகளால் தான் உருவாகிறது. அதற்குத் தீர்வும் குழந்தைகளிடம் தான் உள்ளது. இந்த விடயத்தை மையமாக வைத்து உரு வாகி இருக்கும் படம் தான் இது.

ஒருபிறந்தகுழந்தையின்வாழ்க்கையில் நிறைய பாத்திரங்கள் வந்து போகி றார்கள். அவர்களுக்குத் தனித்தனி கதை இருக்கிறது. அனைவரின் கதைக் கும் இந்தக் குழந்தை தான் மையப் புள்ளி. இப்படி ஒரு வித்தியாசமான திரைக்கதையில் படம் உருவாகி உள் ளது. குழந்தைகள் அனாதையாக்கப் படுவது மனித நாகரிகத்தின் ஆகக் கொடுமையானது, காட்டுமிராண் டித்தனமானது என்கிற கருத்தை வலுவாக முன் வைக்கும் படம் இது எனக் குறிப்பிட்டுள்ளார்.



நான் கல்லறைக்கு சென்ற பின்பும் அவளின் கண்ணீர் முட்களாய் குத்துகிறது என் இதயத்தில்!!!

வாழ்க்கையில் நிம்மதி தேவை என்றால், ஞாபக மறதி நிச்சயம் தேவை!!

## நட்புனா என்னானு தெரியுமா



mid night ல friend தூங்கிட்டு இருந்தாலும்




நண்பன்:- ஏன்டா சோகமா இருக்க ?
நண்பன்:- எனக்கு மூளை காய்ச்சலா இருக்குமோனு டாக்டர் சந்தேகப்படறார்டா
நண்பன்:- அதெல் லாம் கண்டிப்பா இருக்காதுடா மாப்ளே
நண்பன்:- எப்படிடா உறுதியா சொல்றே
அதெல்லாம் மூளை இருக்கிறவங்களுக்கு தாண்டா வரும்..... நம க்கெல்லாம் வரவே வராது மாப்ளே...பன்றி காய்ச்சல்னு சொன்னலாவது கொஞ்சமாவது நம்பலாம்.......
டோண்ட்வொர்ரி....
நண்பன்:- !!!!

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 6 | | | 5 | | 7 | |
| | 1 | 7 | 9 | | 4 | | | 8 |
| | | | | 7 | | | | |
| | | | | | | | 3 | |
| | | 4 | 6 | | 1 | 9 | | |
| | 6 | | | | | | | |
| | | | | 9 | | | | |
| 7 | | | 2 | | | | 9 | |
| | 4 | | 3 | | | 1 | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 2 | 8 | 6 | 1 | 4 | 9 |
| 2 | 6 | 1 | 7 | 4 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 4 | 8 | 5 | 9 | 2 | 3 | 6 | 7 | 1 |
| 9 | 3 | 7 | 1 | 6 | 4 | 5 | 8 | 2 |
| 1 | 2 | 6 | 5 | 7 | 8 | 9 | 3 | 4 |
| 6 | 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 |
| 5 | 4 | 9 | 6 | 1 | 7 | 8 | 2 | 3 |
| 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரேகோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இதில் ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகஅளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | — | 100 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 250 | 250 | 250 | 120 | 260 | 160 | 110 |
| கரட் | 250 | 270 | 320 | 220 | 300 | 300 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 50 | 30 | 30 |
| பயிற்றை | 250 | 280 | 230 | 220 | 260 | 300 | 250 |
| பாகல் | 250 | 320 | 300–500 | 300 | 300 | 380 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 90 | 80 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 70–120 | 140 | 140 | 180 | 120 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 | 40 | 80 | 40 |
| தக்காளி | 150 | 170 | 150 | 140 | 150 | 140 | 150 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 |
| கீரை | 20 | — | 40 | 20 | 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 30 | 50 | 30 | 40 | 60 |
| பச்சை மிளகாய் | 800 | 800 | 700 | 200 | 700 | 1000 | 700 |
| புடோல் | 120 | 130 | 120 | 120 | 120 | 160 | 120 |
| கோவா | 120 | 200 | 160 | 160 | 160 | 160 | 150 |
| வெண்டி | 160 | 140 | 130 | 120 | 170 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 340 | 300 | 280 | 280 | 320 | 250 |
| லீக்ஸ் | 180 | 180 | 160 | 280 | 180 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 60 | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 90 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 200 | 120 | 180 | 120 | 60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 400 | — | 500 | 340 | 400 | — | 350 |
| இராசவள்ளி | 250 | 150 | 150 | 180 | 180 | 160 | 200 |

# சமையலில் தண்ணீரின் அளவு மிக முக்கியம்



சமையலில் எப்போதுமே உப்பும், தண்ணீரும் சரியான அளவில் இருப்பது தான் மிகவும் முக்கியம். தண்ணீரை எவ்வளவு ஊற்ற வேண்டும், உப்பை எவ்வளவு போட வேண்டும் என்று தெரிந்து விட்டால் நீங்கள் தான் சமையல் உலகில் ராணி.

பொதுவாக குக்கரில் சோறு சமைக்கும் போது அதில் நீங்கள் ஊற்றும் நீரின் அளவு சரியாக இருந்தால் தான் சோறு உதிரியாக வெந்து இருக்கும். இல்லையேல், சோறு குழைந்தோ, அல்லது அரை வேக்காடாகவோ இருக்கும். இது போலத் தான் உப்புமா, பொங்கல் போன்ற உணவுகள் சமைக்கும் போதும், தண்ணீர் ஊற்றுவது மிகவும் சரியாக இருக்க வேண்டும். எப்போதும் ஒரே அளவில் அரிசி, பருப்பு, ரவை போன்றவற்றைப் போட்டு செய்யும் போது அதற்கான சரியான அளவை நீங்கள் ஓரிரு முறை சமைக்கும் போதே தெரிந்து கொள்ளலாம். குழம்போ, கூட்டோ தண்ணீர் அதிகமாக இருப்பின் அதனை எளிதாக மாற்றும் வழிகளையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

## நாளை

மார்கழி -13
செவ்வாய்க்கிழமை 29.12.2015
திதி: சதுர்த்தி மா.05.36
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.03.19
ராகுகாலம்: 03.28-04.58 வரை
சுபநேரம்: 10.58- 12.23 வரை
சங்கடஹர சதுர்த்தி





## எள் உருண்டை

**தேவையானவை:**
எள் - 1 கப்
வெல்லம் - ஒரு கப்

**செய்முறை:**
எள்ளைச் சுத்தம் செய்து, தாச்சியில் போட்டு வறுத்துக் கொள்ளவும். அதனுடன் வெல்லம் சேர்த்து இடித்து, சிறு உருண்டைகளாகப் பிடிக்கவும்.

## இது புதுசு





### பெண்களின் ஆடைகளுக்குப் பொருத்தமான நெற் துணிகள்

பெண்களுக்கான ஆடைகளைக்கடைகளில் பெற்றுக் கொள்வதை விட சிலருக்கு தாமே வடிவமைத்து தைப்பது பிடிக்கும். தற்போது ஈயக் கூடிய நெற் வகைத் துணிகள் மிகவும் பிரபலம். பல வர்ணங்களில் விற்பனை செய்யப்படும் இந்த வகைத் துணிகள் ஒரு மீற்றர் 550 - 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | 500 | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 600 | - | - |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 400 | 350 |
| விளை | 650 | 500 | 250 | 450 | 500 | 400 |
| மூரல் | 250 | 350 | 300 | 300 | - | - |
| கும்பிளா | 300 | 300 | - | 400 | - | - |
| கிழாக்கன் | 400 | 800 | - | 400 | - | - |
| ஓரா | 300 | 450 | 300 | 400 | - | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 350 | 100 | 300 |
| நகரை | 150 | 250 | - | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | - | - |
| ஒட்டி | 200 | 150 | 250 | 300 | 350 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | - | - |
| மதனம் | 250 | 200 | 280 | 400 | 200 | - |
| கொய் | 100 | 150 | - | 350 | - | 250 |
| பாலை | 100 | 150 | 70 | 100 | 100 | - |
| வாழை | 150 | 200 | 200 | 250 | - | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2015 ஆம் ஆண்டின் 100 சிறந்த நிறுவனங்கள் தரவரிசையில் இலங்கையின் சிமெந்து உற்பத்தியாளரான டோக்கியோ சிமெந்து மீண்டும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தரவரிசையில் 25 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.
உற்பத்தியாளர் பிரிவில், டோக்கியோ சிமெந்து, முதலாமிடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், புத்தாக்கம் மற்றும் தரம் ஆகியவற்றுக்காக இந்தக் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. (ஐ)




# பெண் நோயியல் புற்றுநோய் இனங்காணல் விழிப்புணர்வு

Fresenius Kabi தனது உள்நாட்டு பங்காளரான மலாக்கி ஹோல்டிங்ஸ் (Markss HLC பிரைவட் லிமிட்டெட்டின் முழுமையான உரிமையாண்மையின் கீழ் இயங்கும் அங்கத்துவ நிறுவனம்), உடன் இணைந்துபெண்நோயியல்புற்றுநோய் இனங்காணல் தொடர்பான விழிப்புணர்வை Sri Lanka Gynecological Cancer Society and Colposcopy and Cervical Pathology Association இல் அறிமுகம் செய்திருந்தது.

இந்த அறிமுக நிகழ்வு சினமன் லேக்சைட், கொழும்பு ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், British Society for Colposcopy and Cervical Pathology (BSCCP) இன் தலைவர் பேராசிரியர் எம்.ஈ.குருயிக்ஷாங்க், பேராசிரியர். ஜோன் டைடி (BSc, MD, FRCOG) PresidentdElect of the British Society for Colposcopy and Cervical Pathology (BSCCP), President elect of the British Gynecological Cancer Society Consultant Gynecologist/ Gynecological Oncologist UK வைத்தியர். அன்டி நோர்டின் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

Fresenius Kabi என்பது பெண்களில் ஏற்படும் புற்றுநோய் தொடர்பில் சிகிச்சைகளை வழங்க அவசியமான மருந்துகள் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகளை வழங்குவதில் முன்னோடியாக திகழ்வதுடன், தீவிர பராமரிப்புகளை வழங்குவது தொடர்பில் சர்வதேச ரீதியில் தற்போது ஈடுபட்டு வருகிறது. தமது சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளின் ஓரங்கமாக, Sri Lanka Gynecological Cancer Society and Colposcopy and Cervical Pathology Association இனால் முன்னெடுக்கப்படும் பல செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்க இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

மலாக்கி ஹோல்டிங்ஸ் பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில், இந்த செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்குவதையிட்டு தமது நிறுவனம் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார். British Society for Colposcopy and Cervical Pathology இன் தலைவர் பேராசிரியர் எம்.ஈ. குருயிக்ஷாங்க் பெண் பிறப்பு உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

**வணிகம்**

Sri Lanka Gynecological Cancer Society and Colposcopy and Cervical Pathology Association இன் ஸ்தாபகரும் தலைவருமான வைத்தியர். கனிஷ்க கருனாரட்ன இந்நிகழ்வில் உரையாற்றும் போது, Sri Lanka Society for Colposcopy and Cervical Pathology உடன் கைகோர்த்து செயலாற்றுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கமளித்திருந்ததுடன், அதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்ய முடியும் என்றார். (ஐ)

# நுட்பம்



## சூரியப் படலங்களுக்கு புதிய கண்ணாடிப் பூச்சு

சுவட்டு எரிபொருள்கள் தொடக்கம், அணு செறிவாக்கல் முறை வரை பல்வேறு முறைகள் மின்சக்தி உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் அண்மைக்காலமாக சூரிய படலம் மூலமான மின் உற்பத்தியே பல நாடுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், நடைமுறைப் படுத்தப்பட்டும் வருகின்றது.

அதையடுத்து சூரிய படல மின்சக்தி உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளும் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஓர் அங்கமாக தற்போது எந்தவொரு கோணத்திலிருந்தும் சூரிய ஒளியை பெற்றுக் கொள்ளக் கூடிய விசேட கண்ணாடிப்பூச்சு ஒன்றை சவூதி அரேபியாவிலுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அப்துல்லா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன் இவை தூசு படிவதிலிருந்து சுயமான பாதுகாப்பைக் கொண்டனவாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மடிக்கணினியின் திரையை தொடுதிரையாக்கும் சாதனம்

தற்காலத்தில் தொடுதிரை தொழில்நுட்பத்தையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். தற்போது கைபேசிகள் தொடுதிரை தொழில்நுட்பத்துடன் அளவு கணக்கில்லாது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் மடிக்கணினியைப் பொறுத்த வரையில் அது குறைவாகவே உள்ளது.

இந்தநிலையில் சாதாரண திரையுடைய மடிக் கணினிகளைத் தொடுதிரை மடிக் கணினியாக மாற்றக் கூடிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுவீடனைச் சேர்ந்த நியாநொடு எனும் நிறுவனம் இந்தப் புதிய கருவியை அறிமுகப் படுத்தியுள்ளது.

கண்ணுக்குப் புலப்படாத ஒளிக்கதிர்களை திரையின் மேற்பரப்பில் செலுத்துவதன் மூலம் சாதாரண திரையை தொடுதிரையாக மாற்ற முடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் புகைப்படங்களை பெரிதாக்கிப் பார்க்க முடியும் என்றும் அந்த நிறுவனம் கூறுகின்றது. அது மட்டுமின்றி கை விரல்களால் படங்களை வரைய முடியும் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கருவி முதற்கட்டமாக 15 அங்குல திரையைக் கொண்ட மடிக்கணிகளுக்கே அறிமுகப் படுத்தப்படவுள்ளது. எயா பார் என்று அழைக்கப்படும் இந்தக் கருவி அடுத்த ஆண்டு முதல் விற்பனைக்கு விடப்படும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ச்சிகள்...

### நல்லிணக்க

வதற்காக அரசு தயாராகி வருவதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

நல்லிணக்கம் தொடர்பாக அமைக்கப்படும் பொறிமுறைக்கு பொதுமக்களிடமிருந்து அடுத்த மாதம் முதல் கருத்துக்கள் பெறப்படவுள்ளது. இதற்காக பிரேத்தியேக இணையத்தளமொன்று வெளியிடப்படவுள்ளது.

உண்மையைக் கண்டறிதல், நீதி, நல்லிணக்கம் மற்றும் இழப்பீடு வழங்கல் போன்ற செயல்முறைகளின் முதல் பணியாகவே இந்தச் செயற்பாடு அமையும்.

இதன்மூலம் நல்லிணக்கம் தொடர்பாக அமைக்கப்படும் பொறிமுறை குறித்து பொதுமக்கள் தமது கேள்விகளை இணையத்தளத்தின் ஊடாக முன்வைக்க முடியும். அதற்கான பதிலை அரசு இணையத்தளத்திலேயே முன் வைக்கும். அத்துடன் பொதுமக்களும் தமது கருத்துக்களைப் பதிவு செய்ய முடியும். இது இணையம் சேர்ந்த செயல்முறையாக இருக்கும்.

அத்துடன், இந்தச் செயல்முறையின் இரண்டாவது கட்டத்தில் இராணுவம், காணமற்போனோரின் குடும்பங்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட குழுக்களின் ஆலோசனைகள் பெறப்படும்.

இந்தச் செயற்பாடுகளின் பின்னர் தேசிய செயலணி, நிபுணத்துவ ஆலோசனை செய்து நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறையை அமைக்கும். நல்லிணக்கம் தொடர்பான செயலகம் அமைப்பதற்கு அமைச்சரவை அண்மையில் முடிவெடுத்திருந்தது. இது தொடர்பில் தற்போது அரசு ஆராய்ந்து வருகின்றது.

எனவே நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறையை அமைப்பதற்கான இறுதி செயல்முறையே மக்களின் ஆலோனை பெறும் நடவடிக்கை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகசினி கொலன்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உண்மையைக் கண்டறிதல், நீதி, நல்லிணக்கம் மற்றும் இழப்பீடு வழங்கல் தொடர்பான பொறிமுறை அமைப்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் இலங்கையின் பங்குதாரர் நாடுகளிடம் ஆலோசனை பெறப்படும் என கடந்த செப்ரெம்பரில் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வில் உரையாற்றும் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தார்.

அத்துடன், பொறுப்புக் கூறல் செயற்பாட்டுக்கு சுயாதீன நீதிப் பொறிமுறை ஊடாக தீர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் திட்டத்தின் 93 ஆவது அம்சமென வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### தாஜுதீனின்

கப்டன் திஸ்ஸ குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருக்கு நிச்சயமாக வேறு பெயர் ஏதாவது இருக்கவேண்டும். நாங்கள் கப்டன் திஸ்ஸ என்பவர் குறித்து உள்ளக விசாரணையை மேற்கொண்டுள்ளோம். இதன்போது கப்டன் விமலசேன என்பவரை இனம்கண்டுள்ளோம். நாங்கள் இராணுவ விதிமுறைகளைப் பின்பற்றி அவருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கின்றோம் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இராணுவப் பேச்சாளரும் இந்த விடயத்தை உறுதிசெய்துள்ளார். இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளதாவது:-

சந்தேகநபர் மிகமுக்கிய அரசியல் வாதியின் வாகனச் சாரதியாகச் செயற்பட்டுள்ளதைக் கண்டுபிடித்துள்ளோம். ஆனால் நீங்கள் குறிப்பிடும் திஸ்ஸவும் அவரும் ஒரே நபரா என்பது தெரியவில்லை.

அத்துடன் இராணுவம் குற்றப் புலானய்வுப் பிரிவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. இராணுவம் ஊடகங்களுக்கு எதனையும் மறைக்கவில்லை. இராணுவத்தில் கப்டன் திஸ்ஸ என்று எவரும் இருக்கவில்லை. விமலசேன என்பவரே இருக்கின்றார் என்றார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வாகன சாரதியான இராணுவத்தைச் சேர்ந்த திஸ்ஸ என்பவருக்கு ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் படுகொலையுடன் தொடர்புள்ளது எனவும் அவரை விரைவில் கைது செய்வோம் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கணேசன்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 35/1, குமாரவீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கணேசன் 22.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சீதாலெட்சுமி காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், முத்துலிங்கம், செந்திவேல், நவரத்தினம் மற்றும் இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தேவசேனா, பராசக்தி, சற்குணாம்பாள், காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/1, குமாரவீதி,
நல்லூர். (67107)(11,15,7,18)

தகவல்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அருள்நேசம்(ராணி) சின்னத்துரை



யாழ்.சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இல.234, பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்நேசம் (ராணி) சின்னத்துரை 26.12.2015 சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் செல்லையா - சரஸ்வதியின் அன்புமகளும், கணபதி சின்னத்துரையின் அன்பு மனைவியும், கோகிலவாணி (பிரான்ஸ்), சசிவதனா, சதீஸ்வரன், தவனீதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாபு மற்றும் ஜெனி ஆகியோரின் மாமியாரும், தங்கராசா, தவராசா, றெனிற்றா, கலாவதி, ஸ்ரீமோகன், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தா,சொர்ணமலர், கோபால், யோகலிங்கம, சசி, சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சலோஜன், தனுசன் (பிரான்ஸ்), வினு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.12.2015) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலியாறு,
பாண்டியன் குளம். 077 234 5527

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/28178)(11,15)

### ஆறுமுகம் பாலகிருஷ்ணன்

(B.Sc (Hons) Landon)
(ஓய்வுபெற்ற பிரதம இரசாயனர் - காகிதத் தொழிற்சாலை, வாழைச்சேனை-
SRILANKA PATENT
விருதுபெற்றவர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், தொல்புரம், சுழிபுரம் ஆகிய இடங்களில் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலகிருஷ்ணன் 26.12.2015 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும்,காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும்,கமலாதேவியின் பாசமிகு கணவரும்,திருமதி வி.கலாவதி (ஜேர்மனி), கோபிரமணா (ஆசிரியர்),திருமதி அனுஷா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மு.விக்னேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி கோ.சியாமினி (ஏழாலை), ச.ஞானறாஜன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷிகா (ஜேர்மனி), வினோஜிகா (ஜேர்மனி), கோகுலன் (ஏழாலை), கோவர்த்தினி (ஏழாலை), லக்ஷயா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேரனும்,காலஞ்சென்ற ஆ.கமலாம்பிகை , கு.ஞானாம்பிகை, ஆ.இராதாகிருஷ்ணன் மற்றும் திருமதி சி.லோகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சி.இராமச்சந்திரன், சி.தெய்வநாயகி, மு.வள்ளிநாயகி, சி.வரதராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அ றிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கம்பனை,
சுழிபுரம் மத்தி,
077 669 0232
077 959 3159

தகவல்:
குடும்பத்தினர்.
(67145) (13.15)

## மரண அறிவித்தல்

### திருமதி மாலினி யோகேஸ்வரன்



நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 34/25, 2ஆம் ஒழுங்கை, கோவிற்புதுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினி யோகேஸ்வரன் 25.12.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் யசோதராதேவி தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி கிருஷ்ணசாமி- அன்னபூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், திருயோகேஸ்வரனின் பாசமிகு மனைவியும், தனீஸ்காந்த், சுஜீவ்காந், யுஜேகாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், மதிவதனன், மோகனராஜன், காலஞ்சென்ற பாஸ்கரன், பாமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வகீதா,பத்மராணி, சிவஸ்ரீதரன், காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் மற்றும் தருமதேவி, தவமணிதேவி, தயாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று மாலை 4.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோவிற்புதுக்குளம் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| இல.34/25, 2ஆம் ஒழுங்கை, கோவிற் புதுக்குளம், வவுனியா. (66661)(11,15) | தகவல். கிருஷ்ணசாமி யோகேஸ்வரன் (கணவர்). | தொடர்பு: 024 567 0817 077 760 7391 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருளம்மா நீக்லாப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா நீக்லாப்பிள்ளை 26.12.2015 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் நீக்லாப்பிள்ளையின் அருமை மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2015) திங்கட்கிழமை 3.00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| 89, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். (67156) | தகவல்: குடும்பத்தினர். |

## திருமதி மரகதவல்லி (தங்கம்) கனகசபை



மூளாய் மத்தி, மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரகதவல்லி கனகசபை நேற்று (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பார்வதி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான மறவன்புலோ கணபதிப்பிள்ளை- தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் (ஓய்வுநிலை அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், சிவசுப்பிரமணியம், கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சதாசிவம், நாகம்மா, நிலாயதாட்சி, சுந்தரம்பிள்ளை மற்றும் காசிப்பிளளை சிவமலர் , தங்கச்சிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், சக்தீஸ்வரி, கமலேஸ்வரி, சிவனேஸ்வரி, ஞானேஸ்வரி, ஸ்ரீகணேசன், ஸ்ரீகுமார் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், கணேஸ்வரியின் பெரியதாயாரும், பராசக்தி, யோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் கேதீஸ்வரி, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மூளாய், சுழிபுரம். (67146)(11,15,17) | தகவல். ஜெயந்தினி (மருமகள்) (குமுதா) | தொடர்பு: 021 790 4765 077 645 0393 |

## வின்சன் வின்ஜக்ஷன்

(யாழ்.பரியோவான் கல்லூரி பழைய மாணவன்- வர்த்தகப் பிரிவு -2007)



பிறப்பு 1990.04.04 இறப்பு 2015.12.25

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் வின்ஜக்ஷன் 25.12.2015 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வின்சன் - கலாநிதி தம்பதியரின் அன்பு மகனும், ஜெயக்குமாரன் (P.J.பெர்னாண்டோ) - அபூர்வசீலி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சங்கீதாவின் அன்புக் கணவரும், சாரதாஜினியின் சகோதரனும், அக்ஷாவின் பாசமிகு மாமனாரும், அன்ரன் ஷாம், பிரியா, அசோக், ராஜ், தீபா, செல்வக்குமார், அருண், அஜித் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (28.12.2015) திங்கட்கிழமை மாலை 3 மணி அளவில் கொட்டடி இலங்கை பெந்தகோஸ்த்து சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 131, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (67146)(11,15,16) | தகவல். P.J.பெர்னாண்டோ (திரு.திருமதி ஜெயக்குமாரன்) | தொடர்பு: 077 275 9220 077 618 4717 |

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா கிருஷ்ணசாமி(பத்தர்)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

கச்சேரி, நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை(முடமாவடி வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கிருஷ்ணசாமி நேற்று(2015.12.27) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ர புதல்வரும் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற லட்சுமியின் அன்புக் கணவரும் சத்தியபாமா, நாகராசா காலஞ்சென்ற நல்லையா மற்றும் ருக்குமணி, குணரெத்தினம், புஸ்பராணி, சோமலிங்கம், இந்திராதேவி, பாலராஜா, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பூரணம், காசிப்பிள்ளை, கந்தசாமி, முருகையா மற்றும் சண்முகம், பாலசிங்கம்(துரை), நாகரத்தினம்(குண்டுமணி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் தெய்வேந்திரம்(செல்வா), தமிழ்ச்செல்வி, மகேந்திரன், விஜயன், கலாதேவி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலாதேவி (இந்திரா), இராஜேஸ்வரன், கலைச்செல்வி, யோகநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுகிர்தா, மதுமிதா காலஞ்சென்ற தட்சாயினி மற்றும் ஜெனிபா, யோகதீசன், சியான், நான்சி(ஜேர்மனி), தருண்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு (முடமாவடி வீதி) இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு(முடமாவடி வீதி)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பூமணி சண்முகம்



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சண்முகம் நேற்று (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் சண்முகத்தின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பதிவாளர் நீதிமன்றம்- சாவகச்சேரி), திசைவீரசிங்கம் (கனடா), காலஞ்சென்ற பரராசசிங்கம் (பரம்ஸ்-சாவகச்சேரி) மற்றும் யோகேஸ்வரி, நாகேஸ்வரி (ஜேர்மனி), காராளசிங்கம் (அமெரிக்கா), பூபாலசிங்கம் (கனடா), மகேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்,சாந்தினி,ஆகியோரின் அன்புத்தாயும், சிவமோகனாம்பிகை, லம்போதரன் (திருப்பதி -சாவகச்சேரி), சுபாஜினி, கமலவேணி, மோகனராஜ லிங்கம், பேவளிகுயின், சுதாஜினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சத்தியா, வித்தியா, கஜேந்திரா, நிரஞ்சினி, நத்தப்பிரகாஸ், பிரசாத், சுஜன், நிலானி, ரகுபரன்,மதிபரன்,ஐங்கரன், வாசுகி, சுனீந்திரன், காருண்யா, வசீதரன்,முரளீதரன்,கோபிகா, மதுமிதன், அனுமிதன்,லதாங்கி, அஜித், மிதுஷா, அபிநயா ஆகியோரின் பேர்த்தியும், அம்ஷனா, அபிசேக், நிஜிவன், அப்சரா, அக்ஷிகா, தக்ஷிகா அபசரா, பிரனீஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 605 3928

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி. (60889) (13.15)

## செல்லையா பாலகிருஷ்ணன்



துன்னாலை இந்திரன் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலகிருஷ்ணன் (பாலு) நேற்று (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், றஞ்சினியின் அன்புக் கணவரும், சுகந்தி, சுதர்சன் (கனடா), சுமணன், சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் , இராஜலட்சுமி, இராசம்மா, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும், ரகுநாதன் (கனடா), றஞ்சன் (கனடா), பாஸ்கரன் (கனடா), சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், சிவகுமார், பிரியதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சயன், கன்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2015)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 1943.04.04 மறைவு 27.12.2015

(62233)

இந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்

வேண்டுமென இலங்கையின் அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த செப்ரம்பர் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக, விசேட நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் கொண்ட குழு ஆராய்ந்து வருகிறது.

இதன் முதலாவது நடவடிக்கையாக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக, விசேட நீதிமன்றம் அமைப்பதற்கான விசேட சட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. இந்த விசேட சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த விசேட நீதிமன்றுக்கு சர்வதேச நீதிமன்றங்களில் கடமையாற்றிய இலங்கை நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

குறித்த பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்னர் நிறைவு செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அத்துடன் குறித்த விசேட நீதிமன்றம் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வில் அரசு அறிவிக்கவுள்ளது என அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்ளக் கூடிய வகையில், இப்போதே செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத்தொடர் நிகழ்ச்சி நிரலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

போர்க்குற்ற விசாரணைகளை எத்தகைய பொறிமுறையின் ஊடாக கையாள்வது என்பது தொடர்பிலான கலந்தாலோசனைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

ஜனவரியில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் முக்கிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாதத்தினுள் எவ்வாறு விசாரணைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பாக தீர்வு எட்டப்படும்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான பொறிமுறைகள் துரிதமாக கையாளப்பட்டு வருகிறது. யாரையும் திருப்திப்படுத்த பக்கசார்பான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்க முடியாது. பொறுப்புக்கூறல் விவகாரத்தை அரசு சரியாக கையாளும்.

அத்துடன், எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இப்போதே செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.-என்றார். (த-வி)

## தமிழ் மக்கள்

முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் வந்திருக்கும் நிலையில், தமிழரசுக் கட்சி சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் அழைக்கப்படாமல் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் நிலையில் எதற்காக அவர் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை எனச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தான் கட்சியின் முன்னாள் தலைவர்களில் ஒருவர் என்பதுடன், தாம் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் எனவும் தான் தமிழரசு கட்சியின் சார்பிலேயே கலந்துகொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இலங்கை தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள் பேரவை எந்தவிதமான அழைப்பையும் விடுக்கவில்லை. அத்துடன் கட்சி சார்பில் கலந்து கொண்டதாக கூறுகிறவர்கள் எங்களுடன் இந்த விடயம் தொடர்பாக பேசி எங்களுடைய அனுமதியைப் பெற்றுப் பேரவையில் கலந்து கொள்ளவும் இல்லை எனத் குறிப்பிட்டார். (வ-4-10)

## 24 படை

யாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், கடந்த வாரம் ஓய்வு பெற்றதையடுத்து, அந்தப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கான போட்டியில் இருக்கும் அதிகாரிகளில் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் முன்னணியில் இருக்கிறார். ஏற்கனவே இராணுவத் தலைமை அதிகாரி நியமனங்களின் போது, இரண்டு தடவைகள் இவர் ஓரம்கட்டப்பட்டிருந்தார்.

இவரைப் புறக்கணித்தே மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க மற்றும் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஆகியோர், முன்னர் இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

கவசப்படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், அடுத்த ஆண்டு ஓகஸ்ட் 11ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கான நியமனங்களின் போது, காலாற்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே அதிக முன்னுரிமை கொடுக்கப்படுவது வழக்கம்.

இதேவேளை, இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கான போட்டியில் காலாற்படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவும், பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவும் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் மைத்துனர்களாவர்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயசின் சமகாலத்தவர்களான மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா, மேஜர் ஜெனரல் சுமித் மானவடு, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோர், 55 வயதை எட்டும் நிலையில் ஓய்வு பெறவுள்ளனர்.

55 வயதுக்குப் பின்னர் மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

இதனால், தற்போது இலங்கை இராணுவத்தில் உள்ள 46 மேஜர் ஜெனரல்களில், 24 பேர், அடுத்த ஆண்டு ஓய்வுபெறவுள்ளனர்.

இதேவேளை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவும், அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## புலனாய்வு

பட்டுள்ளதாவது:-

அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் எஸ். சாலி, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோரிடமே இந்த வாரம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பிரகீத் எக்னெலிகொட விவகாரம் மற்றும் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்டது குறித்தும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தப்படவுள்ளது.

முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோருக்கும் விளக்கமளிக்கப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என ஏற்கனவே இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இரண்டு மூத்த அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அமெரிக்க

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

அமெரிக்காவில் உள்ள தனது மகள்களைப் பார்வையிடுவதற்காக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார். எனினும் அவருக்கு அமெரிக்கத் தூதுரகம் விசா வழங்க மறுத்து விட்டது.

இந்த நிலையில், அமெரிக்காவினுள் நுழைவதற்காக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தனது வதிவிட உரிமைப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்.

அமெரிக்க வதிவிடஉரிமைப் பத்திரத்தைக் கொண்டிருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, சிறையில் இருந்த போது, அது காலாவதியாகியிருந்தது. அதற்குப்பின்னர் அவர் அந்த வதிவிடஉரிமைப் பத்திரத்தைப் புதுப்பிக்கவில்லை.

தற்போது விசா மறுக்கப்பட்டதையடுத்து, தனது வதிவிட உரிமைப் பத்திரத்தைப் புதுப்பிக்குமாறு அமெரிக்கத் தூதுரகத்தில் விண்ணப்பித்துள்ளார்.

எனினும், வதிவிட உரிமைப் பத்திரம் புதுப்பித்தல் நடவடிக்கை அமெரிக்க தூதரகத்தினால் மேற்கொள்ளப்படுவதில்லை. அமெரிக்காவிலேயே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதனால், வதிவிட உரிமைப் பத்திரத்தைப் புதுப்பிக்க கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கான பதிலை அவர் எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான பதிலைப் பொறுத்தே சரத் பொன்சேகா அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## மழை

மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை நீடிக்கலாம் என்றும் மழை பெய்யும் வாய்ப்புள்ளதாகவும் யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். (வ-4)

## மரண அறிவித்தல்

### பரமேஸ்வரராசா யோகரூபகுமார்



பிறப்பு 13.10.1973

இறப்பு 26.12.2015

யாழ்.தேரியத்தோட்டம் சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் 132/14, மன்னார் வீதி, வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரராசா யோகரூபகுமார் (26.12.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற பரமேஸ்வரராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற அரசரத்தினம் மற்றும் அமிர்தலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சுமங்கலியின் (கவிதா- அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா) அன்புக் கணவரும், அபிராவின் (மாணவி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும், அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவகம், வலிகாமம்), ஜசோதா(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செந்தூரன், மற்றும் சுதர்சன் (நெதர்லாந்து), சண்முகி, கேசவன் (சுவிஸ்), நிரூபா (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2015) திங்கட்கிழமை அவரது வேப்பங்குளம் இல்லத்தில் பி.ப. 2.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சனாங்குளம் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 132/14, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. | தகவல்: குடும்பத்தினர். | தொடர்பு 077 6788009 |

## மரண அறிவித்தல்

### இந்திரதாசன் சுதர்சன்

(உப அலுவலக பொறுப்பதிகாரி- கரைச்சி பிரதேசசபை- கிளிநொச்சி)



கிளிநொச்சி முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இந்திரதாசன் சுதர்சன் கடந்த (25.12.2015) வெள்ளிக்கிழமை மாலை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் விந்தியாவின் (உதவித்தபால் அதிபர், கிளிநொச்சி) பாசமிகு கணவரும், ஜனோசன், தக்சயா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இந்திரதாசன் (ஓய்வு நிலை லிகிதர், கண்டாவளை உதவி அரச அதிபர் பணி மனை), உஷாராணி (ஆசிரியை, புனித அந்தோனியார் பாடசாலை, முரசுமோட்டை) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சுபதர்ஷனின் (லண்டன்) அன்புச் சகோதரனும், நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற இன்பலிங்கம் (ஓய்வுநிலை கிராம அலுவலர், சுருவில்) மற்றும் மகேஸ்வரி (பேபி) தம்பதியரின் அன்பு மருமகனும், விஜிதா- கண்ணதாசன், வினோதன், வித்தியா-வேங்கைமைந்தன் (ஜேர்மனி), விதுர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேஸ்வரியின் (கனடா) பேரனும், காலஞ்சென்ற சுந்தரரேஸ்வரன் மற்றும் நந்தகுமார் (கனடா), காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் மகேந்திரன், சிவகுமார் (கனடா), முரளிதரன் (கனடா) ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் ஜீவராணி (மலேசியா), சியாமளா (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12. 2015) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 1ஆம் கட்டை பரந்தன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் கட்டை, முரசுமோட்டை, கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 50 மணித்தியாலயம் வலைப்பயிற்சி; கின்னஸ் சாதனை படைத்த வீரர்

இந்தியாவின் உள்ளூர் கிரிக்கெட் வீரரான விராக் மேர் தொடர்ந்து 50 மணி நேரம் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
கடந்த 22ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் தனது பயிற்சியை ஆரம்பித்த விராக் மேர், இடைவிடாமல் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு கடந்த 24ஆம் திகதி காலை 9.30 மணி வரை துடுப்பெடுத்தாடினார். 48 மணி நேரம் பயிற்சி செய்த அவர் கூடுதலாக 2 மணி நேரம் பயிற்சி செய்து பயிற்சிக்காலத்தை 50 மணி நேரமாக நீடித்துள்ளார். ஐந்து மணி நேரம் இடைவிடாத பயிற்சிக்கிடையில் 25 நிமிடங்கள் ஓய்வு எடுத்துள்ளார். மொத்தமாக அவர் 50 மணி நேரம், ஐந்து நிமிடங்கள், 51 வினாடிகள் பயிற்சி செய்து 2 ஆயிரத்து 447 பந்துப்பரிமாற்றங்களைச் சந்தித்துள்ளார். (ம)





# இங்கிலாந்து சுமாரான ஆரம்பம் வேகத்தில் ஸ்ரெயின் மிரட்டல்

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் இங்கிலாந்து 179-4 என்ற நிலையில் உள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய ஆரம்ப வீரர்களாக அலிஸ்டர் குக்குடன் இணைந்தார் ஹேல்ஸ். இன்னும் 20 இலக்குகளை வீழ்த்தினால் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையை ஸ்ரெயின் பெற இருப்பதால் அவரது பந்துப்பரிமாற்றத்தில் ரசிகர்களின் ஆர்ப்பரிப்புக்கள் தாராளமாகவே இருக்கத்தான் செய்தன. ஓட்டங்களைப் பெறாத நிலையில் அலிஸ்டரை வீழ்த்தினார் ஸ்ரெயின். சக ஆரம்ப வீரரான ஹேல்ஸிம் ஸ்ரெயினிடம் சிக்கினார். தற்பொழுது இங்கிலாந்து 12-2. சீரான சராசரியில் சென்றுகொண்டிருந்த ரூட், பியட்டின் பந்தில் எல்.பி.டபிள்யு. ஆனார். ஹொம்டன் - ரெய்லர் இணைய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இங்கிலாந்து பலம்பெற்றது. 70 ஓட்டங்களுடன் ஸ்ரெயினிடம் வீழ்ந்தார் ரெய்லர். அவ்வப்பொழுது மழை குறுக்கிட முதலாம் நாளில் 65 பந்துப்பரிமாற்றங்களையே வீச முடிந்தது. நாள் முடிவில் இங்கிலாந்து 179-4 என்றுள்ளது. ஹொம்டன் 63 ஓட்டங்களுடனும் ஸ்ரோக்ஸ் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஸ்ரெயின் 3 இலக்குகளையும் பியட் ஓர் இலக்கையும் வீழ்த்தியுள்ளனர். (ம)

## யுனைரெட்டிலிருந்து ரூனே நீக்கம்

மான்செஸ்டர் யுனைரெட் அணியில் இருந்து ரூனே நீக்கப்பட்டுள்ளார்.
இங்கிலாந்து அணியின் முன்னணிக் கால்பந்து வீரர் வெயின் ரூனே இங்கிலாந்தின் முக்கிய கழகமான மான்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்காக விளை யாடி வருகிறார். கடந்த சில மாதங்களாக அவரது ஆட்டம், சொல்லிக்கொள்ளும் அளவிற்கு இல்லை. ஜூன், ஜூலை மாதங்களில் இவர் மீது யுனைற்ரெட் நிர்வாகம் வெளிப்படையாக அதிருப்தி தெரிவித்திருந்தது. கழகத்தின் இயக்குநர் ரூனே தனது பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். ஆனால் நடைபெற்று வரும் இங்கிலாந்து பிரீமியர் லீக்கிலும் அவரது செயற்பாட்டில் திருப்தி இல்லாததால் ரூனே அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அன்டர் ஹெரேரா சேர்க்கப்பட்டுள்ளார். (ம)



## ஆஸியின் சார்பாக 1000 சதங்கள்

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் மெல்பேர்ணில் ஆரம்ப மாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலியா சார்பாக பேர்ண்ஸ், கவாயா, சிமித், வோர்ஸ் நால்வரும் சதம் அடித்தனர். இதன் மூலம் பல்வேறு சாதனைகளை இவர்கள் படைத்துள்ளனர்.
ஆஸ்திரேலிய அணியின் முதல் மூன்று வீரர்கள் இந்த ஆண்டில் மட்டும் 14 சதங்களை விளாசியுள்ளனர். இதற்கு முன் 2003 ஆம் ஆண்டிலும் இதேபோல் 14 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. ஆனால், எந்த வருடமும் இல்லாத அளவிற்கு இந்த வருடம் 4020 ஓட்டங்களைக் குவித்துள்ளனர். கவாஜா கடைசி நான்கு இன்னிங்சில் 448 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சராசரி 149.33 ஆகும். அதற்கு முன்னர் 17 இன்னிங்சில் 377 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். சராசரி 25.13 ஆகும்.
இந்த இரண்டு சதங்கள் மூலம் ஆஸ்திரேலியா சர்வதேச ஆட்டங்களில் 1000 சதங்கள் அடித்த முதல் அணி என்ற பெருமையைப் பெற்றுள்ளது. 1000 ஆவது சதத்தை அடித்தவர் கவாயா. இங்கிலாந்து 964 சதங்களும், இந்தியா 688 சதங்களும் அடித்து முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. (ம)

## லாராவை வீழ்த்த முரளி திட்டம்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 28ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் ரி-20 தொடர் (ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்கும் தொடர்) நடைபெறவுள்ளது. இதில் டெஸ்டில் அதிக இலக்குகளை வீழ்த்திய முத்தையா முரளிதரன், டெஸ்டில் ஒரு இன்னிங்சில் அதிகபட்ச ஓட்டங்களை அடித்த லாரா உள்ளிட்ட பல முன்னணி வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.
800 இலக்குகளை வீழ்த்திய முத்தையா முரளிதரன் லாராவிற்கு எதிராக 8 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். ஆனால், நான்கு முறைதான் அவரை வீழ்த்தியுள்ளார். மட்டுமல்லாது 20 ஒருநாள் ஆட்டங்களில் ஒருமுறை தான் அவரை வீழ்த்தியுள்ளார். இதனால் லாராவைக் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் முரளிதரனுக்கு உள்ளது. இந்த ஏக்கத்தை போக்கும் வகையில் மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் தொடரில் அவரது விக்கெட்டை வீழ்த்திக் காட்டுவேன் என்று முரளிதரன் கூறியுள்ளார். இந்தத் தொடரில் முரளிதரன் ஜெமினி அரேபியன்ஸ் அணிக்குத் தலைவராகவும்;, லாராலியோ லயன்ஸ் அணிக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

# டெஸ்ட்டில் டோனி நீடித்திருக்கலாம் என்று தெரிவிக்கிறார் கபில் தேவ்

டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து டோனி விலகியது அவருக்குப் பாதிப்பான ஒன்று எனத் தெரிவித்துள்ள கபில்தேவ், அவர் அணியில் நீடித்திருந்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
ஒரு நாள் ஆட்டங்களுக்கும் ரி-20 ஆட்டங்களுக்கும் தலைவராக இருக்கும் டோனி குறித்து சமீபகாலமாக விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் இதுகுறித்து கூறியதாவது- மிகச்சிறந்த வீரரான டோனிக்கு, தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையின் கால அவகாசம் பற்றித் தெரியும். ஆனால், டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து அவர் விலகியதால், அது எதிர்கால அணித்தலைவர் பதவிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், மே[illegible] அவருக்குக் கடினமான ஒன்றாகும். ஏனெனில் அவர் நீண்ட



இளைவெளிக்குப் பின்னரே களமிறங்கிக் கொண்டிருக்கிறார். 2016 ஆம் ஆண்டின் ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் டோனியின் உடல் தகுதியே அவரது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 28
ஊரெழுறோயல்விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென்.ஜோசப் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. (ம-23)

## வார்த்தை மோதலால் தன்னை வீழ்த்த முடியாது என்கிறார் தவான்

மைதானத்தில் இருக்கும் பொழுது எளிதில் தன்னை உணர்வுரீதியாகக்காயப்படுத்தி விடமுடியாது என்று குறிப்பிடும் தவான், கிரிக்கெட் தனக்கு சகிப்புத் தன்மையைக் கற்றுக் கொடுத்துள்ளதாகவும் ஆஸ்திரேலிய வீரர்களின் வார்த்தைப் பிரயோகங்கள் தன்னை ஒன்றும் செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலிய அணியை அடுத்த மாதம் எதிர்கொள்கிறது இந்தியா. இந்தத் தொடரில் வார்த்தை மோதல்களுக்கு பஞ்சம் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸிக்கு எதிராக வார்த்தை மோதலில் ஈடுபடுவீர்களா என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே தவான் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையிலேயே ஆடுகளத்தில் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்றால் எளிதில் உணர்வுரீதியாகக் காயப்படாமல் இருப்பது அவசியம். என்னுடைய எதிர்மறை ஆற்றல்கள் வெளியேற நான் அனுமதிக்க வேண்டும். கிரிக்கெட் சகிப்புத் தன்மையைக் கற்றுக் கொடுத்திருக்கிறது என்பது உண்மை தான், நான் அதைக் கற்றுக் கொண்டு விட்டேன். வார்த்தை மோதலில் ஆஸ்திரேலியா என்னை ஆட்கொள்ள முடியாது- என்றார். (ம)



# மீண்டும் திணறுகிறது தீவுகள் வெற்றி முனைப்பில் ஆஸி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினத்தில் 551-3 என்ற நிலையில் ஆஸ்திரேலியா தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் தீவுகள் நாள் முடிவில் 91-6 என்ற நிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தீவுகளின் தலைவரான கோல்டரிடம் ஆஸியை வீழ்த்தக்கூடிய திட்டங்கள் எதுவும் இல்லை. இதை சாதகமாகப் பயன்படுத்திய ஆஸ்திரேலியா முதலாம் நாள் முடிவில் 345-3 என்ற நிலையில் இருந் தது. சிமித் 32 ஓட்டங்களுடனும் வோக்ஸ் 10 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக் காக களமிறங்கினர். முதல் நாளின் ஆட் டத்தை விட சிறிது அதிக மான சராசரியில் இருவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒருசில பந்துப்பரிமாற்றத்தில் அரைச்சதம் கடந்தார் சிமித். வோக்ஸிம் விடுவதாக இல்லை. களத்தடுப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூட கோல்டர் எத்தனிக்கவில்லை. இதுவே அந்த அணிக்கு மேலும் பின்னடைவாக அமைந்தது. இருவரும் சதம் கடக்க 500 ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. 551-3 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் சிமித். வோக்ஸ் 106 ஓட்டங்களுடனும் சிமித் 134 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக ரெய்லர் இரு இலக்குகளையும் பிரீத்வைட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு பிரீத்வைட் - சண்டிகா இணை சுமார் தொடக்கம் கொடுத்தது. இருப்பினும் நீண்டநேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் லையன். சண்டிகாவுடன் பிராவோ இணைய மேலதிக இலக்கு இழப்பில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது தீவுகள். ஆனால் அதே ஓட்டத்தில் சண்டிகாவின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. பிராவோ ஓர் முனையில் நிலைத்து நிற்க சாமுவேல்ஸ், ரம்டின், கோல்டர் மூவரும் ஓட்டங்களைப் பெறாமலே வீழ்ந்தனர். நாள் முடிவில் தீவுகள் 91-6 என்ற நிலையில் உள்ளது. பிராவோ 13 ஓட்டங்களுடனும் பிரீத்வைட் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் ஆஸியின் சார்பாக லையன், பற்றின்சன், சிடில் மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம)

# ஆமிருடன் முகாமில் பயிற்சியில் ஈடுபட ஹபீஸ், அசார் சம்மதம் தெரிவிப்பு

ஆமிருடன் இணைந்து முகாமில் பயிற்சியில் ஈடுபட ஹபீஸ், அசார் அலி இருவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.
பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ரி-20 மற்றும் 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் வீரர்களின் உடல் தகுதிப் பயிற்சி முகாம் கடந்த 21ஆம் திகதி தொடங்கியது. இந்த பயிற்சி முகாமுக்கு அறிவிக்கப்பட்ட 26 வீரர்களில், சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காகத் தடை விதிக்கப்பட்ட ஆமிரும் ஒருவர். அவரின் தடைக்காலம் முடிந்ததாலும் அவ



ரின் வயதைக் கருத்தில் கொண்டும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவரை அணியில் உள்வாங்க முயற்சி செய்து வருகிறது.
முகமது ஆமிர் பயிற்சி முகாமில் இடம் பெற்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹபீஸ், ஒருநாள் ஆட்டங்களின் தலைவரான அசார் அலி இருவரும் பயிற்சி முகாமைப் புறக்கணித்தனர். பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அழைப்பையும் அவர்கள் புறக்கணித்ததால் இருவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள இருவரும் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



யாழ். சதுரங்க முற்றம் நடத்தும் இரத்தினம் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான சதுரங்கத் தொடர் நேற்று முன்தினம் சனிக்கிழமை நல்லூர் பவன் விருந்தினர் விடுதியில் ஆரம்பமாகியது. தொடரை யாழ். பல்கலைக்கழக ஆங்கில பாட விரிவுரையாளர் ரி.அருணகிரிநாதன் ஆரம்பித்து வைத்தார். (ம-422)

# ரூர் டி பிரான்ஸ் சைக்கிளோட்டப் போட்டி 2017ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறும்

2017ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ரூர் டி பிரான்ஸ் சைக்கிளோட்டப் போட்டியை நடத்துவதற்கு, ஜேர்மனியின் டஸெல்டோர்ப் நகரம் தெரிவுசெய்யப்பட்டுள்ள து. இந்தத் தொடரை நடத்துவதற்கான வாய்ப்பை, இங்கிலாந்து நிராகரித்ததைத் தொடர்ந்தே, ஜேர்மனுக்கு இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தொடரை நடத்துவதற்கு, 35 மில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ் செலவாகுமென மதிப்பிடப்பட்ட நிலையிலேயே இங்கிலாந்து நிராகரித்திருந்தது. 104ஆவது தடவையாக இடம்பெறவுள்ள இத்தொடரின் முழுமையான விவரங்கள் அடுத்தாண்டு ஜனவரி 14 ஆம் திகதி வெளியிடப்படுமென அறிவிக்கப்படுகிறது. அடுத்தாண்டு இடம்பெறவுள்ள போட்டிகள், பிரான்ஸிலேயே இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட கராத்தே தொடர் நவீல்ட் மாணவிக்கு தங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.28
இலங்கை கராத்தே சங்கம் நடத்திய நடப்பு வருடத்துக் கான தேசிய மட்ட கராத்தே தொடர் கொழும்பு மகரகம இளைஞர்சேவைகள்மன்றத்தில் இடம்பெற்றது. இதில் 11வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவி ஜே.ஜிலோத்தனா தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ம-23)



# இந்தியா பாக். தொடர் நடைபெறுவதற்கு வாய்ப்பு



இந்தியப் பிரதமர் மோடியின் திடீர் பாகிஸ்தான் பயணத்தையடுத்து இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான தொடர் நடக்க வாய்ப்புள்ளதாக அறியவருகிறது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையில் நடத்தலாம் என இறுதியாக முடிவு செய்யப்பட்டது. பாகிஸ்தான் அரசு இதற்கு அனுமதி வழங்கிவிட்ட நிலையில், இந்திய அரசிடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை. எதிர்வரும் ஜனவரி மாதம் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செல்வதால், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை நடத்த வாய்ப்பில்லாமல் போனது.

இந்த நிலையில் ரஷ்யா சென்ற மோடி, திடீரென்று பாகிஸ்தான் சென்று நவாஸ் செரீப்பை சந்தித்தார். இதனால் இரு அணிகளுக்கு இடையேயான தொடர் நடக்கும் எனத் தெரிகிறது. அடுத்த வருடம் யூன் மாதம் இந்தத் தொடர் நடக்கலாம். (ம)

# நியூசிலாந்து - இலங்கை இரண்டாவது ஆட்டம் இன்று



நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் தொடரில் தனது இருப்பை இலங்கை உறுதிப்படுத்த முடியும். மாறாக நியூசிலாந்து வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்ற இறுதி மூன்று ஆட்டங்களையும் வெற்றிபெறவேண்டிய இக்கட்டான நிலை இலங்கைக்கு ஏற்படும். (ம)

# பந்துவீச்சாளர்களுக்கு யுவராஜ் கெட்ட கனவு



இந்திய அணியின் அதிரடி வீரரான யுவராஜ் எதிரணியின் பந்துவீச்சாளர்களுக்கு ஒரு கெட்ட கனவு என்று முன்னாள் அணித் தலைவர் ரவி சாஸ்திரி வர்ணித்துள்ளார்.

மோசமான திறன் காரணமாக இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட யுவராஜ், ஜனவரியில் நடைபெறவுள்ள இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடருக்கான இந்திய அணியில் இடம்பெற்றுள்ளார். யுவராஜின் திரும்பல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே சாஸ்திரி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் 'யுவராஜின் கடின உழைப்புக்கு கிடைத்த பரிசு இது. அனுபவ வீரர்கள் "அணியில் இருக்கும் போது அது மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வரும். யுவராஜ், எதிரணியின் பந்துவீச்சாளர்களை பதம் பார்க்கக் கூடியவர். அவர் ஒரு சிறந்த வெற்றியாளர். ஆடுகளத்தில் அவர் நிலைத்து நின்றுவிட்டால் அவரை விட ஆபத்தான வீரர் யாரும் இருக்க முடியாது. மொத்தத்தில் அவர் பந்துவீச்சாளர்களுக்கு கெட்ட கனவு' என்றுள்ளார். (ம)

A/L வரலாறு
M.பத்மன் M.A Chistory
அனைத்துப் பிரிவுகளுக்குமான வகுப்புகள் நடைபெறுகின்றன.
கற்பிக்கும் இடம்: D.M.I யாழ்ப்பாணம்.

Personal Class
SCIENCE
Contact T.P. 077 6679 544

FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
Embassy International Diploma in French
FRANCE CANADA SWISS BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007)
0779 789 456 / 021 221 7781
Bus நிலையம் → FLCentre

அலிசனின் ஸ்மார்ட் கல்வி உலகுடன் இணைவோம்!
077 986 6409 /021 300 3800

# ஹர்பஜன் பந்துவீச்சு முறையானது அல்ல; டேரல்ஹர் மற்றுமொரு சர்ச்சைக் கருத்து

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த முன்னாள் நடுவர் டேரல்ஹர், ஹர்பஜன் பந்துவீச்சு முறையற்ற விதத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

1992ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை 78 டெஸ்ட் ஆட்டங்களுக்கு டேரல் ஹர் நடுவராக பணியாற்றியவர். இவர் கிரிக்கெட்டில் பல பரபரப்புக்களையும் சர்ச்சைகளையும் உருவாக்கியவர். 1995ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி மெல்போர்ணில் நடந்த ஆஸ்திரேலியா இலங்கை டெஸ்ட் தொடரில் முரளிதரன் முறைகேடாக பந்துவீசுவதாக 7 பந்துகளுக்கு முறையற்ற பந்துவீச்சு (நோ போல்) எனத் தீர்ப்பளித்தார். இதனால் சர்ச்சை எழுந்தது. 2008ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற அவர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் இந்திய வீரர் ஹர்பஜன்சிங் முறைகேடாக பந்து வீசுவதாக தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் - நான் முறைகேடான பந்துவீச்சுக்கு எதிராக இருந்துள்ளேன். விளையாட்டை காப்பாற்ற கடுமையாக போராடினேன். இந்திய வீரர் ஹர்பஜன்சிங், முறைகேடாகத்தான் பந்துவீசுகிறார். துஸ்ரா பந்துவீச்சில் மட்டும் முறைகேடாக வீசவில்லை. சாதாரணமாக வீசும் போதும் கூட முறைகேடாக தான் இருக்கிறது. இதுபோன்று பந்து வீசுபவர்கள் அதிகம் ஆசிய கண்டத்தில் இருந்து தான் வருகிறார்கள். அதுபோல் பந்துவீச ஊக்குவிக்கப்படுகிறார்கள். நடுவர்களின் பணி கிரிக்கெட் விதிகளை காப்பதே. யாராவது முறைகேடாக பந்துவீசினால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நடுவர்களின்



கண்கள் கட்டப்பட்டால் இந்த பிரச்சினை அப்படியே தான் இருக்கும். தீர்வு கிடையாது.' என்றார். முரளியின்பந்துவீச்சுமுறையற்ற விதத்தில் இருப்பதாக கருத்துத் தெரிவித்தவர்களில் பிரதானமானவர் இவரே. (ம)

# வீதி ஓட்ட நிகழ்வு

மன்னார், டிசெ. 28

மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் இரு பாலாருக்குமான வீதி ஓட்ட நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்டச் செயலகத்தின் முன்பாக காலை 6 மணிக்கு நிகழ்வு நடைபெறும். (ம)

# ஜோகோவிக்கை வீழ்த்திய பெடரர்



பரிசில்கள் மூலம் அதிகம் சம்பாதித்த ரெனிஸ் வீரர்களின் பட்டியலில் ஜோகோவிக்கை வீழ்த்தி முதலிடத்தைப் பிடித்துள்ளார் பெடரர்.

பெடரர் இதுவரை பரிசில்கள் மூலம் 97.3 மில்லியன் டொலர் பணம் சம்பாதித்துள்ளார். இவர் கடந்த 2012ஆம் ஆண்டிற்குப் பிறகு இன்னும் சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களை வென்றதில்லை. இருப்பினும் நாடுகளின் தொடர்களில் வெற்றிபெற்றதன் மூலம் இந்த பெறுமதியை எட்டியுள்ளார். இந்த ஆண்டு மூன்று சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களை வென்று தொடர்ந்து முதலிடத்தில் இருக்கும் செர்பியாவின் ஜோகோவிக், 94 மில்லியன் டொலர்கள் சம்பாதித்து இரண்டாம் இடத்தில் உள்ளார். நடால் 75 மில்லியன் டொலரும், ஆண்டி முர்ரே 42.5 மில்லியன் டொலரும் பெற்றுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.